# கலங்கரை



பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், காரைநகர்
2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

## பிரதேச மலர்-01

பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம்

காரைநகர்

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : "கலங்கரை"

வெளியீடு : பிரதேச செயலகம்
காரைநகர்

பதிப்பு : 29.12.2014

தொகுப்பாசிரியர் : ம.மேர்சி சுஜந்தினி

பக்கங்கள் : 102

பிரதிகள் : 500

பதிப்பகம் : ஈஸ்வா டியிற்றல் அச்சகம்,
இல:172/174, இராமநாதன் வீதி
யாழ்ப்பாணம்

Title : "Kalankarai"

Published by : Divisional Secretariat
Karainagar

In Published : 29.12.2014


Compile : M.Mercy Sujanthini

Pages : 102

No.of copies : 500

Printers : Eeswaa Digital Press,
No:172/174, Ramanathan Road
Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தமிழ்த்தாய் வணக்கம்**

(பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.....

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயலமறந்து வாழ்த்துதுமே.

"மனோன்மணியம்"

பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ் கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே (வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்றிட
சுடர்க தமிழ் நாடே (வாழ்க)

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் பிரதேச கீதம்

வாழிய வாழிய வாழியவே — காரை
நகர் என்றும் வளமுடன் வாழியவே!
சூழுக இன்பமும், வெற்றியுமே — மாந்தர்
சொர்க்கம் இம் மண்ணென வாழ்ந்திடவே!

ஈழத்துச் சிதம்பர ஆலயமும் – வாழும்
எண்ணற்ற கோவிலின் அதிசயமும்
கோவளக் கலங்கரை, கசூரினாவும் – சூழ்ந்து
கொழித்திட அலையிடை தவழும் நிலம்!

பெருவயல், கடல்படு திரவியங்கள் – தெங்கு,
பனைவளம், வாணிகம், கைத்தொழில் வகைகள்
பரந்து சென்றுழைப்பவர் இடும் முதல்கள் – காரைப்
பதிதனை வளர்த்திடும் பெரும்பலங்கள்!

கலைஞர்கள், கவிஞர்கள், இசைநிபுணர் – ஞானக்
கல்வியில் சிறந்தவர், உடல் வினைஞர்
தமிழ்ச் சைவந் தளைத்திடத் தமை விதைத்தோர் – தோன்றித்
தனித்துவம், தனிப் புகழ், பொறிக்கும் நகர்

தருமத்தின் விழுமியம் செழிக்கும் பதி — செல்வம்
தடையின்றிப் பெருகிடும் எளிமை மடி!
குறைகளைந் தெழுந்து இங்கொரு உயர்ச்சி – கண்டு .. எம்
கொடி அசைத்து அடைவோம் நல் அபிவிருத்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரதேசக் கொடியினுள் உள்ளடக்கப்பட்ட அடையாளங்கள் பிரதிபலிக்கும் விளக்கம்

01. வெளிச்சவீடு:- எமது பிரதேசத்தின் தனித்துவம் காட்டப்பட்டுள்ள கோவளம் வெளிச்ச வீடு 1916ம் ஆண்டு கட்டப்பட்டதுடன் இலங்கையின் பெரிய வெளிச்ச வீடுகளுள் ஒன்றாகும்.

02. பனை:- எமது வட பிரதேசத்தையும் எமது பகுதியில் பிரதானஇயற்கை வளம் ஒன்றினையும் குறிக்கும்.

03. நெல்:- எமது பிரதேசத்தின் பிரதான தொழிலான விவசாயத்தினைக் குறிக்கும்.

04. உடுக்கு, மேளம், நாதஸ்வரம்:- எமது பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளையும் இன்றும் போற்றப்படும் கலைகளையும் குறிக்கும்.

05. மீன்:- எமது பிரதேசத்தின் மேலுமொரு முக்கிய தொழிலான கடற்றொழிலைக் குறிக்கும்.

06. சவுக்கு:- கசூரினா கடற்கரையை குறிக்கும்.

07. கொடி நிறம் (நீலம்):-எமது பிரதேசம் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டதைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் கலாசாரப் பேரவை நிர்வாக சபை விபரம்

தலைவர்: தே.பாபு (பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்)

செயலாளர்: ம.மேர்சி சுஜந்தினி( கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், காரைநகர்)

உபதலைவர்: மூ.தேவதாசன்

பொருளாளர்: வே.குமாரசுவாமி

## செயற்குழு உறுப்பினர்:

01..மு.மயில்வாகனம்

02.க. திருச்செல்வம்

03.தி.யோகராஜா

04.லி.அனிருத்தன்

05.மு.அருணாசலம்

06.ந.தேவராணி

07.வே.நடராஜா

08.செ.கந்தசாமி

09.தி.கலைக்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தை சேர்ந்த ஆயிரம் பிறை கண்ட முது பேரறிஞர் தத்துவ கலாநிதி சிவத்தமிழ் வித்தகர் பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள் வழங்கிய ஆசியுரை

காரைநகரில் கடந்த கால வரலாறுகளையும் ஆவணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இன்று காரைநகரில் தகவல் பொக்கிஷமாக "கலங்கரை" நூல் வெளி வருகின்றமை பாராட்டுதற்கு உரியது. இந்த நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகர் மண்ணில் பிறந்த பல அறிஞர்களும் அமைப்புக்களும் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. அதேபோன்று காரைநகரில் ஆன்மீகம் மற்றும் அறிவுப் பசியைப் போக்குவதற்காக 60 ற்கும் மேற்பட்ட ஆலயங்களை அமைத்ததுடன் 13 பாடசாலைகளை நிறுவி எமது முன்னோர் சமய சமூக பணிகளை முன்னெடுத்தனர்.

சுமார் 22 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் இணைந்திருந்த எமது காரைநகர் பிரதேசமானது இந்து கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த அமரர் தியாகராசா மகேஸ்வரனின் அதீத முயற்சியினால் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உருவாக்கப்பட்டு இன்று பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து காரைநகருக்கான கல்விக் கோட்டம், கமநல சேவை நிலையம், உள்ளிட்ட நிர்வாக மையங்களும் தனியாக உருவாக்கப்பட்டு காரைநகர் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருகின்றன.

அந்த வகையில் இன்று காரைநகர் பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கி வரும் பிரதேச செயலகமானது கலாசார பெருவிழாவினை நடாத்து வதும் "கலங்கரை" நூல் வெளியிடுவதும் பாராட்டத்தக்கது. இந்த நூல் புதுப் பொலிவுடன் மலர எனது ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறி அமைகின்றேன்.

**கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்**
**காரைநகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்திலுள்ள தீவகப் பிரதேசங்களில் ஒன்றாகிய காரைநகர் பிரதேசத்தின் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

காரை மண்ணின் பாரம்பரியங்கள் தனித்தன்மை வாய்ந்தவையாக அமைந்துள்ளது. "ஈழத்துச் சிதம்பரம்" என எல்லா இந்து மக்களினாலும் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவில் கம்பீரமாகக் காட்சி அளிப்பது சிறப்பம்சமாகும். இதைவிட சுற்றுப்புறமெங்கும் ஏனைய ஆலயங்கள் அமைந்து மக்களுக்கு காட்சி அளித்து அருள்பாலித்திடவும் "கோவளம்" வெளிச்சவீடு கலங்கரை விளக்காய் திகழ்ந்து வழிகாட்டுகின்ற கடலினால் சூழப்பட்ட பிரதேசமாக அமையப் பெற்றுள்ளதென்பது காரைநகரின் வரலாறு ஆகும். கலை, பண்பாடு, பாரம்பரியங்கள், இயற்கைவளம், நிறுவனங்கள் போன்றவற்றினை ஆவணப்படுத்தும் கன்னி முயற்சியாக வெளிவரும் பிரதேச மலரானது இப்பிரதேசத்தின் இன்றையகாலச் செயற்பாடுகளையும் நிகழ்கால சந்ததியினர் மட்டுமன்றி எதிர்கால சந்ததியினரும் அறியக்கூடியதான பொக்கிஷமாக அமையும் என எண்ணுகின்றேன்.

காரைமண் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் போன்றவற்றுடன் ஆன்மீகம், கலை, கலாசாரம், பாரம்பரியங்கள், கல்வி, ஒழுக்கம், விழுமியங்களில் தலைத்தோங்கி சிறப்புற்றிருக்கும். இவை போன்ற ஆவணப் படுத்தல் முயற்சிகள் மென்மேலும் வளர்ந்திட வேண்டுமெனவும் பிரதேச மலர் இவ்வாறு வெளியிடப்படுவதற்கும் அகமகிழ்ந்து வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**யாழ் மாவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் காரைநகர் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன்.

இம்மலர் காரைநகர் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் நம்பிக்கைகளைத் தாங்கி வெளிவருவதுடன் சான்றுபடுத்தக்கூடிய வரலாற்று ஆவணமாக திகழும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

ஒரு மனிதனின் கருவறையிலிருந்து கல்லறை வரை சேவையாற்றக் கூடிய பிரதேச செயலக கட்டமைப்பின் ஊடாக சமூகத்தின் கற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதுடன் அவர்களின் செயற்பாடு களிற்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாடுள்ளது. பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவு களையும், சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கைய ளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபி விருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம்மலர் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்பதுடன் இச் செயற்பாட்டினை முன் னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர், மற்றும் அலு வலர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சத்தியசீலன்**

**செயலாளர்,**

**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை**

**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**

**வடமாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்பு மிக்க காரைநகர் பிரதேசத்தின் தொன்மை தெரிந்திடவும் பண்பாட்டையும், பாரம்பரியத்தையம் அடையாளப்படுத்தவும் காரைநகர் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் "கலங்கரை" பிரதேச மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பண்பாட்டின் அடையாளங்களான வழிபாட்டுத் தலங்களால் நிறைந்த பிரதேசம் காரைநகர். பிரதேசத்தின் மூலைமுடுக்குகள் தோறும் காணப்படும் ஆலயங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்தவாறான மண்டபங்கள், ஆச்சிரமங்கள் இவற்றிற்கு சான்று பகர்கின்றன.

அத்துடன் தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளான காவடி, கரகம், புரவிநடனம், மயில் நடனம் மற்றும் இசை நாடகம், நாட்டுக் கூத்து உள்ளிட்ட கலை வடிவங்களை சந்ததிசந்ததியாக பேணிவரும் பாங்கினையும் காரைநகரில் இன்றும் காணமுடிகின்றது.

காரைநகர் பிரதேச செயலாளரும், அவருடன் இணைந்து பணியாற்றும் அலுவலர்களும், பிரதேச கலைஞர்களும் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் கலாசார விழவை நடாத்தி வருவதுடன் இவ்ஆண்டு முதல் பிரதேச மலர் ஒன்றினை வெளியிடவும் முன்வந்திருக்கின்றார்கள் என்ற செய்தி எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது.

காரைநகர் பிரதேச மலர் சிறப்பாக வெளி வரவும் சிறந்த ஆவணமாக விஸ்தரிக்கவும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. உஷா சுபலிங்கம்**
**பிரதிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகவுரை

காரைநகர் பிரதேச கலாசார பேரவையினால் வெளியிடப்படும் "கலங்கரை" பிரதேச மலரிற்கு முகவுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நாற்புறமும் கடல் சூழ்ந்து நகரின் மத்தியிலே வயல்கள், நன்னீர்த்தேக்கங்கள் என பாரம்பரிய கிராமிய மணம் கமழும் ஒரு பிரதேசமாக காரைநகர் விளங்குகின்றது. பாரம்பரிய தொழில்களுடன் வாணிபமும் காரைநகரை அடையாளப்படுத்தும் அம்சமாகும். ஆலயங்கள், வரலாற்றுத் தொல்லிடங்கள் என்பன இப்பிரதேசத்திற்கு மேலும் அணி சேர்க்கின்றன.

இந்நூலில் கூறப்பட்டிருக்கும் காரைநகரின் தொன்மை, மக்களின் வாழ்விடங்கள், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் என்பன இந்நூலைப் படிப்போரிடையே காரைநகரைப் பற்றிய அறிமுகத்தையும் புரிதலையும் வழங்கும் என நான் நம்புகிறேன். மேலும் வீதிகள் மற்றும் ஊர்களின் பெயர்கள் தோன்றிய காரணங்கள் புதிய சந்ததியினருக்கான அறிவு மற்றும் வரலாற்று ஆவணங்களாக பேணப்பட வேண்டியன.

மக்கள் தொன்று தொட்டு பயன்படுத்தி வந்த பாரம்பரியப் பொருட்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தொல்லியல் சான்றுகளும் இந்நூலின் கண் இடம்பெற்றுள்ளன. சமூக பண்பாட்டு நிறுவனங்கள், கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழில், வாழ்க்கை முறையைப் பற்றி அறியும் விதத் திலான விவரணக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. படைப்பாளிகளின் சிறு கதை, கவிதை மற்றும் ஏனைய விடயம் சார்ந்த கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.


இவ்விடயங்கள் காரைநகரைப் பற்றி அறிந்து கொள்ள ஆவலாயிருப்போர், காரைநகரைப்பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவிருப்போர், மாணவர்கள், எதிர்கால சந்ததியினர், ஆவணப்படுத்தலை மேற்கொள்வோர் முதலி யோருக்கு பெரும் பயன் அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. மேலும் இந்நூலாக்கத்தில் அனுசரணை வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினருக்கும் மற்றும் இம்மலர் வெளிவருவதற்கு பல வழி களிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

நன்றி

**தே. பாபு,**
**பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்**
**காரைநகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- தமிழ்தாய் வாழ்த்து
- பிரதேச கீதம்
- ஆசிச்செய்திகள்
- வாழ்த்துச் செய்தி
- முகவுரை

| | |
|---|---|
| 01. காரைநகர் பிரதேச செயலர் பிரிவு - ஒரு பார்வை | 01 |
| 02. காரைநகர் நேற்று இன்று நாளை | 05 |
| 03. குறிச்சிகளும் அவற்றின் பெயர் விளக்கமும் | 08 |
| 04. காரைநகரின் வள வரலாறும் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளும் | 19 |
| 05. காரைநகர் துறைமுகம் | 22 |
| 06. காரைநகர் மணிவாசகர் சபை | 25 |
| 07. காரைநகர் "சைவ மகாசபை" ஒரு வரலாற்று நோக்கு | 27 |
| 08.காரைநகர் விவசாய சம்மேளனங்கள் | 31 |
| 09.இளைஞர் கழகங்கள் | 33 |
| 10.காரைமத்தி மேம்பாட்டுக் கழகம் | 35 |
| 11.காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் பற்றிய தகவல் | 37 |
| 12.கிழவன்காடு கலாமன்றம் | 39 |
| 13.பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் பொருட்களும் அவற்றின் பயன்பாடுகளும் | 41 |
| 14.தற்போது நன்னீர் வளத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பும் -அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் | 53 |
| 15 காரைநகரும் கலையும் | 57 |
| 16. காரைநகரும் ஆலயங்களும் | 61 |
| 17. எது நிகர்? | 67 |
| 18.பிரதேச பாடல் | 68 |
| 19.வரலாற்றில் பனையின் சிறப்பும் பண்டைத்தமிழர் வாழ்வும் | 69 |
| 20. தண்ணீர் | 76 |
| 21. காரைநகரும் கல்வியும் | 80 |
| 22. காரைநகர் பிரதேச மக்களின் வாழ்வியல் சடங்கு முறைகளும் -கலாசார சம்பிரதாயங்களும் | 84 |
| 23. காரைநகர் வீதிகள் | 87 |
| 24. காரைநகரிலுள்ள கேணிகளும் குளங்களும் | 88 |
| 25.காரைநகரிலுள்ள நன்னீர்க் கிணறுகள் | 90 |
| 26.காரைநகர் அபிவிருத்திச் சபை ஒரு நோக்கு | 91 |
| 27.காரைநகர்ப்பாடசாலைகள் | 93 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. சாம்பசிவம்
முன்னாள் உதவி அரசாங்க அதிபர்,
காரைநகர்

# காரைநகர் பிரதேச செயலர் பிரிவு - ஒரு பார்வை

இந்து சமுத்திரத்தின் நித்திலமான இலங்கைத் திருநாட்டின் ஒன்பது மாகாணங்களில் தலையாகத் திகழ்வது வடமாகாணமாகும். இவ் வடமாகாணமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் மேற்கிலுள்ள ஏழு தீவுகளில் ஒன்றாகத் திகழ்வது காரைதீவு என்று முன்னர் அழைக்கப்பட்ட காரைநகர் ஆகும். இலங்கைத் தீவிலே ஆங்கிலேயருடைய சிவில் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ இயங்கிய யாழ்ப்பாண மாவட்டமானது 1947ம் ஆண்டளவில் டி.ஆர்.ஓ என்றழைக்கப்படும் காரியதிகாரி முறை கொண்டு வரப்பட்டு வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்நகரம், தீவகம் என ஐந்து நிர்வாகப்பிரிவுகளாக மணியகாரன் கந்தோர் என்ற பெயருடன் இயங்கி வந்தன. பின்பு தீவக வலயமானது நெடுந்தீவு, தீவகம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1969ல் காரியதிகாரி காரியாலயம் என்ற பெயர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை என மாற்றமடைந்து தீவகமானது தீவகம் வடக்கு, தீவகம் தெற்கு நெடுந்தீவு எனப் பிரிந்து மூன்று பிரிவுகளாக இயங்கி வந்தது.

காரைநகர்ப் பிரதேசமானது நிர்வாக ரீதியில் தீவகம் வடக்கு (ஊர்காவற்றுறை) உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உட்பட்டதாகக் காணப்பட்ட அதேவேளை தேர்தல் தொகுதி ரீதியில் வட்டுக்கோட்டைத் தொகுதியுடனும், நீதித்துறை சார்பில் ஊர்காவற்றுறை நீதி மன்றின் ஆளுகையின் கீழும், கல்வித்துறையினைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் பண்டத்தரிப்பு கோட்டத்துடன் இணைந்திருந்து பின்பு தீவக வலயத்துடனும், மீன்பிடித்துறையைப் பொறுத்தவரையில் சுழிபுரம் கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தின் கீழும், விவசாயம் சார் செயற்பாடுகள் தொல்புரம் கமநல சேவை அலுவலர் பிரிவின் கீழும் பொலிஸ் பிரிவு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துடனும் இணைக்கப்பட்டு செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. உள்ளூராட்சி நிறுவனமாகிய பிரதேசசபை ஊர்காவற்றுறையுடன் இணைக்கப்பட்டு செயற்பட்டு வந்தது 2003 ஆம் ஆண்டின் காரைநகர்ப் பிரதேசத்திற்கெனத் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும், கமநல சேவைகள் நிலையமும் பிரதேச சபையும் தோற்றம் பெற்றது.

கல்வியாலும் செல்வத்தாலும் பெருக வாழ்ந்த காரைநகர் மக்கள் முயற்சி உடையவர்கள். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்" மனம் உடையவர்கள். இவ்வாறான மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு பல்வேறு இடங்களிற்கு தமது காலத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்திற்காக பணத்தினையும் செலவழித்தது மட்டுமல்லாமல் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். காரைவாழ் மக்களின் நலனை கருத்திற் கொண்டு அவ்வப்போது அங்கிருந்த ஆர்வலர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் ஆகியோரின் விடாமுயற்சியின் காரணமாக காரைநகருக்கென தனியான ஒரு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினை 07-04-2003ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தனர். (படம் -01)

இவ் உதவி அரசாங்க அதிபர் பணிமனையானது அப்போதைய பிரதமர் அவர்களின் பணிப்புரைக்கமைவாக உள்நாட்டு அலுவலகள், மாகாணசபை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான உதவி அரசாங்க அதிபர் பணிமனை 07-04-2003ம் திகதி சின்னாலடியில் உள்ள தனியார் வீட்டில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அப்போது அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.செ.பத்மநாதன் அவர்களால் திரு.வே.சாம்பசிவம் என்பவர் முதலாவது உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டாா. அப்போது 9 நிரந்தர உத்தியோகத்தர்கள், 05 கிராம சேவையாளர்கள்,13 சமுர்த்தி அலுவலர்கள் அடங்கிய ஆளணியுடன் இயங்க ஆரம்பித்த உதவி அரசாங்க அதிபர் பணிமனையானது 2004ம் ஆண்டு வைகாசி மாதம் இரண்டாம் திகதி வலந்தலைச் சந்தியில் உள்ள இரண்டாவது உலக இந்துமாநாட்டு மண்டபத்திற்கு இடமாற்றப்பட்டு தொடர்ந்து இயங்கி வந்தது.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகமானது 2011ம் ஆண்டில் காரைநகர் பிரதேச செயலகம் என தரமுயர்த்தப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பிரதேச செயலக கட்டிடத்திற்கான அடிக்கல் 2006-04-03 திங்கட்கிழமை அன்று பதில் உதவி அரசாங்க அதிபர் திரு.க.ஶ்ரீமோகனன் தலைமையில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.கே.கணேஸ் அவர்களால் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேச செயலகத்தில்

| | | |
|---|---|---|
| 1. | திரு.வே.சாம்பசிவம் | 2003-04-07 – 2004-05-02 |
| 2. | செல்வி.க.பிரபா | 2004-05-02 – 2004-09-30 |
| 3. | திரு.க.ஶ்ரீமோகனன் (பதில்) | 2004-09-30 – 2006-05-30 |
| 4. | திரு.இ.த.ஜெயசீலன் | 2006-05-31 – 2012-01-04 |

ஆகியோா் உதவி அரசாங்க அதிபர்களாக இருந்து அளப்பரிய சேவைகளை மக்களிற்கு வழங்கியுள்ளாா்கள். யாழ்மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளுள காரைநகர்21.74 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும், இடப்பெயர்வுக்கு முன் ஏறத்தாழ 12000 குடும்பங்களைச் சேர்ந்த 25000 மக்களையும் கொண்டிருந்தது. தற்போது ஏறத்தாழ 3450 குடும்பங்களைச் சேர்ந்த 10500 மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 1881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களைச் சேர்ந்த 6807 அங்கத்தவர்கள் சமுர்த்தி நன்மையினைப் பெற்று வருகின்றனர்.

04.01.2012 முதல் காரைநகர் பிரதேச செயலகமானது பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு அவர்கள் தலைமையில் 126 உத்தியோகத்தர்களுடன் மக்களுக்கான சேவையினை ஆற்றுவதனைக் காணலாம். இப் பிரதேச செயலகமானது 2013ம் ஆண்டு செப்ரெம்பர் 18ம் திகதி முதல் தனக்கென காரை முன்றலாகிய வலந்தலையில் நிர்மானிக்கப்பட்ட நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இப்புதிய பிரதேச செயலக கட்டிடமானது கௌரவ பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் – கிராம அலுவலர் பிரிவுகளும் கிராமங்களும்

| இல | கிராம அலுவலர் பிரிவு | கிராமங்கள் எண்ணிக்கை | கிராமங்கள |
|---|---|---|---|
| 01 | J/40 காரைநகர் மேற்கு | 17 | குமிழங்குழி, பயிரிக்கூடல், சக்கலாவோடை, மணற்காடு, பத்தர்கேணி, புளியங்குளத்தடி, செம்பாடு, தங்கோடை, கள்ளித்தெரு, வாரிவளவு, கல்லந்தாழ்வு, சல்லை, மாதடை, நாகம்மா கோவிலடி, வேம்படி, சின்னாலடி, |
| 02 | J/41காரைநகர் வடமேற்கு | 09 | மணற்பிட்டி, வேதரடைப்பு, முல்லைப்பிலவு, ஊரிக்காடு, காவளம்,ஆயிலி,,நாவற்கண்டி, தங்கோடை, சாம்பலோடை |
| 03 | J/42காரைநகர் கிழக்கு | 08 | மொந்திபுலம், இடைப்பிட்டி, சத்திரந்தை,கரப்பிட்டியந்தனை, திக்கரை,காளிகோவிலடி, பிட்டியெல்லை, |
| 04 | J/43 காரைநகர் தென்கிழக்கு | 07 | நந்தாவில்,விளானை, கருவியாத்தனை, திக்கரைபாலாவோடை, வளுப்போடை |
| 05 | J/44 காரைநகர் தெற்கு | 08 | ஊரி,களபூமி,அம்புளா,மடத்துவளவு,துறைமுகம் ,பாலாவோடை ,தோப்புக்காடு ,சாந்திபுரம் , |
| 06 | J/45 காரைநகர் தென்மேற்கு | 11 | வாரிவளவு, கல்லந்தாழ்வு,கேசடை, வியாவில்,பலகாடு,முருகமூர்த்திகோவிலடி, நீலங்காடு, வேரக்குளத்தடி, கருங்காலி |
| 07 | J/46 காரைநகர் வடக்கு | 08 | வேதரடைப்பு, இலந்தச்சாலை, மல்லிகை, காரைநகர்வடக்கு, அல்வின்வீதி, சந்தம்புளியடி, சிதம்பராமூஉத்தி கோவிலடி, சக்கலாவோடை, தபாற்கந்தோரடி |
| 08 | J/47 காரைநகர் வடகிழக்கு | 16 | வலந்தலை,இலகடி,பெரியமணல், சடையாளி, சிவன் கோவிலடிமாப்பாணவூரி, மல்லிகை, நீலிப்பந்தனை,மருதடி, நடுத்தெரு, பண்டித்தாழ்வு, புதுவீதி (பிரிவு), கணக்கனாஉகண்டி, நெடுங்காடு,பழையகண்டி, |
| 09 | J/48 காரைநகர் மத்தி | 06 | ஆயிலி, சிவகாமி அம்மன் வீதி, விக்காவில், வெடியரசன் வீதி, ஆலடி,காமாட்சிஅம்மன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அருளையா நமசிவாயம்பிள்ளை
ஓய்வு நிலை ஆசிரியர் - காரைநகர்.

## காரைநகர் நேற்று இன்று நாளை

யாழ்மாவட்டம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம், ஆகிய ஐந்து வலயங்களை தன்னகத்தே கொண்டது. இதில் தீவகம் என்ற வலயத்தில் காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்ற ஸப்த தீவுகளை உள்ளடக்குகின்றன. பரப்பளவு ரீதியில் வேலணைத்தீவு 6401 ஹெக்டயர் அளவினதாக முதலாவதாகவும், நெடுந்தீவு 4717 ஹெக்டயர் விஸ்தீரணத்துடன் இரண்டாவதாகவும், காரைதீவு 2295 ஹெக்டயர் பரப்பளவுடன் மூன்றாவதாகவும் உள்ளது. மற்றைய தீவுகள் குறைந்தளவு பரப்பளவுடையன. ஏறத்தாழ செவ்வக அமைப்புள்ள காரைநகர் பிரதேசம் ஏழு கிலோமீற்றர் (07km) நீளத்தினையும் நான்கரை கிலோமீற்றர் (4 ½ km) அகலத்தினையும் உடையது.

இத்தீவின் கிழக்குப் பக்கமாக உள்ள கடல் கோடைகாலத்தில் வற்றும் பாங்கான பரவைக்கடல். அத்தோடு பொன்னாலைக்கும் காரைதீவுக்கும் இடையே நில மேடுகளும் உண்டு. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மக்கள் கால்நடையாகவே கடலின் ஊடாக பொன்னாலையை சென்றடைந்து வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை அடைந்தார்கள். காரைதீவின் வடக்கு, மேற்கு, தெற்கு கடல் ஆழமானது. தெற்கு கடல் இயற்கையாகவே கப்பற்துறைக்கு ஏற்றதாக இருந்ததால் அங்கு கப்பல் துறைமுகம் அமைந்துள்ளது. இக் கப்பற்துறைமுகத்தின் ஊடாக தென்இந்திய விளைபொருட்கள் இறக்குமதி ஆகின. இங்கிருந்து புகையிலை, சங்கு ஏற்றுமதியாகியுள்ளது. அத்தோடு இலங்கை பெருங்காடுகளில் பிடிக்கப்படும் யானைகள் ஆனையிறவு வழியாக கொண்டுவரப்பட்டு ஆனைப்பந்தி, ஆனைக்கோட்டை, சங்கானை ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டு சிங்களப்பாகர்களால் பயிற்சியளிக்கப்பட்டு காரைதீவு துறைமுகத்தில் உள்ள யானைப்பாலத்தின் ஊடாக கப்பல் மார்க்கமாக தென்இந்தியாவிற்கும், வங்காளத்திற்கும் ஏற்றுமதியாகி உள்ளதாக வரலாற்று பேராசிரியர் வி.சிவசாமி குறிப்பிடுகின்றார். இந்தியாவில் இருந்து காளைமாடுகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. போர்த்துக்கீசர் ஆட்சியில் ஊர்காவற்றுறைக்கும் காரைதீவிற்கும் இடையே HAMEN KIEL கடற்கோட்டை கட்டி கப்பல் போக்கு வரவினை கண்காணிப்பு செய்துள்ளனர். அத்தோடு வங்களா விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு உதவும் வகையில் காரைதீவின் வடமேற்கு கரையிலுள்ள கோவளப்பகுதியில் பெரிய வெளிச்சவீடு ஒன்றினையும் நிர்மானித்து இராக்காலத்தில் ஒளிரச்செய்தனர். ( படம்:02 ) காரைநகர் வடக்கு கடற்கரை பிரதேசமும் துறைமுகமாக பயன்படுத்தப்பட்டதாக ஈழத்துச் சிதம்பர புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

" ஆண்டிரண்டு நூற்றின் முன் காரை வட
பாகற்கரையை யடுத்த மைந்த
வேண்டுதுறை முகமொன்று விளங்கிற்றாற்
கோடிக்கரை விரும்பிச்செல்வோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டுகதி ரெழுமுன்பு கலமேறி
நண்பகலி லிறங்கு வார் தாம்
பூண்டபனை வணிகத்தாற் பலபண்ட
மாறியிங்குப் புரிவ ரன்றே"

இதன் கருத்து :-

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வடகாரைத் துறைமுகத்திலிருந்து வியாபாரக் கப்பல்கள் பனைமரங்களை ஏற்றிச்சென்று தென்இந்தியா கோடிக்கரையில் இறக்கிவிட்டு அங்கிருந்து அரிசி, நெல் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு வந்தன என்று முதியோர் கூறுவார். வெளிச்சவீடு இப்பகுதியிலமைய இதுவுமோர் காரணமாக கருதலாம்.

காரைதீவில் இருந்து பொன்னாலைக்கான தரைவழித் தொடர்பின் அவசியத்தை உணர்ந்த அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் துவைனந்துரையின் உத்தரவுக்கமைய 1869ம் ஆண்டு காரைதீவிற்கும் பொன்னாலைக்கும் இடையே தரைவழிப் பாதை போடப்பட்டு இணைக்கப்பட்டது. 1884ம் ஆண்டு வீசிய புயற்காற்றினால் கடல்நீர் பல இடங்களில் பாதையினை அரித்து சேதப்படுத்திவிட்டது. வீதி அமைப்பு பொறியியலாளராக பணியாற்றிய முதலியார் கு.ஆ ஆம்ஸ்றோங் கடல்நீர் தடையின்றி போய்வரக்கூடியதாக ஒன்பது பாலங்களையும் இரு முனைகளிலும் தொப்பிக்கட்டும் கட்டி சிறந்த தரைவழித் தொடர்பை ஏற்படுத்தி கொடுத்தார்கள். இதன் காரணமாக 1923.12.09 தொடக்கம் காரைதீவு அரசினரால் காரைநகர் என்று அழைக்கப்படலாயிற்று. இக்காலப்பகுதியில் வலந்தலையூடாக மேற்கு சுற்று வீதியும், தெற்கு வீதியுமாக இரண்டு பெரிய வீதிகள் அமைக்கப்பட்டன.

2011ம் ஆண்டில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கணேஸ் அவர்களின் வழிகாட்டல் உதவியுடன் காரைநகர் - பொன்னாலைப்பாலம் முப்பத்து நான்கு (34) அடியாக தெற்குப்புறமாக அகல்விக்கப்பட்டு வாகனங்கள் போவதற்கு ஒருவழியும் வருவதற்கு மறுவழியுமாக கருங்கல் கொண்டு சிறப்பாக அமைத்துள்ளார்கள்.

காரைநகர் - தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவில் ஆரம்பகாலம் தொட்டு இயங்கி வந்தது. இதில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, வேலணைத்தீவு, புங்குடுதீவு ஆகிய ஸப்த தீவுகளும் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தன.

1973ம் ஆண்டில் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த க.பொ.இரத்தினம் அவர்களது முயற்சியினால் தீவுப்பகுதி வடக்கு காரியாதிகாரி, தீவுப்பகுதி தெற்கு காரியாதிகாரி, நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவு என மூன்றாக நிர்வாகம் பிரிக்கப்பட்டது. காரைநகர், தீவுப்பகுதி வடக்கு காரியாதிகாரி பிரிவில் அடங்கியது. பின்னர் 07.04.2003ம் ஆண்டில் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளோடு தனியாக உருவாக்கப்பட்டது. தற்போது புதிய பிரதேச செயலகக் கட்டடம் அமைக்கப்பட்டுச் செயற்பட்டுவருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிச்சிகளும் அவற்றின் பெயர் விளக்கமும்

படம் 03 இல் காணப்படுவது காரைச்செடி ஆகும். இது பற்றையாக அன்றும் இன்றும் செழிப்பாக பல இடங்களில் வளர்ந்துள்ளது. நான்கு மீற்றர் (4m) உயரம் வரை வளரக் கூடியது. இலைகள் சிறியவை, முட்டை வடிவானவை. கோடை மாரி காலங்களுக்கு தாக்குப்பிடித்து வளரக்கூடிய கானல் பயிர். இக்காரைச்செடிகள் காரணமாகவும் நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ளமையாலும் காரைதீவு என்ற பெயர் ஏற்பட்டு பின்னர் காரைநகர் என நாமம் அரசினரால் மாற்றஞ் செய்யப்பட்டது.

அகத்தியர் குணவாகப்பாடல் ஒன்று காரைச்செடியின் மகிமையைப்பற்றி கூறுவது,

"காரை தழைக்குக் கடும் பித்தம் போம் புளியைச்
சோரப்பெய் தாக்கிச் சுவைத்தறி நீ"

காரை இலையைப்புளி சேர்த்துக் கறி சமைத்துண்ண இரத்தக்கடுப்பு - மூலக்கடுப்பு என்பன நீங்குமாம்.

வலம்தலை— வலம்தலை என்ற பெயரில் வலம் - தலை என்ற இரு சொற்கள் உள்ளன. வலம் என்றால் வலது பக்கம், செயல் ஊக்கம் என்பது பொருள். தவில் வாத்தியத்திலும் செயற்பாடு கூடிய பக்கத்தினை வலம்தலை என அழைப்பர். துறைமுகம் – களபூமி சார்ந்த இடங்களிலேயே வசித்த ஆதிக்குடி மக்களுக்கு வலதுகை பக்கம் வலம்தலை இருந்தமையால் வலம்தலை என அழைத்ததாக கருதலாம். காரைநகரில் வலம்தலை குறிச்சி பற்றிய தனிப்பாடல் ஒன்று உள்ளது.


பத்தெழுத்தில் முதலிரண்டும் மரமதாகும்
பகர் நாலோ டாறீறும் கவலையாகும்
நத்திடு மூன்றோடேழு மெட்டு நன்மை
நகர்ப்புறத்தில் மரமிருக்கும் நன்றாய்ப்பாரு
ஒத்தபடி ஈற்றிலே தலையைப்போடு
ஒவ்வொன்றாய் எடுத்தெடுத்து எனக்கேயோது
சத்தியமாய் வேறு இடம் போக வேண்டாம்
சரசரென மறு மொழியைத் தருவீரே.

| | | | |
|---|---|---|---|
| முதலிரண்டு மரம் | : | காரை | |
| நாலோடாற்று | : | கவல | 3 4 5 |
| மூன்றோடேழு மெட்டும் | : | நலம் | காரை நகர் |
| நகர்ப்புறத்தில் மரமிருக்கும் | : | காரைநகர் | 6 7 8 |
| ஈற்றிலே தலையைப்போடு | : | தலை | வலம் தலை |

இச் செய்யுள் காரைநகர் வலம்தலை பத்தெழுத்துக்களையுடையதென்பதாகும்.அக்காலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ப்படையணிகள் வலம்தலைஅணி, இடம்தலைஅணி பாடி வீடு அமைத்து தங்கிய இடமே வலம்தலை. இடம்தலை என்று இரண்டாம் விளக்கம் கூறப்படுகின்றது.




படம்:04 வலம்தலை இடம்தலை

இடந்தலை எனும் குறிச்சி கருங்காலி தொடக்கம் பலகாடு வரையும் உள்ள பிரதேசமாகும். முதியவர்கள் குறிப்பாக களபூமியில் வதிவோர் இன்றும் வலந்தலை இடந்தலை என்றே பேசிக்கொள்கிறார்கள்.

களபூமி – கடலை அடுத்துள்ள கற்பூமி என்றும், களம் - நெல் விளையும் தரை. நெற்காணி உள்ள பிரதேசம் என்றும் கொள்ளத்தக்கது.

பலகாடு / பலிகாடு } இங்கு மயானம் உள்ளமையினால் பலிகொடுத்த காடு என்று ஒரு சாராரும், பாழ்காடு→பலிகாடு என்று இன்னொரு சாராரும் பலவகையான காட்டு மரங்கள் இருக்கின்றமையால் பலகாடு என்றும் பற்பல காரணங்கள் கூறுகின்றனர். பலகாடு திரிபுற்று பலிகாடு தோன்றியிருக்கலாம்.

| | |
|---|---|
| நீலங்காடு | நீலன் + காடு |
| வடகாடு | வடக்கு + காடு |
| மணற்காடு | மணல் + காடு |
| நெடுங்காடு | நெடிய + காடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடிக்காடு அரசு+அடி+காடு

தோப்புக்காடு சோலையாக மரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ளமையால் தோப்புக்காடு எனவும் கூறப்பட்டது. இன்றும் மரங்கள் தோப்பாகக் காணலாம்.

கருங்காலி - கருங்காலி மரம் பெரியது. கடும் வைரமானது. இலைகள் நீண்ட முட்டை வடிவாக இருக்கும் கனி உண்ணத்தக்கது. பிசின் உள்ள மரம். அக்காலத்தில் கருங்காலி மரம் நின்ற படியால் மேற்படி பெயர் ஏற்பட்டதாக அங்கு வதிவோர் கூறுகின்றனர். இம்மரம் தற்போது எங்கும் அருகி வருகின்றது.

தங்கோடை - ஓடை என்பது நீர் வழிந்து செல்லும் பாதை. வெளியார் தங்கி சென்ற இடம் என்ற கருத்தில் தங்கிய ஓடை தங்கோடை எனப்பட்டது.

மெலிஞ்சியோடை- மெலிஞ்சியோடை என்று ஊர்காவற்றுறையில் ஓரிடமுள்ளது. மெலிஞ்சியின் கருத்து அறியமுடியாதுள்ளது.

பாலாவோடை - முன்னைய காலத்தில் பசுவளம், பால்வளம் கூடிய பிரதேசமென்பர்.

சக்கலாவோடை - சகளை + ஓடை. சகளை- சேறு. சக்கலாவோடை திரிபு.

சாம்பலோடை - பிரேதங்கள் எரிக்கும் மயானம் காரணமாக இப்பெயர் வந்திருக்கலாம். சாம்பலாகுமிடம்

கொம்பாவேடை - கொம்பன்+ஓடை கொம்பாவேடை திரிபு. கொம்பன் - தலைவன்.

வழுப்போடை - வழுக்கும்+ஓடை (மாரிகாலத்தில் வழுக்கும் பாங்கான மக்கி மண்)

கணவோடை - கணங்கள் +ஓடை தேவகணங்கள் ஃ பூதகணங்கள் பகுதி

மொந்திபுலம் - நெல் விளையும் காணி புலம் என்பது கருத்து.

கோதிப்புலம் - கோதி+புலம்

அறுகம்புலம் - அறுகு+புலம்

கொட்டைப்புலம் - கொட்டை+புலம்

தட்டாம்புலம் - பொற்கொல்லன்+புலம்

இடைப்பிட்டி - இடை+பிட்டி

தினாம் பிட்டி - தியனா - ஒருமரம்+பிட்டி

மணற்பிட்டி - மணல்+பிட்டி

பெரியமணல் - பெருத்த+மணல் (மண்ணில் பருமணல் என்றோர் வகையுண்டு)

வேரப்பிட்டி - வேரப்பிட்டி என்பதன் வடிவம் போலும். (பிட்டி மேல் பனைவேர்கள் தெரிந்தமையால் ஏற்பட்ட பெயரென்பர். வேரப்பட்டி ஒரு தொல்லியல் தளமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்டு இலங்கை நிலஅளவை வரைபடத்தில் சூரியன்பிட்டியெனக் குறிக்கப்பட்டுள்ளது.

தினகரன்பிட்டி – தினகரன் என்னும் முனிவர் வாசஞ் செய்த இடம். அங்கு ஆல விருட்சத்தின் கீழ் பழமையான அருள்மிகு வைரவர் கோவில் அமைந்துள்ளது.

பிராமணன் பிட்டி — பிராமணன் பிட்டி. பெரிய மதவடியின் மேல்ப்பக்கமாவுள்ளது.

மூக்கம்பிட்டி – மூக்கம்+பிட்டி கீழே அகன்ற மூக்கினையொத்த பிட்டி?

மாறாம்பிட்டி – மாறாம்+பிட்டி மாறாம் மாறுபாடுள்ள பிட்டி ?

எண்ணாங்கப்பிட்டி –எண்ணாயிரவர்+பிட்டி எண்ணாயிரவர்– பிராமணர் எண்ணாங்கப் பிட்டி திரிபு

உதிராப்பிட்டி – உதிரா+பிட்டி உதிரா வைரமான / கெட்டியானது

களவிலபிட்டி – களம்+வில்+பிட்டி. நெற்காணியோரமாவுள்ள குடியிருப்பு பகுதி

சாத்தாவாரிப்பிட்டி–சாத்தாவாரி (ஒரு படர் கொடி)+பிட்டி

யாத்தரவை – பயன் அற்ற பெருநிலப்பரப்பு

தரவை – பிரயோசனமற்ற தரைப்பகுதி. மேய்ச்சல் நிலத்தினை தரவை என்று அழைப்பதுண்டு

நீலிப்பந்தனை – நீலி என்றால் துர்க்கை / காளி இங்கு துர்க்கை அம்மன் கோவில், காளி அம்மன் கோவில் என இரண்டு கோவில்கள் அமைந்திருப்பதால் இப்பெயர் ஏற்படலாயிற்று.

ஆவந்தனை – ஆ+வந்தனை. கோமாதா வழிபாடு. பசுபட்டி வளர்க்குமிடம்

கரப்பிட்டியந்தனை– கரம் – துதிக்கை. பிட்டியான பகுதியில் அமைந்துள்ள விநாயகர் கோவில் தெருக்கரை பிள்ளையார் கோவில் என்றும் இப்போது அழைப்பர்.

சடையாளி – யாளி என்றால் சிங்கம். சடைத்த யாளி போன்ற அடர்ந்த மரங்கள் முற்காலத்தில் வளர்ந்தபடியால் ஏற்பட்ட பெயர் என்பர்.

புதுறோட் – கிளவ் மக்களில் ஒருவராகிய சின்னக்கிளவ் தான் வசித்த நீண்ட தெருவினை தனது சொந்தப்பணத்தில் கற்தெருவாகப் போடுவித்தார். மக்கள் புதுரோட்டு என்று அழைக்கத் தொடங்கினர். அது இப்போது சிவன் கோவில் வீதி, என்றும் கசூரினா பீச்றோட் என்றும் அழைக்கப்படுகின்றது.

கருங்கல்லடி – ஆண்டிக்கேணி ஐயனார் சன்னாசிக்கந்தர் என்ற அடியாரது கனவில் தோன்றி தமது ஆலயத்தை கருங்கற்களால் கட்டுவிக்கும்படி கூறியதாகவும், அதற்கேற்ப வவுனியாவிலிருந்து பெரும் சிரமத்தோடு வாகனத்தில் கருங்கல் கொண்டு வந்தபோது புதுறோட்டு கடந்து தரவை தொடங்கும் இடத்திற்கு அப்பால் வாகனம் செல்ல முடியாமல் அங்கே பறிக்கப்பட்டு பல ஆண்டுகள் அங்கு கிடந்தன. மக்கள் அவ்விடத்தை கருங்கல்லடி என அழைக்கலாயினர். பின்னர் ஆதீனகர்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிலாமணியின் ஆலோசனையின்படி வெள்ளைக்கற்கள் சுன்னாகத்திலிருந்து கொண்டு வந்து சன்னாசிக்கந்தர் கட்டுவித்து 1929.09.06இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மூலஸ்தானம் கட்டும்போது கருங்கல்லடியில் பறிக்கப்பட்ட கருங்கற்கள் எடுத்து பயன்படுத்தப்பட்டன.

பண்டித்தாழ்வு - முன்னைய காலம் மரணித்த பன்றியொன்று தாட்கப்பட்ட தாழ்வான பிரதேசம்.

திண்ணைக்கழி அக்காலத்தில் இங்கிருந்தே வெண்களிமண் எடுக்கப்பட்டு வீட்டுத்திண்ணைகள் மெழுகப்பட்டன.

நடுத்தெரு - நடு தெரு

கள்ளித்தெரு - கள்ளி தெரு (கள்ளி இன செடியின் காரணமாக ஏற்பட்ட பெயர்.)

செம்பாடு - செம்மை+பாடு (செம்பாட்டு மண் பிரதேசம்)

மாவட்டை - மகா வட்டை

சின்னமாவட்டை- சின்ன மா வட்டை

மாதாங்கோவிலடி மேரிமாதாவின் கோவிலடி ⟶ மாதாங்கோவிலடி களபூமியில் ஒரு மாதாங்கோயிலும் தங்கோடையில் ஒன்றுமாக இரண்டு மாதாங்கோயில்கள் காரைநகரில் உண்டு.

ஊரி- ஊரி (சிறு சங்கு) ஊரிப்பாங்கான நிலம் கிழக்கு கடற்கரை பிரதேசம்.

மாப்பாணவூரி- மாப்பாணர் புரி — மாப்பாணர் என்பது ஓரின மக்கள், புரி —ஊர் மாப்பாணபுரி பின்னர் மாப்பாணவூரி ஆகிற்று.

சத்திரந்தை- பரட்டை காடு உள்ள மேட்டுப்பூமி என்பது கருத்து

எட்டுக்கட்டி- இப்போது அழகாபுரி என 1983ம் ஆண்டில் பெயர் மாற்றம் பெற்று உள்ளது.

மாதடை- நெல் வயலை அடுத்துள்ள கடற்கரை பிரதேசம். எவ்வித முன்னேற்றமும் இன்றி மகா தடையாக இருந்ததால் ஏற்பட்ட பெயர் பின்னர் 1983ம் ஆண்டளவில் தீவுப்பகுதி வடக்கு உதவி அரசாங்க அதிபர் சீவரத்தினம் அவர்களால் மருதபுரம் (நெல் விளையும் நிலம்) என்ற பெயர் சூட்டப்பட்டது. இப்போது மின்சாரம், அகலமான புதியரோட்டு ஆகியவற்றுடன் பலவகையிலும் முன்னேறி வருகின்றது.

இராசாவின் தோட்டம்-இராசா தோட்டம்

பிட்டியோலை, பிட்டியெல்லை — பிட்டியான பகுதியை எல்லையாகக் கொண்ட கடற்கரையோரக் குறிச்சி.

பயிரிக்கூடல்- பயிர் வகைகள் வளரும் கூடல் பாங்கான பெரிய நிலப்பரப்பு. வயற் காணியமைந்த பிரதேசம்

இலந்தைச்சாளை, இலந்தைச்சாலை — -இலந்தை+சாளை ஒரு வகை மீன்.

வாய்க்கால் - மாரிகாலத்தில் மழை நீரோடும் ஒடுங்கிய பாதை. இது மொந்திபுல பாதையின் அரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியிலுள்ளது. இங்கு ஓரின மக்கள் குடியிருப்புக்கள் உள்ளன.

திக்கரை- திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை என்பது போல திக்கற்றவர்களுக்கு திக்கரையான் துணை என்கிறார் அப்பகுதி சுவாமியார். கார்த்திகேய ஐயரை திக்கரை முருகனே நெறிப்படுத்தி உய்வித்தார். திக்கரன் என்றால் முருகப்பெருமான்.

தன்னை- மூத்தோன் - விநாயகர் என்பது கருத்து. இங்கு தொன்மை வாய்ந்த அருள்மிகு விநாயகர் கோவில் ஒன்று உண்டு. இற்றைக்கு நூற்றைம்பது இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராமேஸ்வரத்துக்கு அண்மையில் கணபதிதிட்டு என்ற கிராமத்திலிருந்து சில பிராமணக் குடும்பங்கள் இரண்டு வள்ளங்களில் இலங்கைக்குப் புறப்பட்டனர். ஒரு வள்ளத்தில் பிராமணக் குடும்பங்களும் மற்றைய வள்ளத்தில் விநாயகர் சிலையுமாகப் புறப்பட்டனர். வழியில் கடல் கொந்தளிப்பினால் வள்ளங்கள் பிரிந்தன. பிராமணக் குடும்பத்தினர் வந்த வள்ளம் திருவடி நிலையையடைந்நதது. பிராமணக் குடும்பங்கள் இங்கு இறங்கி பற்றைக்காடுகளினூடாகச் சென்று சங்கானை, சண்டிலிப்பாய் கிராமங்களைக் கடந்து உடுவிலையடைந்தது. அங்குள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் தங்கி அயலவர்களின் உதவியுடன் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் அதிகாலை பிராமணர் ஒருவருக்கு விநாயகர் காரைதீவு கிழக்கு கடற்கரையில் தங்கியுள்ளதாகக் கனாக் கண்டு ஏனையோருடன் அங்கு சென்று விநாயகர் சிலையைக் கண்டு ஆனந்தமுற்று சிலையைத் தூக்கிக் கொண்டு சிறிது தூரம் சென்ற போது அதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட விநாயகரை அங்கே ஸ்தாபித்து குடிசைக் கோயிலைக் கட்டினர். அவ்விடமே தன்னை எனப் பெயர் பெற்றது.

கல்வந்தாழ்வு- கல்+வந்த+தாழ்வு பாரிய கற்பாங்கான தாழ்ந்த நிலப்பகுதி.

பூதனடைப்பு- பூதன்+அடைப்பு அடைப்பு சுற்றி அடைக்கப்பட்ட நிலப்பகுதி

கொள்ளடைப்பு- கொள்+அடைப்பு

வாழையடைப்பு- வாழை+அடைப்பு

கொத்தாசியடைப்பு-கொத்தாசி+அடைப்பு

காசியடைப்பு- காசி+அடைப்பு

வேதரடைப்பு- வேதா+அடைப்பு. வேதர் தவசி/ முனிவர்

வென்னடைப்பு- வென்னன்+அடைப்பு (வேந்தனடைப்பு என்றுங் கூறுவர்)

கணக்கனார்கண்டி-கணக்கனார்+கண்டி. கண்டி என்றால் ஒரு நிலப்பரப்பு / பகுதி

சம்பந்தர்கண்டி- சம்பந்தர்+கண்டி

நாவற்கண்டி- நாவல்+கண்டி. நாவல் மரப்பகுதி

பறையர் கண்டி-பறையர்+கண்டி. இப்போது 1983ம் ஆண்டு முதல் பழையகண்டி என அழைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடி இறுதியில் சேர்த்து பெயர் வழங்கும் தன்மை அநேகமாக எல்லா ஊர்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.**

ஆலடி- ஆல்+அடி

குருந்தடி- குருந்து+அடி (சடையாளி குறிச்சியிலுள்ளது)

இலகடி- இலகு+அடி (இலகு – ஊமத்தை செடி)

மருதடி- மருது+ அடி

சிதம்பராமூர்த்திகேணியடி-சிதம்பராமூர்த்தி+கேணி+அடி

தச்சன்பனையடி- தச்சன்+பனை+அடி

மடத்துக்கரை அம்மன் கோவிலடி- மடம்+கரை+அம்மன்+கோவிலடி (பிரதான வீதியின் கரையில் அமைந்திருந்த மடம் - இப்போ அழிந்து பீடம் மட்டும் காணப்படுகின்றது)

வேம்படி- வேம்பு+அடி

தில்லையடி- தில்லை+அடி. தில்லைச் செடி பால் உள்ள செடி சிதம்பர தல விருட்சம்.

பத்தர் கேணியடி- பத்தர்+கேணி+அடி - பத்தர் தட்டார் சிரமதானமாக பிள்ளையார் பக்தர்களால் வெட்டப்பட்ட கேணி

பாற்குத்திமடத்தடி-முற்காலத்தில் அம்மைப்பால் குத்தும் வழிக்கரை மடம். இப்போது அழிந்து அத்திவாரம் மட்டும் உள்ளது. அருகே கேணி ஆவுரஞ்சிக்கல்லும் சுமைதாங்கிக்கல்லும் இன்றும் பணிபுரிகின்றன.

சின்னாலடி- சிறுமை+ஆல் +அடி

சந்தன்புளியடி- சந்தன்+புளி+அடி(சந்தன் என்பவரது பருத்த புளிய மரம் .ஏராளம் கொக்குகள் அதில் வாசஞ் செய்தமையால் பின்னர் அகற்றப்பட்டதாம்)

நாராணிகேணியடி-நாராணி கேணி அடி

பூசணிக்குண்டடி- பூசணி+குண்டு+அடி

முனியப்பர்கோவிலடி- முனியப்பர்+ கோவில்+அடி

நாகம்மாள்கோவிலடி- நாகம்மாள்+ கோவில் +அடி

பெரியமதவடி- பெரிய+ மதகு+அடி

அன்னமார்கோவிலடி- அன்னமார்+ கோவில் + அடி

புலவன் வளவு- புலவன்+ வளவு

வேரக்குளம்- ஆய்விற்குரியது. கருங்காலியிலுள்ள பெரிய மழைநீர்த்தேக்கம்

உடுவில்- மேல் வெளி என்பது கருத்து. இது பலகாட்டில் உள்ள ஓர் இடம். இப்பெயர் மானிப்பாய்க்கு அடுத்த கிராமத்திற்கும் உள்ளது கவனிக்கத்தக்கது.

வட்டக்கிராய்- வைரமான நிலப்பகுதி (கிழக்கு கடற்கரை பிரதேசம்)

முல்லைப்பிலவு- பிலவு புலம் /நிலப்பரப்பு. → முல்லை வளைவான பிரதேசம். காடு சார்ந்தது. முல்லைத்தீவினை நோக்குக.

போசிட்டி- சிட்டி - இருக்கை. போ – அரசமரம் திருப்போசை முன்னைய பெயரென்றும் போசை மருவி போசுட்டி ஆயிற்று என்றும் கூறுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிவளை- வாரி என்பது வெள்ளம்/விளைவு. வளை - இடம் வாரிவளவு என்றும் கூறுவர்.

கிளுவனை- கிளு - விளைவு குறைந்த பகுதி

தூம்பிற்பிட்டி- நீர் விழுந்தோடும் வழி தூம்பில். இங்கு காரைநகர் கிழக்கு கடல் - வடக்கு பெருங்கடலுள் விழுந்தோடுகின்ற பகுதி.

கோவளம்- கடலுள் நீண்டிருக்கும் தரைப்பாகம் கோவளம் என்பபடும். இதைப்பற்றி ஈழத்துச்சிதம்பர புராணம் கூறுவதினையும் நோக்குவோம்.

"காரை நாட்டு வடமேற்கில் விளங்குவது
கோவளமாங் கவினார் வைப்பு
சீரமைந்த பழையதுறை முகமதுவே
வரலாறு செப்பு முண்மை
ஏரமைந்த கரை மருங்கிற் றிரை யெழுச்சி
பாற்கடலி னெழுச்சி யொக்கும்
பேரமைந்த வெள்ளையர்க்கு முன்னாளின்
நலவைப் பாய்ப் பிறங்கிற் றம்மா."

காரைநாட்டின் வடமேற்குப்பக்கமாகக் கடலையடுத்துள்ள பகுதி கோவளம் எனப்படும். கி.பி 1284இல் மாக் கோப் போலோ சீனத்திலிருந்து மேலைத்தேசங்களுக்குப் போகும் வழியில் யாழ்ப்பாணத்துறைமுகமொன்றிலே தாம் தங்கியதாகவும் அதன் பெயர் "கோளம்" என்றும் அங்கே சீனம் அரேபியா முதலிய தேசங்களிலிருந்து கப்பல்கள் வணிகஞ் செய்யும் பொருட்டு வந்து போயின வென்றும் கூறியுள்ளர். இவர் கூறிய "கோளம்" என்ற பெயரே கோவளம் என மாற்றமடைந்ததென்பர். ஆய்விற்குரியது. ஆங்கிலேயர் முன்னைய காலத்தில் குதிரை வண்டிகளில் வந்து கோவளம் கடற்கரை பகுதிகளில் சில நாட்கள் சுகம்பெறும் பொருட்டு தங்கிச் சென்றதாக மூதாதையர் கூறக் கேள்விப்பட்டதுண்டு. கோவளத்தில் தென்னம் சோலைகளுண்டு. மேய்ச்சல் தரை உண்டு. பசுப்பட்டி கூடிய இடமென்று கூறப்படும் மூன்றாவது விளக்கமும் ஏற்புடையதே.

வியாவில- பெரிய வெளிப்பிரதேசம் என்பது கருத்து.

நந்தாவில்- சொர்க்கலோகத்தில் சக்கரன் ஸ்நானம் செய்யும் வாவியின் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

கொதிராவில்- ?

விக்காவில்- ?

பொன்னாவளை-பொன்னவர் செல்வந்தர் வாழும் இடமென்றும் / பொன்னாவரசு பூத்துக்குலுங்கும் இடம் என்றும் இரண்டு வகை விளக்கங்கள் கூறப்படுகின்றன.

கேசடை- கேசரை - பருத்திச்செடி — கேசரையின் திரிபாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளானை- விளாத்தி மரங்கள் அதிகமாக வளர்ந்திருக்கும் பிரதேசம்.

மல்லிகை- வடகிழக்கு மல்லிகை, வடமேற்கு மல்லிகை என இரு கூறுகள் இருக்கின்றபோதும் மல்லிகையின் கருத்தை அறியமுடியாமல் உள்ளது. ஆய்விற்குரியது.

காரைப்புரியல்- காரை காரைச்செடி - புரி ——→ ஊர்/இடம் காரைப்புரியல் மருபு காரைப்புரி

ஆலந்தோடை- ஓரினமரம்

செட்டி தோட்டம்- செட்டி — வர்த்தகர் + தோட்டம்

சேச்சடி- கிறிஸ்தவ தேவாலயப்பகுதி (மருதடி பிரதேசத்திலுள்ளது)

வெடியரசன் வீதி- தீவுப்பகுதியை அரசாட்சி புரிந்த மன்னன் வெடியரசன். இங்கும் மன்னன் இராசதானி அமைந்திருந்தது. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை உண்டு.

சிவகாமி அம்மன்கோவிலடி - பண்டத்தரிப்பான் புலம் சிவகாமி அம்பிகா சமேத சிதம்பரேஸ்வரர் கோவில்பகுதி. பண்டத்தரிப்பான் புலம் - காணியின் பெயர்.

ஆயிலி- முன்னைய காலத்தில் தாயற்ற சிறுமி வாழ்ந்த இடமாகக் கருதப்படுகின்றது.

தம்பன்- தம்பபன்னி தம்பன்ன என்பதன் திரிபாகக் கருதப்படுகின்றது. தம்பன் என்ற பெயர் எம்மவரில் சில ஆண்களுக்கு உண்டு

குமிழங்குழி — குமிழ் + குழி குமிழ் செடியுள்ள பள்ளமான பகுதி

நட்டுப் பாளி — நட்டு + பாளி. நட்டு நட்டுவன் பாளி பாசறை. நட்டுப்பாளிக் கேணியருகேயுள்ள குடியிருப்பு நிலம்

சாந்திபுரம் - சாந்தி + புரம் புரம் - ஊர்/நகரம் 1987 ம் ஆண்டளவில் ஏற்பட்ட பதட்டநிலை காரணமாக மடத்துவளவு மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தீவுப்பகுதி வடக்கு காரியாதிகாரியாக கடமையாற்றிய சாந்தி திருநாவுக்கரசு அம்மையாரின் நெறிப்படுத்தலில் தோப்புக்காட்டின் கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் அம்மக்களுக்கு குடியிருப்பு குடிசைகள் அமைத்து குடியேற்றப்பட்டனர். அவரை என்றும் நினைவு கூரத்தக்கதாக அக் குடியேற்றத்திற்கு "சாந்திபுரம்" நாமம் சூட்டப்பட்டது. சாந்திபுரத்திற்கும் தம்பாட்டி துறைக்கும் இடையே அந்நேரத்தில் மக்கள் கடல்வழி போக்குவரவு நடைபெற்றது.

ஜவிளை- நெல் விளையும் சிறு பிலத்தரைப்பகுதி.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தசாப்தத்தில் நிறைவேற்ற வேண்டிய எமது ஊர்த் தேவைகள்

01.தற்போது கிழக்கு ரோட்டிற்கு சமீபமாக மழைநீர் தேக்கங்கள் இரண்டு புதிதாக அமைக்கப்பட்டது போன்று மேற்கு சுற்று வீதியிலும் பொருத்தமான இடங்களில் இரண்டு அல்லது மூன்று புதிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படல் வேண்டும். மழைநீர் கடலுக்கு போகாது தேக்கலாம். நன்னீர் வளம் அதிகரிக்கும்.

02.காரைநகரின் நாலாபக்கத்திலும் பல கேணிகள் தூர்ந்து போயுள்ளன. அவற்றை புனரமைப்பதன் மூலம் மழைநீரைத்தேக்கலாம். இதனால் நன்னீர் வளம் அதிகரிக்கும். "தூரத்து தண்ணீர் ஆபத்திற்குதவாது" என்பது முதுமொழி. "வானிலிருந்து கிடைக்கின்ற ஒரு துளி நீரையேனும் வீணே கடலை சென்றடைய விடமாட்டேன்" என்றான் பொலநறுவையை ஆண்ட பராக்கிரமபாகு மன்னன்.

03.பண்ணைத்துறையைப் போன்று காரைநகரிலும் மீன்பிடித்துறைகள் அமைக்கப்படல் வேண்டும்.

04.தோப்புக்காடு சாந்திபுரத்தினுடாக ஊர்காவற்றுறைக்கு (பூநகரி – சங்குப்பிட்டி பாலம் போன்று) பாலம் அமைப்பதன் மூலம் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், வலிகாமம் ஆகிய இடங்களுக்கு நேரடி போக்கு வரவு ஏற்படுவதன் மூலம் உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை அதிகரிக்கலாம். மக்கள் தொடர்பு, பிரதேச அபிவிருத்தி என்பன ஏற்படும். இன்னும் பற்பல நன்மைகள் சேரும். பாலம் - நிர்மாணத்தின் மூலம் வளமான வாழ்வு என்பது இன்றைய அரசினரின் முற்போக்கான சிந்தனைகளிலொன்று.

05.வீட்டுத்தோட்டம்

இங்கு வீட்டுத்தோட்டங்களில் தென்னை, பனை, நெல்லி, இலுப்பை, புளி,வேம்பு,நாவல் போன்றவை நன்கு வளர்கின்றன. வாழை, எலுமிச்சை, தோடை, பப்பாளி, போன்றவை சில சில இடங்களில் நன்கு வளர்கின்றன. பூசணி, பாகல், புடோல், வெண்டி, கத்தரி, பயிற்றை போன்றவை மாரிகாலங்களில் சிறப்பாக வளர்கின்றன.

வெற்றிலை, கமுகு, பலா. மிளகாய்ச்செடி போன்றவை இங்கு வளர்வது மிகக்குறைவு.

மின் விநியோகம், வீதி அகலமாக்கல், வீட்டுத்தேவைகள், விறகு தேவைகள் போன்றவற்றிற்காக வேம்பு, இலுப்பை, புளி, மா, நாவல், பூவரசு, தென்னை, பனை போன்ற பெரிய விருட்சங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுகின்றன. இதனால் மழை வீழ்ச்சியும் குறைவடையும்.
மேற்கூறப்பட்ட தாவரங்கள் வளர்க்கவேண்டிய அவசியத்தை மக்களுக்கு தெரியப்படுத்தி அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வளர்ப்பதற்கு ஊக்கமும் உதவியும் வழங்கப்படல் வேண்டும்.

06.கோவளம் வெளிச்ச வீடு

1916 ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு பல்லாண்டு காலமாக கடற்கலங்களுக்கு இரவு வேளைகளில் திசைகாட்டியாக மிளிர்ந்தது. இப்போது பல வருடங்களாக செயற்பாடின்றி உள்ளது. அதனைத் தொழிற்பட வைக்கப்படல் வேண்டும். முன்னைய காலத்தில் ஏராளமான மக்கள் அக் கடற்கரைகளுக்கு வந்து போனார்கள். இப்போது அதற்கு செல்லும் பாதை குண்டும் குழியுமாகவுள்ளது. வீதி செப்பம் செய்யப்படல் வேண்டும் .

07.கோவளம் பிரதேசம் மேச்சல் தரையுள்ள பரந்த இடம். இப்பகுதியில் மாட்டு பண்ணை வளர்ப்பினை ஊக்குவித்தால் பசும்பால் உற்பத்தி அதிகரிக்கும்.

* * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்**
**ஓய்வுநிலை ஆசிரியர்**

# காரைநகரின் வள வரலாறும் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளும்

காரைநகர் யாழ்பாணக் குடாநாட்டின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ஒரு தீவாகும். பொன்னாலைக் கடனீரேரி குடாநாட்டையும் காரைநகரையும் பிரிக்கின்றது. இவ்வாறு பிரிப்பது நீர்வளம் என்பவற்றால் இடர்பாடாக இருந்தாலும் மக்களின் வாழ்வு நிலையிலும் பொருளாதார நிலைப்பாட்டிலும் விவசாயத்தை விட கடல்வளங்கள் சிறப்பைத் தருவனவாக அமைந்துள்ளது.

1910 வரை மக்களின் பொருளாதாரம் சிறந்த நிலையில் இல்லை. எனவே விவசாய நோக்குடன் வன்னிப் பிரதேசங்களுக்கு செல்பவராயினர். விவசாயத்தை நம்பி இருந்தவர்கள் நெற்செய்கையுடன் எள் முதலான தானிய வகைகளையும் மேற் கொண்டனர். காய்கறிச் செய்கை பெரிதாக இல்லை. பணப்பழக்கம் குறைவு. பனம் பொருட்களே பிரதான உணவு வகையாக கொள்ளப்பட்டது. இந்நிலையில் சிலர் தென்பகுதிக்கும் சென்று வர்த்தகம் முதலியவற்றை மேற்கொண்டு ஏனையவற்றுக்கும் வழிகாட்டினர்.

1990 அளவில் நல்லூர் முத்திரைச் சந்தையைச் சேர்ந்த சயம்பு வாத்தியாரின் வித்தியாசாலையினால் ஆங்கிலக் கல்வி கற்ற ஓர் சமுதாயம் உருவானது. அவரும் தியாக சிந்தையுடன் பணியை மேற்கொண்டார். சில பல நாட்களில் பனங்கிழங்கு துவையல் அவரின் மதிய போசனமாக விளங்கியது. குறிப்பாக சயம்பரின் ஆங்கிலக் கல்விச் சேவையால் பலர் மலேசியா நாட்டிற்குச் சென்று அரச ஊழியராயினர். இதனால் பலரின் வாழ்வில் இடர்பாடுகள் நீங்கின. மேலும் தென்னிலங்கைக்குச் சென்று வர்த்தகம் மேற்கொண்டவர்களைத் தொடர்ந்து பலர் செல்வராயினர். இவ்வாறான நிலையால் ஏனைய தொழிலாளர் வாழ்வும் சிறப்படையத் தொடங்கியது.

பொதுவாக 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் மீன்பிடி சிறப்புற்றிருந்தது. அயற் கிராமங்களுக்கும் தென் இலங்கைக்கும் கடலுணவுகள் ஏற்றுமதி நிலையிலிருந்தது. கடல் வளம் சார்ந்த பல்துறை சார் தொழில்கள் இடம் பெற்றன.

1970 ற்கு முன் பின்னாக ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் காரைநகரின் பொருளாதாரத்தில் வீழ்ச்சியும் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது. இடப் பெயர்வினால் இந்நிலை அதிகரித்ததுடன் வாழ்கின்ற மக்கள் தொகையும் குன்றத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து காரைநகர் மக்கள் பலர் மேலைத்தேசங்களுக்கும் செல்பவராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் பொதுவாகவே இயற்கை வளம் குன்றிய பிரதேசம். பாரிய முயற்சிகள் மூலமே மக்கள் தங்கள் வாழ்வினை நடாத்த முடியும். மேலும் காரைநகர் துறைமுகத்தில் செயற்பட்டு வந்த சீநோர் நிறுவனம் கடல் சார்ந்த வளங்களைப் பயன்படுத்துவதில் முதன்மை பெற்றது. இதனால் கிராமத்தவர் ஏனைய பிரதேச மக்களும் பல்துறைகளில் பல்வேறு தொழில்களைப் பெற முடிந்தது. இறால் பதனிடுதல் முதல் படகுகள் தயாரித்தல் ஈறாக பல்வேறு தொழில் துறைகள் இடம் பெற்றன. சீநோர் மட்டுமன்றி ஏனையோர் மீன்பிடித்தலிலும் ஈடுபட்டனர்.

தென்னிலங்கையில் வர்த்தகம் நடாத்தி வந்த இப்பிரதேசத்தவர் 1977, 1981 இலும் ஏற்பட்ட இனக்கலவரங்களால் வடக்கை நோக்க வேண்டி இருந்தது. இடையிடையே ஏற்பட்ட சச்சரவுகளாலும் 1991 ல் ஏற்பட்ட இடப் பெயர்வினாலும் கல்வி, கலாசார, பொருளாதார வாழ்விடம் யாவற்றையும் இழக்க வேண்டி வந்தது. அவற்றை எல்லாம் மீளவும் தேடுவதென்பது கேள்விக்குறியாகவே அமைகிறது. இது ஒரு சிலருக்கு சிறிதளவு வாய்ப்பைக் கொடுத்திருக்கலாம். ஒரு சிலர் இடம் பெயர்ந்தோரின் சொத்துக்களை பேணிக் கொடுத்தவர்களும் உண்டு. திடீர் யுத்தமாதலால் சில பொருட்களை தமது தேவைக்கு கொண்டு சென்றவருமுண்டு. அவர்கள் விட்டுச் செல்ல அவற்றை சூறையாடிய பலரும் உண்டு. இராணுவ நடவடிக்கையினால் விவசாய நிலங்கள் பலவும் கைவிடப்பட்டன.

இந் நிலையில் காரைநகர் மக்களும் புலம் பெயர்ந்து பல நாடுகளுக்குச் செல்பவராயினர். இங்கு வாழ்க்கைக்கான வருவாயைத் தேடிக் கொண்டதோடு பலர் அவற்றை தம் நிரந்தர இருப்பிடமாகவும் கொண்டனர். அவர்கள் தம் உறவினர் ஆலயங்கள் பாடசாலைகள் முதலியவற்றிற்கு உதவிடுதல் நோக்கத்தக்கது. அவர்கள் இவ்வாறு உதவுகின்ற பொருள் நிரந்தரமாக மக்கள் வாழக் கூடிய வருமானம் தொழில்சார் வளங்களை ஏற்படுத்தல் சிறந்ததே. ஆலயங்கள், பாடசாலைகள் முதலியவற்றிற்கு உதவும் பணம் கூட அவற்றை தொடர்ந்து பேணவும் மக்களுக்கும் உதவவும் வழிகாட்டவும் உதவிட வேண்டும்.

இது வரையில் மக்கள் வளங்களை சிறிதளவு பயன்படுத்தியதையும் ஏனைய முயற்சிகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தியதையும் கண்டோம். இவை எல்லாம் நாட்டின் நிலைமையினால் அழிவுற்று சீரழிந்து போனது பொறுக்க முடியாததொன்று. கிராமத்து வளங்களைக் கொண்டு ஏனைய உதவிகளைக் கொண்டு நாட்டை முன்னேற்ற வேண்டியது. இடம் பெயர முன்பு 40000 மக்கள் வாழ்ந்ததாகக் கூறுவர். இது உண்மையும் கூட. நீர்வளம் நிலவளம் குன்றியதாய் இருந்தாலும் மக்கள் தங்களை மாய்த்து செல்வம் தேடினர். இது மட்டுமனறி 1980 க்கு தென்னிலங்கையுடன் தொடர்பு கொண்டு சிறிய அளவிலான வாணிப முயற்சி மேற்கொண்டார்கள் என்பது செவிவழிச் செய்தி. வடகீழ் மூலையில் உயர்ந்த காய்கறிச் செய்கை முதலியன மேற்கொள்ளப்பட்டதாம். இதனால் அதற்கு கத்தரிப் பிட்டி என்ற பெயரும் வழங்கியது. சுவாத்திய மாற்றமும் மற்றும் முயற்சி இன்மையும் இது உவர் நிலமாக மாறி விட்டது. எனினும் நீர்வளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து இருந்தாலும் விவசாய முயற்சிகள் இல்லாமல் இல்லை. நீர்வளம் பெருக்க வேணன் அணை, சாம்பலோடை அணை என்பனவும் பிறவும் நன்னீர் நில வளத்தை பேண ஓரளவு உதவும்.

இடம் பெயர முன் ஏறக்குறைய 40000 மக்கள் வரையில் குடியிருந்த இப்பூமி இன்று 2011 ம் ஆண்டுக்கணக்குப்படி 10858 மக்களே வாழ்கின்றார்கள். மக்கள் வளத்தினால் மண் வளத்தைப் பெருக்கலாம் அல்லவா. பல இடங்கள் நெற்செய்கை கைவிடப்பட்ட நிலையில் உண்டு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இன்று 553 HA அளவில் நெற்செய்கைப் பூமியாக இருக்கிறது. பழப்பயிர் 50HA அளவில் அமைகிறது. அதை மேலும் வளம்படுத்தலாம். இச் செய்கைக்கு வரட்சி பிரதான இடர்பாடாக அமைகிறது. என்னவாயிருந்தாலும் கட்டாக்காலி விலங்குகளின் தொல்லை, எல்லைகளை உரிமையற்றோரின் பாதிப்பு முதலியனவாம். முன்னர் தென்னை வளம் சிறப்புடையதாக அமைந்தது போலும், பெரும்பாலும் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு இருந்தது. இடப்பெயர்வின் பின் பெரிதும் பாதிப்படைந்தது. இன்று 36HA அளவில் தான் தென்னைவளம் உண்டு. புனர் நடுகை அவசியம். மழைவளம் குன்றியதால் பாதிப்பும் உண்டு. இடையிடையே ஏற்படும் கடும் வரட்சி புனர்நடுகையை பெரிதும் பாதிக்கும். ஆனி, ஆடி மாதங்களில் சிறிதளவு மழை பெய்யுமானால் புனர் நடுகையின் போது பெரிதும் கை கொடுக்கும். தங்கள் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் எல்லைகளை அழித்தல் கூட இப்புனர் நடுகையை பெரிதும் பாதிக்கும். ஆனால் பனை வளம் தானாக வளர்ந்தது. பயன் தரக்கூடியது. பனைகள் பெரிய அளவில் இருந்தாலும் பருத்தித்துறை, வேலணை என்பவற்றைப் போல் சிறப்படையவில்லை. 251 HA தற்போது பயிராகின்ற பிரதேசமாகின்றது. இவற்றிற்கான பயிரிடும் பூமியைக் கூட்டலாம். குறுகிய கால பயிர்களை உற்பத்தி செய்யலாம். பல்வேறு காரணங்களுக்காக தறிக்கப்படும் மரங்களுக்காக மீள்பயிர்ச் செய்கை பண்ணுமாறு ஆலோசனை கூறலும் கட்டாயமாக்கலாம். இந்த நிலையில் பனைவளம் சார்ந்த தொழில்களை இயந்திர வளங்களுடன் மேற்கொள்ளல், பனஞ்சீனி, பனம்பாணி, கற்கண்டு, நவீனமுறையில் பனாட்டு வகை தயாரித்தல், ஒடியல் வகை என்பவற்றை முன்னைய காலம் போல் பயன்படுத்த நவீனமுறைகள் மூலம் மேற்கொண்டு மக்களுக்கு ஊக்கமளித்தல், பனை தென்னை தொடர்பான கைத்தொழில்களை மேம்படுத்த நிறுவனங்கள் ஊக்கப்படுத்தலாம். இவ்வாறு பனை தென்னை வளத்தின் மூலம் மக்களின் ஜீவாதாரத்தை மேம்படுத்தலாம். நெற்செய்கை ஏனைய செய்கைகளை மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து உற்சாகப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளலாம். இன்று வருமானம் கூடியவராக இருப்பவர் ஐரோப்பிய நாடுகளின் வருமானம் மூலமே. இது ஏனையோரையும் கிராமத்தை விட்டு வெளியே செல்கின்றனர். அவர்கள் உறவினர்க்கென்றும் தாய்பூமி என்றும் தரும் செல்வத்தை கொண்டு ஒற்றுமையுடன் முன்னேற்றமல்லவா. இயற்கைவளம் முன்னேற மனிதவளம் மேலும் வேண்டும். என்னதான் இருந்தாலும் நிரந்தர வளங்களைப் பேண வேண்டிய நிலை கிராமத்தவருக்கு உண்டு என்பதை மறக்கக் கூடாது.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சண்முகம் சுகந்தன்
திக்கரை, களபூமி
காரைநகர்

# காரைநகர் துறைமுகம்

காரைநகர் துறைமுகம் யாழ்ப்பாணத்தின் வடகரையில் ஜம்புகோளப்பட்டணம் பிரதான துறைமுகமாக இருந்தது. இதே போன்று களபூமி என்னும் துறைமுகம் காரைதீவின் தென்கரையில் கி.முற்பட்ட காலத்திலிருந்தே துறைமுகமாக விளங்கியது. மணிமேகலையில் களபூமித் துறைமுகம் ஊர்காவற்றுறைத் துறைமுகம் பற்றிக் கூறப்படுகின்றது. இவ்விரு துறைமுகமும் எதிர்எதிரே உள்ளதைக் காணலாம். கி.முன்பிருந்த ஊர்காவற்றுறை ஒரு முக்கிய துறைமுக பட்டணமாக விளங்கியதென்பதை விஜயனின் பின் அரசு கட்டேறிய பண்டுவாசுதேவனென்பவனின் ஆட்சிக்கால ஜதிகங்கள் எடுத்துச் சொல்கின்றது.

இத்துறைமுகங்கள் இரண்டும் வங்களாவிரிகுடா மூலம் இலங்கையின் மேற்குக் கரையினூடாக யாழ்ப்பாணப் பட்டணத்துக்கும் பூநகரிக்கும் மன்னாருக்கும் கடல் வழியாகச் செல்லும் போது முக்கிய நுழைவாயிலின் இருபுறமும் அமைந்திருந்தமையால் முக்கியத்துவம் பெற்றதாயிற்று. எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டை அரசு புரிந்தவர்கள் இவ்விரு தீவுகளுக்குமிடையே கடல் வழிப்பாதையினை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு காவல் நிலையங்களை அமைத்துக் கொள்வது வழமையாயிற்று. இதன் காரணமாகவே போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றியதன் பின் இந்த நுழைவாயில் கடல் மத்தியில் கோட்டையைக் கட்டி முக்கிய காவல் தளமாகப் பயன்படுத்தினர். எனவே ஊர்காவற்றுறை என்றழைக்கப்படும் போது களபூமித் துறைமுகத்தையும் இணைப்பதாகவிருப்பதை அவதானிக்கலாம். தென்னிந்திய கரையோரத் துறைமுகங்கள் மூலமும் இலங்கையின் வடமேற்குக் கரையோரமும் வளர்ச்சி பெற்றது போன்று ஊர்காவற்றுறை என்ற பெயருடன் காரைநகர் களபூமித் துறைமுகமும் முக்கிய வளர்ச்சியடைந்ததோடு வாணிபக் குடியேற்றங்களையும் இராணுவக் குடியேற்றங்களையும் தீவு முழுவதும் கொண்டதாவிருந்தது என்பது அவதானிக்கத்தக்கது. களபூமி துறைமுக வரலாற்றில் வெடியரசன் காலம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. வட இலங்கையில் இரண்டாம் நூற்றாண்டில் வெடியரசன் நெடுந்தீவைத் தனது ஆட்சிக் கோட்டையாகக் கொண்டு காரைதீவில் களபூமி துறைமுகத்திற்கருகே ஒரு அரச மாளிகையில் நீலங்காட்டில் வெடியரசனின் மனைவியான நீலகேசியின் அந்தப்புரமும் சூரியன் பிட்டியில் ஒரு மாளிகையும் பொன்னாலை, வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை, கீரிமலை, மயிலிட்டி, திருவடி நிலை, நயினாதீவில் நாகமணி போன்ற செல்வங்களைக் கொண்ட களஞ்சியக் கோட்டையும் வைத்து தனது சகோதரர்களான விளங்குதேவன், போர் வீர கண்டன், ஏரிலங்குருவன் ஆகியோரின் உதவியுடன் ஆட்சி புரிந்து வந்ததை அறியக் கூடியதாக இருக்கின்றது. இவ் வரலாற்றை யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பயணிகளின் இறங்கு துறையாக காரைநகர் இருந்ததென்பதற்கு அவர்கள் தங்கள் வாணிப நடவடிக்கையின் போது தங்கிய இடம் "தொப்பிக்காடு" இன்று தோப்புக்காடு என மருவி வந்தது. காரைநகர் களபூமித்துறையில் முத்துக்கள், சங்குகள் வாங்க வந்த சோனகர் வியாபாரம் செய்து வந்த இடமும் இதுவாகும். சோழருடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையின் வடமேற்குக் கரையின் மாந்தை, ஊர்காவற்றுறை, கந்தரோடை ஆகிய இடங்களில் தமிழர் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இந்நிலையில் ஊர்காவற்றுறைதுறைமுகம் சோழருடைய கவனத்தை ஈர்த்தது. இதன் விளைவால் களபூமித்துறைமுகம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. அதற்கு களபூமித்துறைமுகம் இருந்த காரைதீவு யாழ்ப்பாண பெருநிலப்பரப்புடன் நெருங்கிய தூரத்தில் இருந்தமையாகும்.

சோழராட்சி காலபகுதி வடமேற்கு இலங்கையில் தமிழரின் குடியேற்றத்தை அதிகரிக்கச் செய்தது. இக்காலகட்டப்பகுதியில் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் சோழரின் கடற்படைகள் தங்கின. இதன் விளைவாக ஊர்காவற்றுறையின் எதிர்க்கரையிருந்த களபூமித்துறையும் சோழரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக விளங்கின. சோழ அரசு இங்கு நிலவிய காரணமாக இரு துறைகளிலும் வாணிப நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. இதற்கு சான்றாக களபூமி அண்டிய பகுதியில் சோழர்கால இடப் பெயர்களைக் கொணடதாக இருந்தன.

இதே போன்று குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்ட அரேபியரின் இருக்கைகளாக ஊர்காவற்றுறையில் எதிர்கரையில் களபூமித் துறைமுகத்தின் அருகேயுள்ள தோப்புக்காடு முன்பு முஸ்லிம் இருக்கையில் இருந்ததென்றும் அப்போது அவ்விடம் "தொப்புக்காடு" என்று அழைக்கப்பட்டு பின்பு "தோப்புக்காடு" என மாற்றம் பெற்றது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் வேறு எதிரிகளினால் ஆபத்துக்கள் ஏற்படாமல் பாதுகாக்க ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையே கடலின் நடுவேயுள்ள ஒரு கற்பாறையினாலான கடற்கோட்டையைக் கட்டினர். இதிலிருந்து நாம் போர்த்துக்கேயரும் இக் கடற்பரப்பை தங்கள் முக்கிய கடற்படைத் தளமாகக் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியலாம்.

போர்த்துக்கேயருக்குப் பின் வந்த ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாண இராச்சியத்தின் பாதுகாப்பு என்பது ஊர்காவற்றுறை காரைநகர் கடற்பரப்பை மையமாகக் கொண்டிருந்தது. ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டு இக்கடற்கோட்டை 1653 ம் ஆண்டளவில் திருத்தியமைக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. மேலும் ஒல்லாந்தர் காலத்தில் காரைதீவு களபூமித்துறை யானைத் துறைமுகமாக இருந்து வந்தது. அதாவது ஒல்லாந்தர் யானை வியாபாரத்தில் முதலிடம் வகித்தனர். இவ்வாறு இலங்கைக் காடுகளில் வசித்த யானைகளைப் பிடித்து யாழ்ப்பாணத்தில் கொண்டு வந்து காரைதீவுத்துறையில் வைத்து கடல் மார்க்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிற்கு அனுப்பி இந்திய அரசுகளுக்கு விற்பனை செய்து அதிக வருமானத்தைச் சம்பாதித்தனர். இதனால் களபூமித் துறைமுகம் யானைப்பாலம் எனவும் அழைக்கப்பட்டது எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் களபூமித்துறையானது பல பொருட்களில் இறக்குமதித்துறைமுகமாக இருந்து வந்தது. மேலும் யாழ்ப்பாணத்திற்கு ஆங்கிலேயர் புகையிரதப் பாதையை நிர்ணயிக்க எண்ணிய போது அதன் முடிவிடத்தை ஊர்காவற்றுறையில் வைக்க வேண்டுமென 1869ம் ஆண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபரான "துவைனந்துறை"அவர்கள் முயற்சித்தார். எனினும் புகையிரதப்பகுதி எஞ்சினியர் வைக்க முடியாது எனக் குறிப்பிட்டார். அத்துடன் "துவைனந்துறை" அவர்கள் எடுத்த முயற்சியானது களபூமித் துறைமுகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுகின்றது.

ஆங்கிலேயர் காலத்தின் பின் சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து யாழ்ப்பாண பெருநிலப்பரப்பிலிருந்து அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு செல்வோர் இத்துறைமுகத்தினூடாகப் பயணம் செய்து வந்தனர். குறிப்பாக நயினை நாகபூசணி அம்பாள் திருவிழாக்காலங்களிலும் இத்துறைமுகம் முக்கியம் பெறுகின்றமை இன்றும் காணலாம். யாழ்ப்பாணப் பண்ணைப்பாலம் அமைக்கும் வரை இத்துறையூடாக தீவுகளுக்குப் பயணம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடலாம்.

1971ம் ஆண்டு இலங்கை அரசுக்கு எதிராக இடம் பெற்ற சிங்கள இளைஞர்களின் போராட்டத்தின் போது சிறை செய்யப்பட்ட "றோகன விஜயவீர" காரைநகர் கடற்படை உதவியுடன் கடற்கோட்டையில் சிறை வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதைவிட ஈழப்போராட்டத்தின் போது வடபகுதியானது இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு உட்பட்ட போது இத்துறைமுகத்தில் பெரிய கடற்படைத்தளமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று அத்துறைமுகத்தின் மேற்குப்பகுதியை அண்டிய பகுதியில் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படைத்தளம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைமுகமானது சோழர் காலத்திருந்து இற்றை வரை யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் முக்கிய இடத்தினை வகித்து வருவதோடு இன்றைய காலகட்டத்தில் ஊர்காவற்றுறைக்கும் காரைநகர் துறைமுகத்துக்கமிடையே .இடையே ஒரு பெரியபாலம் அமைக்கப்பட வேண்டும் என்பதே பலருடைய அபிப்பிராயமாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.மு.சு.வேலாயுதபிள்ளை**
**தலைவர், மணிவாசகர் சபை**

# காரைநகர் மணிவாசகர் சபை

திருவும் கல்வியும் சீரும் ஒருங்கே அமையப் பெற்றும் ஈழத்துச் சிதம்பரம் என்றும் சிவதலத்தை தன்னகத்தே கொண்டு மிளிரும் காரைநகரில் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் பிரமாதி வருடம் மார்கழித் திங்கள் 17ம் நாள் (1940.01.01) ஆரம்பிக்கப்பட்ட சபையே காரைநகர் மணிவாசகர் சபை ஆகும். இச் சபையின் ஸ்தாபகராகவும் ஆரம்ப கால தலைவராகவும் திகழ்ந்து இன்றைய போசகராகவும் விளங்கிக் கொண்டிருப்பவர் ஆயிரம் பிறை கண்ட மூதறிஞர் பண்டிதமணி கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் ஆவார். இவருடன் திருவாளர்கள் தம்பு இராசரத்தினம், நமசிவாயம் அருளையா, விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் ஆகியோர் சபை ஆரம்பிப்பதற்கு பேருதவி புரிந்தவர்கள் ஆவர்.

பிற இனத்தவர்களாலும் பிற மதத்தவர்களாலும் போற்றப்படும் முதன்மை நூலாகவும் ஆன்மீகத் துறைக்கு ஒப்பற்ற வழிகாட்டி நூலாகவும் விளங்குவது மணிவாசகப் பெருந்தகை தந்த திருவாசகமாகும். இத்திருவாசக நூலைப் பொருளுணர்ந்து ஓதிப் பயனுறவும் மேன்மை கொள் சைவநீதி உலகெங்கும் விளங்க வேண்டுமென்ற உயர் நோக்கோடு இச்சபை உருவாக்கப்பட்டது.

இச்சபை ஆரம்ப காலத்தில் மாணவர்களுக்கு சைவசமய பாடங்களைப் போதித்தும் நன்நெறிகாட்டும் நீதிநூல் பாடல்கள் திருவாசகப் பாடல்களை மனனம் செய்வித்தும் போட்டிகள் நடாத்தியும் வந்தது. சடையாளி வைரவர் கோவிலடிப் பகுதியில் மணிவாசகர் வாசிகசாலையை நிறுவி தமிழ், சமய நூல்கள், தினசரிப் பத்திரிகைகள் வழங்கி அவற்றினூடாகவும் பெரியோர்களின் அறிவுரைகள் ஊடாகவும் சமயப் பற்றையும் சமய நம்பிக்கையையும் வளர்த்து வந்துள்ளது.

1955ம் ஆண்டு முதல் இன்று வரை ஈழத்துச்சிதம்பரத்தில் நடைபெற்று வரும் மார்கழி திருவாதிரை திருவிழாத் திருநாளில் நான்கு/மூன்று நாட்களுக்கு மணிவாசகர் விழாவை வருடம் தோறும் நடாத்தி வருவதே இச் சபையின் சிறப்பான தொண்டு ஆகும்.

இலங்கையிலுள்ள உயர்வான சைவப் பேரறிஞர்கள் இவ் விழாவில் கலந்து சொற்பொழிவு ஆற்றாதவர்கள் இல்லை எனலாம். மணிவாசகர் விழாவில் சொற்பொழிவு ஆற்றுவது ஒரு பெரிய கௌரவம் என்று அறிஞர்கள் கருதுமளவிற்கு சபை உயர்ந்த நிலையில் இருந்து வருகிறது. கடந்த 73 ஆண்டுகளாக ஐநூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் இலங்கை இந்திய பேரறிஞர்கள் கலந்து சொற்பொழிவு ஆற்றிய பெருமை சபைக்கு உண்டு. தமிழகத்திலிருந்து சொற்பொழிவாற்றுவதற்காக டாக்டர் சொ. சிங்காரவேலன், உயர்திரு வச்சிரவேலு முதலியார், மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், உயர்திரு தொ.மு. பாஸ்கரத் தொண்டமான், புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.குழந்தை அம்மாள், வித்துவான் கபி.வா. ஜெகன்நாதன், வித்துவான் வி.குருசாமிதேசிகர், வித்துவான் இரா . செல்வகணபதி, ப.நீலா முதலிய அறிஞர் பெருமக்களும் அண்மைக் காலமாக காவாய் சைவ ஆதீன முதல்வர் ரிசி தொணடுநாதன் சுவாமிகள் (2008) வாரியாரின் வாரிசு ஆன்மீகத் திலகம் தெ.ச. மங்கையற்கரசி (2009), திருப்பனந்தாள் காசி திருமடத்தின் இணையடிகள் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் (2010), லண்டன் மெய்கண்டான் ஆதீன முதல்வர் சிவதிரு யோகானந்த அடிகள் மற்றும் சைவப் பேரவை உறுப்பினர்கள் (2010) பேராசிரியர் சிவ.அ.தியாகராசன் (2011) சித்தாந்த ரத்தினம் புலவர்மாமணி ச.அருணசடேசன் ஆ.யு (2012) ஆகியோர் வருகை தந்து சொற்பொழிவு ஆற்றிய பெருமை சபைக்குரியது.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல வருடங்களாகத் தொடர்ந்து சொற்பொழிவாற்றியதையிட்டு "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டத்தயையும் சூட்டியும் பொன்னாடை பொற்பதக்கம் சார்த்தியும் கௌரவித்தது. மேலும் தமிழக அறிஞர்கள் யாவரையும் போற்றியும் வாழ்த்தியும் பட்டமளித்தும் சான்றிதழ் வழங்கியும் சிறப்புச் செய்துள்ளது.

காரைநகர் மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் ஆண்டு தோறும் சைவசமயப் பாடப் பரீட்சையை தரம் 2 இலிருந்து தரம் 11வரை நடாத்தி மிக உயர்ந்த புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்குத் தங்கப்பதக்கம் அளித்தும் வகுப்பு ரீதியாக முதல் ஐந்து மாணவர்களுக்குப் புத்தகப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கியும் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் கொடுத்தும் கௌரவித்து வருகிறது.

மேலும் மாணவரிடையே சமயப்பற்றையும் சமய நம்பிக்கையையும் வளர்க்கும் பொருட்டு சமயப் பேச்சுப் போட்டி, திருவாசக மனனப் போட்டி, திருமுறை பண்ணிசைப் போட்டி, வில்லிசைப் போட்டி, பஜனைப் போட்டி ஆகிய நிகழ்வுகளை வருடம் தோறும் நிகழ்த்தி முதன்மை பெறும் மூன்று மாணவர்களுக்குப் புத்தகப் பரிசு வழங்கி வருகிறது. முதலாம் இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவ மாணவிகள் விழா நிகழ்வில் கலந்து தம் நிகழ்வை மேடையேற்றும் வாய்ப்பையும் அளித்து வருகிறது.

திருவாசகத் தீந்தமிழைப் பரப்பி ஞான அனுபவத்தை வளர்க்க பயனுள்ள நூல்களை காலம் காலமாக இச்சபை வெளியிட்டு வருகிறது. திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களுக்கு உரை எழுதியும் சைவ சமய வளர்ச்சி, மணிவாசகர் சபை மலர்கள், சபை பொன்விழா மலர் ஆகிய நூல்களை வெளியிட்டும் ஈழத்துச் சிதம்பர புராணம், ஆண்டிக்கேணி ஐயனார் புராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்த உரிமையும் சபைக்கு உரியது. பண்டிதர் திரு சு. அம்பலவாணர் அவர்கள் திருவாசக ஆராய்ச்சி உரை செய்வதற்கும் வெளியிடுவதற்கும் தூண்டு கோலாக இருந்து வந்ததும் இச் சபையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர். அ.மனோகரன்

# காரைநகர் "சைவ மகாசபை" ஒரு வரலாற்று நோக்கு

சிவநெறியும் செந்தமிழும் சேர்ந்திலங்கும் திருவூர் காரைநகர் சுந்தரேஸ்வரரும் சௌதாராம்பிகையும் துணை நிற்கக் கல்வியும் செல்வமும் தழைத்தோங்குவதும் இவ்வூரே. சைவசமயம் தெய்வப் பெருங் சமயம் சிவபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. இச்சமயத்தை ஆன்றோர் பலரும் தமது அருள் ஆற்றலால் போற்றிப் புரந்தனர். சைவ சமயிகள் தம் வாழ்வின் இலட்சியத்தை உணர்த்திப் போந்தனர். அவர்கள் பிற்காலத்தில் ஊர்கள் தோறும் வாழ்ந்த நல்லறிஞர்கள் தோத்திரமும், சாத்திரமும் கற்றுத் தெளிந்தோர் தம்முள் கூடி பிறருக்கு அப் பொருளை தெளிவிக்க முயன்றனர். அவ்வாறான ஓர் முயற்சியின் பயனாக தோன்றியதே "காரை இளைஞர் தேர்ச்சிச் சங்கம்" என்பதாகும்.

ஆனந்த வருடம் பங்குனி மாதம் 2ம் திகதி (1915.03.15) சித்தாந்த சைவஅபிமானி திரு.க.கதிரவேலு அவர்களின் உளக்கிளர்ச்சியை நண்பர் திருவாளர் மு. திசைநாயகத்திடம் கூற, அவர் தலைமையில் ஆயிலி சிவஞானோதய வித்தியாலய மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் திருவாளர்கள் இ.நாகலிங்கம், ஆ.முருகேசு, இ.கந்தையா, ஆ.ச.கதிரவேல், வே.தம்பிஜயா, அ.சின்னத்தம்பி, க.நவரெத்தினம், பிரம்மஸ்ரீ கா.சி.மஹேசசர்மா முதலியோர் கூட்டாக எடுத்த தீர்மானம் காரைநகர் மாணவர் கல்வியில் முன்னேற்றமடையச் செய்வது எனும் நோக்கமாகக் கொண்டதே "காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்" ஆகும்.

மேற்கூறப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற மாணவர்களை ஒன்று கூட்டி மொழி, சமயம், சாஸ்திரம், கணிதம், அறிவியல் என்பவற்றை போதித்து வந்தது. இளைஞர்களுடன் ஆர்வம் இதில் மேலிட 1918.12.21ம் திகதி "காரை இந்து வாலிப சங்கம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்று முதலாவது தலைவராக திருவாளர் பொ.வேலுப்பிள்ளை அவர்கள் நியமனம் பெற்றார். இச்சங்கம் சமய பிரசாரம், சமய வகுப்புக்களை நடத்தி வந்தது. இக் காலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி வித்தியாசாலைத் (காரைநகர் இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியராக இருந்த பிரம்மஸ்ரீ ஈ.கே சுப்பிரமயணிய ஜயர், சமய வகுப்புக்களுக்கு பொறுப்பேற்று நடத்தினார். பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர ஜயர் அவர்களும் திரு. மு. திசைநாயகம் அவர்களும் உதவியாக இருந்தனர். இதன் பலனாக கிராம மத்தியில் சொந்தமாக கட்டடம் அமைக்க நிர்வாகசபை தீர்மானித்தது. பூதனடைப்பு எனும் பெயருடைய திருமதி வே. வள்ளியம்மைக்குச் சொந்தமான காணியில் இரண்டு பரப்பினை திரு. இ.நாகலிங்கம் அவர்கள் நன்கொடையாக பெற்றுக் கொடுக்க 1920.07.17 வெள்ளிக்கிழமை அத்திபாரம் இடப்பட்டு 1921 சித்திரை மாதம் புதுக்கட்டட திறப்பு விழா நடைபெற்றது. வருட இறுதிப்பகுதியில் ஒரு நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பலரும் வந்து வாசித்து பயன் பெறும் தன்மை உருவாக்கப்பட்டது. (காரைநகரின் முதலாவது பொது நூலகம் இது என்பர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வளர்ச்சி பெற்ற சங்கம் 1924.07.14 ஆம் திகதி சேர். .வை. துரைச்சுவாமி தலைமையில் ஒன்பதாவது பொதுக்கூட்டத்தை நடத்தியது. அதில் சிறப்பு சொற்பொழிவு ஆற்ற அழைக்கப்பட்ட ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள் இளையோர், முதியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் சமமாக பயனடையவும் தொண்டு செய்யவும் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து "சைவமகா சபை" எனும் திருநாமத்தை சூட்டுவதாக அறிவித்தார். இதன் பயனாக 1924.12.12 இல் சபையின் வளர்ச்சி கருதியும் மகா சபையாக பரிணமித்த பின் பெருங் கூட்டங்கள் நடாத்தவும் தேசிய வகுப்புக்கள் நடத்தவும் என பெரிய மண்டபம் ஒன்றை ஆயிரம் ரூபா செலவில் கட்டி முடித்தார்கள். 1925 ஆண்டுக்கூட்டம் சேர். பொன். இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. தொழிற் கல்வியை நோக்கமாகக் கொண்டு நெசவுப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க காரை மலாய ஐக்கிய சங்கம் ரூபா 1500ஃஸ்ரீ நன்கொடை வழங்கினார். திரு. ஈ. நாகலிங்கம் அவர்கள் சபையில் இட வசதி இன்மையால் வியாவில் சைவ வித்தியாலயத்தில் இதனை நடாத்தி வந்தனர். சில ஆண்டுகள் செல்ல இம் முயற்சி பயன் இன்றி கைவிடப்பட்டது.

காலப் போக்கில் சபையின் ஓர் அங்கமாக வியாவில் கடற்கரையில் ஒரு மடாலயமும் புத்தகசாலையும் அமைத்து ஒரு ஆசாரியாரை குடியிருத்தவும் முயன்றனர். சபை கட்டடம் பழுதடைந்ததால் 1940ம் ஆண்டு நான்கு மூலையில் அறைகளைக் கொண்ட பெரிய மண்டபம் ஒன்று அமைக்கும் பணியை தொடங்கி 1941ல் செய்து முடித்தனர். தென்மேற்கு அறை ஆ.சங்கரப்பிள்ளையும் வடமேற்கு அறை முகாந்திரம் க.முத்துக்குமாருவும் தென்கிழக்கு அறை காரை அபிவிருத்தி சபையாலும் வடகிழக்கு அறை திரு.மு.திசைநாயகம் நினைவாக பிரம்மஸ்ரீ கா. சி. மகேஹசர்மா , திரு அ.கணபதிப்பிள்ளை ஆகியோராலும் கட்டுவிக்கப்பட்டன.

மாலாய் நாட்டில் வாழ்ந்த வைத்தியகலாநிதி திரு ச. கணபதிப்பிள்ளை அவர்கள் கட்டடத்தின் கிழக்கிலிருந்த நிலத்துண்டினை ரூபா 1300/=க்கு வாங்கி 1953.03.05 ம்திகதி நன்கொடையாகக் கொடுத்தனர். .திரு ஆ. தியாகராஜா திரு.மூ.ஆ.கந்தையா, திரு.ச.நல்லதம்பி போன்றோர் சபை முழுமையடையச் செய்த பரோபகாரிகளாவர். இச்சபை 1955.10.19ம் திகதி 3:102ஆம் இலக்க பொதுஸ்தாபனச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றது. இதனை காரை அபிவிருத்திச் சபை தலைவர் திரு.வே.தில்லைநாதன் சட்டத்தரணி அவர்கள் செய்து உதவினார். 1965.02.04 ம் திகதி தொடக்கம் கே.சி. நடராசா நன்கொடையால் தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை பூசை அறையில் தியானம், செபம் முதலிய கிரமமாக நடைபெற்று வந்தன.

காரை அபிவிருத்திச் சபை (கொழும்பு, சர்வோதயம்) திரு வை. சுந்தமூர்த்தி அவர்களும் இச்சபையை காரைநகருக்கான மத்திய நிலையமாகக் கொண்டு சகல காரியங்களையும் நிறைவேற்றி வந்தனர். இதேவேளை காரை மலாய் சங்கத்தினர் வேண்டிய காலத்து நிதி உதவி அளித்து சபையை போசித்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1926ம் ஆண்டில் 347 புத்தகங்கள் (279 ஆங்கிலம் 126 தமிழ் ), 13 பத்திரிகைகள், சஞ்சிகைகளும் கொண்ட பெரு வாசிகசாலையாக விளங்கியது. ஆரம்ப காலம் முதல் சமய வகுப்புகளும் சமய பாடப் பரீட்சைகளும் நடைபெற்று வந்தன. சைவ சித்தாந்த வகுப்புக்களை பரமேஸ்வராக் கல்லூரி உப அதிபர் திரு.மு.ஞானப்பிரகாசம் B.A BSC அவர்களால் நடாத்தப்பட்டு வந்தது. தமிழ் பண்டித வகுப்புக்கள் ஶ்ரீமத் சி.சுப்பிரமணிய தேசிகர் முதலானோரினால் நடாத்தப்பட்ட இலக்கிய இலக்கண விளக்கவுரைகள் பல காலத்துக்குக் காலம் பலராலும் நிகழ்த்தப்பட்டன. இதன் பலன் பெற்றோர் பலர்.

இல் சபையானது OUR YOUNG MEN AND THEIR CULTURE, நரக சதுர்த்ததி ஸ்நானம், திருமுறைப் பெருமை நித்தயகருமம், நடராஜ வடிவம், தில்லைத் திருநடனம், குருகுல வித்தியாலயம், மஹோற்சவ விளக்கம், புதுவருச சோபனம், திருவெம்பாவை விளக்கம் போன்ற பல நூல்களையும் அவ்வப்போது பல சமய சமூக விழிப்பூணர்வூட்டும் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளது. 1967ம் ஆண்டில் சிவநெறி கலாநிதி, இலக்கிய கலாநிதி, பண்டிதர் மூதறிஞர் கு. வைத்தீஸ்வரக் குருக்களை ஆசிரியராகக் கொண்டு பொன்விழா மலர் ஒன்றினையும் வெளியிட்டது. இன்று சபை பற்றிய விடயங்களை ஓரளவுக்காயினும் அறிய அம்மலரே ஆதாரமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. குருக்கள் ஜயாவிற்கு இவ்விடத்தில் வணக்கமும் நன்றியும் கூற கடமைப்பட்டுள்ளோம்.

சைவ மகா சபை என்ற பெயரைத் தாங்கி இருந்தாலும் இதன் நோக்கங்கள் காலவோட்டத்திற்கு ஏற்ப விரிவு பெற்றமையால் பிற் காலத்தில் சைவ சமய நிழ்வுகள் மட்டுமன்றி பல பெரியார்களை அறிவார்ந்த சொற்பொழிவுகளையும் நிகழ்களமாக நடத்தியுள்ளது. அந்த வகையில் உலக புகழ் பெற்ற அறிஞர்களான மகாத்மா காந்தி, சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார், பண்டிதர் ஜவகர்லால் நேரு, ஶ்ரீமதி கமலா நேரு, இந்திராகாந்தி, கமலாதேவி, சட்டோ பாத்தியாய வி.வி.கிரி போன்றோரும் ஶ்ரீமத் சுவாமி .விபுலானந்தர், சுவாமிசதானந்தா, சுவாமி சர்வானந்தர், சுவாமி சச்சிதானந்த ராஜகேசி (சங்கர சுப்பையர்), ஶ்ரீமத் மகா தேவ சுவாமி, நாகலிங்க சுவாமி, யோகர் சுவாமிகள், சித்தார்ந்த சரவம் ஈசான சிவாசாரியர் முதலிய சைவ சமய மகான்களும் சைவ சித்த அறிஞர்கள், தமிழ் அறிஞர்கள், இலக்கிய இலக்கணம் ஜம்பவான்கள் என்று போற்றப்படும் திரு.சத்தியமூர்த்தி, து.ச.கந்தசாமி, சே.வை.துரைசுவாமி, டாக்டர்.ரா.பி.சேதுப்பிள்ளை, ஶ்ரீ சுப்பிரமணிய முதலியார் (சரலாலய தம்பிரான்), ஶ்ரீ.எம்.ராமச்சந்திர செட்டியார், சைவ திருவாளர் ந. சிவகுருநாதப்பிள்ளை, அ.ச.ஞானசம்மந்தன், திருப்புகழ் மவிரி எம்.கிருஸ்ணசாமி ஐயர், வித்துவான் அருணை வடிவேலு முதலியார், பண்டித மணி சு. நவநீத கிருஸ்ணபாரதி, கௌரவ.எம்.எஸ்.அனே, க.வச்சிரவேலு முதலியார், வித்துவான் சி.வா.ஜகநாதன், பண்டிதர் வே.மகாலிங்கசிவம், பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை, சைவபெரியார் சு.சிவபாதசுந்தரம், சேர் பொன் இராமநாதன், டாக்டர் பீம்சேன் சகசார், சு.ராசரத்தினம் போன்ற பல சைவ தமிழ் அறிஞர்கள் சொற்பொழிவாற்றிட காரை மக்கள் மட்டுமன்றி அயற் கிராம மக்களும் பயன் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறிஞர் கூட்டம் கூடுவதனால் அவ்வப்போது நாட்டின் பல பாகத்தவரும் சபை நிகழ்வுகளை கேள்வியுற்று வந்து கலந்து பயன் பெற்றனர். 1983, 1984 காலப்பகுதி வரை மிகச் சிறப்புற நடந்து வந்த சபை நிகழ்வுகள் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால் அவ்வப்போது தளர்வுற்றாலும் பண்ணிசை வகுப்புகள், குருபூசை தினங்கள், சேக்கிழார் விழா போன்றவற்றை விசேடமாக நடத்தி வந்தது. காலை, மாலை அமர்வுகளாகவும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளாகவும் இசை அரங்கம், புராண நாடகம் போன்றன இரவுவேளைகளிலும் நடைபெற்று வந்துள்ளது. நாட்டின் கெடுபிடிகள் காரணமாக இளையோர் பெரும் கூட்டம் கூடுவது தடைப்பட நிகழ்வுகள் குறைவுபட்டன. மாணர்கள் அறிவு பசிக்கு நூலகமும் இளையோர் கூடி மகா சபை முன்றலில் உள்ள திடலில் கரப்பந்து விளையாடுவதுமாக 1990 வரை நடைபெற்று வந்தது. நாட்டின் சூழல்கள் திரிபுபடும் வரை பொறியியலாளர், வைத்தியர், ஆசிரியர், மாணவர், தொழிலாளர், கடை முதலாளிகள் என அனைவரும் கூடும் இடமாக இது இருந்து வந்துள்ளது. இச்சபையின் தொடக்ககால நோக்கமாகிய காரை மாணவர் கல்வி வளர்ச்சி எனும் நோக்கில் சபையில் முன்பள்ளியும் அதன் விழாக்கள் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடந்து வருவது தமது தாய்நாட்டின் சைவ தமிழ் சிந்தனையாளர்களுக்கும் அவர்களின் பணிகளுக்கும் செய்யும் பெருமரியாதை ஆகும். விரைவில் இச்சபை தனது முன்னைய பணிகளை தொடர்வது தற்போதைய தேவைப்பாடாக உள்ளது.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெ. சோமசுந்தரக் குருக்கள்
தலைவர்
விவசாய சம்மேளனம்
காரைநகர் மேற்கு

# காரைநகர் விவசாய சம்மேளனங்கள்

காரைநகர் விவசாயிகளின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட ஓர் நிலையமே "காரைநகர் கமநல சேவைகள் நிலையம்" ஆகும். இந்நிலையமானது கௌரவ இந்துக் கலாசார அலுவல்கள் அமைச்சின் உயர்திரு .தி. மகேஸ்வரனாலும் கௌரவ விவசாய கால்நடை அமைச்சின் செயலாளர் உயர்திரு "தனசேன கெட்டி ஆராட்சி" அவர்களாலும் ஆடி 2003 ம் ஆண்டு ஜப்பசி மாதம் 11ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு 2004ம் ஆண்டு ஜப்பசி மாதம் 4ம் திகதி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு செல்லையா பத்மநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கமநல சேவைகள் நிலையத்தின் அரம்ப கால பெரும்பாக உத்தியோகத்தராக திரு.S. சோதிநாதன் அவர்கள் கடமை ஆற்றினார். தற்போது பெரும்பாக உத்தியோகத்தராக திரு. கு. கோகுலன் அவர்கள் கடமையாற்றினார். தற்போது பெரும்பாக உத்தியோகத்தராக ஆற்றுகின்றார். இந்நிலையத்தில் விவசாயிகளை அங்கத்தவராகக் கொண்டு கமநல சேவைகள் குழு உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கான சேவைகளை இக்குழுவின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் 9 கிராம சேவையாளர்களை உள்ளடக்கியவாறு 5 விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் காரைநகர் கிழக்கு, காரைநகர் மேற்கு, காரைநகர் வடக்கு, காரைநகர் தெற்கு, காரைநகர் தென்மேற்கு என்பனவாகும். இவற்றுக்கென தனித்தனியான நிர்வாக கட்டமைப்புக்கள் உள்ளன. மேலும் இப்பிரதேசத்தில் விவசாய நெற்காணிகளாக 1200 ஏக்கரும் மேட்டுக் காணி 730 ஏக்கரும் விவசாய நிலங்களாக உள்ளன. 25 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், 15 விவசாய வீதிகளும் 10 விவசாய வாய்க்கால்களும் உள்ளன. இப்பிரதேச மொத்த சனத்தொகையில் 815 பேர் விவசாய அங்கத்தவர்களாக உள்ளனர். இந்த நிலைய விவசாய சம்மேளனங்களின் சேவைகள் நோக்கும் போது சிறுபோக பெரும்பாக உத்தியோகத்தர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கு மேலதிகமாக திவிநெகும திட்டத்தினூடாக மாடு வளர்ப்பவர்கள், பயறு உற்பத்தியாளர்கள், தேனீ வளர்ப்பவர்கள், நிலக்கடலை உற்பத்தியாளர்கள் போனற பயனாளிகளை தெரிவு செய்து அவர்களுக்கு கமநலசேவை நிலையம் ஊடாக நிதியுதவியினை பெற்றுக் கொடுத்துள்ளது.

இவற்றை விட விவசாயிகளின் நன்மை கருதி மண்வெட்டி, வீட்டுத் தோட்ட செய்கைகளுக்கான விதையினங்களை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கின்றது. காலபோக செய்கையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளின் உழுவு வேலைகளை குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தி அதனைப் பராமரித்தல், ஏலம் விடுதல், போன்ற சேவைகளையும் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வழிநடாத்தலில் விவசாயிகள் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.

மேலும் விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான புதிய தொழிநுட்ப அறிவினை பெற்றுக் கொடுப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. காணிப் பிரச்சனைகள், எல்லைப்பிரச்சனைகள் என்பவற்றையும் பெரும்பாக உத்தியோகத்தருடன் இணைத்து இலகுவாகவும் சுமூகமாகவும் தீர்த்து வைக்கின்றது. மேலும் வருடந்தோறும் விவசாயிகளின் பிரச்சனையை தீர்க்கும் முகமாக குளங்கள், வாய்க்கால்கள் என்பன புனரமைப்புச் செய்வதில் பங்களிப்புச் செய்கின்றன.

இவ்வாறு கமநல சேவைகள் நிலையம், பிரதேச செயலகம், அரச திணைக்களங்களுடளும் ஏனைய அரச சார்பற்ற திணைக்களங்களுடனும் இணைந்து விவசாயிகள் நன்மை பெறுவதற்கு ஆவன செய்வதில் விவசாய சம்மேளனங்கள் முன்னுரிமை வழங்குகின்றது.

* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.த .பிரதீபன்,

**காரைநகர் பிரதேச இளைஞர் சமாசத் தலைவர்**

## காரைநகர் இளைஞர் கழகங்கள்

| கழகத்தின்பெயர் | கி.சே பிரிவு | பதிவு இல | பதிவு செய்த திகதி | அங்கத்தவர் எண் |
|---|---|---|---|---|
| காரை தென்கிழக்கு இளைஞர் கழகம் | J/43 | வட/யா/காரை/01 | 15.03.2013 | 25 |
| காரை கலைத் தென்றல் இளைஞர் கழகம் | J/40 | வட/யா/காரை/02 | 15.03.2013 | 85 |
| காரைதென்மேற்கு இளைஞர் கழகம் | J/45 | வட/யா/காரை/04 | 18.03.2013 | 141 |
| காரை மத்தி ஒளிச்சுடர் இளைஞர் கழகம் | J/48 | வட/யா/காரை/13 | 16.04.2013 | 102 |
| காரை வடக்கு இளைஞர் கழகம் | J/46 | வட/யா/காரை/05 | 11.03.2013 | 30 |
| தோப்புக்காடு இளைஞர் கழகம் | J/44 | வட/யா/காரை/07 | 11.03.2013 | 26 |
| காரை வடகிழக்கு இளைஞர் கழகம் | J/47 | வட/யா/காரை/08 | 11.03.2013 | 30 |
| காரை தென்மேற்கு இளைஞர் கழகம் | J/45 | வட/யா/காரை/11 | 11.03.2013 | 30 |
| காரை சுந்தரமூர்த்தி வித்தியாலய இளைஞர் கழகம் | J/44 | வட/யா/காரை/09 | 11.03.2013 | 75 |
| காரை கிழக்கு இளைஞர் கழகம் | J/42 | வட/யா/காரை/06 | 11.03.2013 | 30 |
| காரை தியாகராஜா இளைஞர் கழகம் | J/47 | வட/யா/காரை/10 | 11.03.2013 | 100 |
| காரை யாழ்ற்றன்கல்லூரி இளைஞர்கழகம் | J/40 | வட/யா/காரை/12 | 11.03.2013 | 120 |
| காரைவியாவில் சைவ வித்தியாலய இளைஞர் கழகம் | J/45 | வட/யா/காரை/03 | 11.03.2013 | 35 |

இளைஞர் கழகங்களின் செயற்பாடு எனும் வகையில் எல்லா இளைஞர் கழகங்களினையும் உள்ளடக்கிய பிரதேச இளைஞர் சம்மேளனம் ஒன்று அமைக்கப் பெற்று அதனூடாக கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டியினை நடாத்துதல் மற்றும் பரிமாற்றுத் திட்டம் மற்றும் இளைஞர்களின் சிறந்த தலைவர்களாக உருவாக்க கூடிய வகையில் இளைஞர் தலைமைத்துவ பயிற்சியினை வழங்குதல், புலமைப்பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கினை வழங்குதல் போன்ற செயற்பாட்டை மேற்கொண்டு வருதல் என்பன இனைஞர் கழக மற்றும் சம்மேளனத்தினுடைய செயற்பாடாக காணப்படுகின்றது.

இதனை விட கழக அங்கத்தவர் ஒன்றிணைந்த சிரமதான பணியினை மேற்கொள்ளுதல் 2013.06.23 திகதி ஒளிச்சுடர் இளைஞர் கழக கரப்பந்தாட்ட மைதானம் சிரமதான பணியினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

.

பிரதேச ரீதியாக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்தல் தொடர்பாக கழகத்தின் தலைவர், பிரதேச இளைஞர் சம்மேளனத் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், அமைப்பாளர் ஆகியோர் போட்டியிடலாம். அந்த வகையில் 2010 ஆண்டு காரைநகர் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சயந்தன் அவர்களும் 2013 ம் ஆண்டு காரைநகர் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் வு.பிரதீபன் அவர்களும் தெரிவானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள்:- 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த பிரதேச சம்மேளனம் எனும் வகையில் காரைநகர் பிரதேச இளைஞர் சம்மேளனம் 3ம் இடத்தினை தட்டிக் கொண்டது. சிறந்த இளைஞருக்கான விருது காரை ஒளிச்சுடர் இளைஞர் கழகத்தினைச் சேர்ந்த த..பிரதீபனுக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

2013ம் ஆண்டிற்கான பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் போது 13 இளைஞர் கழகங்கள் பங்குபற்றியது. இப் போட்டியில்

கரப்பந்தாட்டம்:- ஆண்:-ஒளிச்சுடர் இளைஞர் கழகம்
பெண்:- காரை யா /தியாகராஜா இளைஞர் கழகம்
உதைபந்தாட்டம்:-காரை வடகிழக்கு இளைஞர் கழகம்
கிரிக்கெற்:- ஆண்:- காரை யா/ யாழ்ற்றன் இளைஞர் கழகம்
பெண்:- தோப்புக்காடு இளைஞர் கழகம்
வலைப்பந்தாட்டம்:-ஆண்:- காரை யாஃ யாழ்ற்றன் இளைஞர் கழகம்
பெண்:- காரை யாஃ யாழ்ற்றன் இளைஞர் கழகம் வெற்றி பெற்றன.

விளையாட்டுக் கழகங்கள் விபரங்கள்

ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகம்
கலாநிதி விளையாட்டுக்கழகம்
சிவகௌரி விளையாட்டுக்கழகம்
அம்பாள் விளையாட்டுக்கழகம்
கலைத்தென்றல் விளையாட்டுக்கழகம்
தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்
இளம்தென்றல் விளையாட்டுக்கழகம்
கோவளம் விளையாட்டுக்கழகம்
நல்ல நண்பர்கள் விளையாட்டுக்கழகம்
இளம் சோலை விளையாட்டுக்கழகம்
விளானை விளையாட்டுக்கழகம்

மேற்படி கழகங்கள் காரைநகர் பிரதேசத்தினை உள்ளடக்கிய கழகங்களாக காணப்படுகின்றன. கழகங்களின் செயற்பாடுகளினை பொறுத்தவரையில் விளையாட்டுத்திறனை மையமாகக் கொண்டு கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக உதைபந்தாட்டம், கரப்பந்து, வலைப்பந்து, மென்பந்து(கிரிக்கெற்) போட்டியினை உற்சாகமாக விளையாடக் கூடிய கழகங்களாக காணப்படுகின்றது. இந்த வகையில் 2013ம் ஆண்டு பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியினை நோக்கும் போது கரப்பந்தாட்டத்தில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும் உதைபந்தாட்டத்தில் கலாநிதி விளையாட்டுக் கழகமும் வலைபந்தாட்டத்தில் (பெண்கள்) ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும் மென்பந்து(கிரிக்கெற்) ஆண்களில் கலாநிதி விளையாட்டுக் கழகமும் கபடி போட்டியில் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும் ஆண், பெண் மெய்வல்லுனர் போட்டியில் கலாநிதி விளையாட்டுக் கழகமும் வெற்றி வாகை சூடிக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைமத்தி மேம்பாட்டுக் கழகம்

## காரைநகர்

2013.07.04

| | |
|---|---|
| கழக உருவாக்கம்:- | 2004.05.04 |
| கழகத்தின் பெயர்:- | காரைமத்தி மேம்பாட்டுக்கழகம் |
| கழகத்தின் பதிவு இல:- | KR/AGA/SS/VO/01 |
| கழகத்தின் பதிவுத் திகதி:- | 2005.11.11 |
| கழகத்தின் நிதியாண்டு:- | டிசம்பர் 31 |
| கழகத்தின் முகவரி:- | முதன்மைச்சாலை, ஆலடி, காரைநகர். |
| கழகத்தின் தொழிற்பரப்பு:- | காரை-மத்தி, கிராமசேவையாளர் பிரிவு (J/48) ஆயினும் பொது வேலைத்திட்டங்கள் பொதுச்சபையின் அனுமதியுடன் காரைநகர் பிரதேசத்தை உள்ளடக்கும். |

முகாமைக்குழு:-

| | |
|---|---|
| தலைவர் - | திரு ந.கிஸ்ணபவன் |
| துணைத்தலைவர் - | திரு தி.சிதம்பரேஸ்வரன் |
| செயலாளர் - | திரு.க.நாகராசா |
| துணைச்செயலாளர்- | செல்வி வ.யோகமலர் |
| உறுப்பினர்கள் - | திரு இ.தர்மராசா |
| | திரு பொ.கிருஸ்ணகுமார் |
| | திருமதி இ.வசந்தராணி |

முகாமையாளர்:- செல்வி த.திருச்செல்வி (2011.05.01- இற்றைவரை)

2013.02.20 இல் வாழ்நாள் உறுப்பினர்கள் :- 111

சேவைச் சுருக்கக் குறிப்பு:-

- 2004ல் எமது பகுதியில் ஏற்பட்ட தீவிர தெற்றுநோய் பரம்பலின் போது(நெருப்புக்காய்ச்சல்) தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டமையும் பாதிக்கபட்டவர்களுக்கு மருத்துவ நிதி முற்பணங்களை வழங்கி உதவியமையும்.
- 2004ல் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மீள்தொழிலாக்க முற்பணம் கடற்றொழில் சங்கங்களுடாக புலம்பெயஉந்து வாழ்வோரின் உதவியுடன் வழங்கி தொழிலாக்கத்தினை மேம்படுத்தியமை.
- பொதுக் கிணறுகள் இறைத்தல்இ பொது வளவுகளிலுள்ள பற்றைகளை அகற்றல் போன்ற சிரமதானப்பணிகளில் இளைஞஉகளை ஈடுபடுத்தியமை.
- 2005ம் ஆண்டு தொடக்கம் காரைமத்தி பிரிவுரீதியாகவும்இ 2007ம் ஆண்டு தொடக்கம் காரைநகர் பிரதேச ரீதியாகவும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடாத்தி பணப்பரிசில்கள்இ பொருட்பரிசில்கள் என்பன வழங்கி கற்றலினை ஊக்குவித்து வருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢2008ம் ஆண்டு தொடக்கம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் க.பொ.த உ.த கற்கும் மாணவர்களில் சிலருக்கு கொடையாளர்களிடம் இருந்து நிதி பெற்று கற்றலுக்கான மாதாந்த ஊக்குவிப்பு நிதி வழங்கி வருதல்

➢இதே போன்று க.பொ.த உ.த பயிலும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கட்டணமின்றி கற்க ஆவன செய்தமை.

➢கழக எல்லைப்பரப்பில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல்கலைக்கழக மாணவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களுக்கு அவர்களின் உயர் கல்விக்கு உதவும் பொருட்டு கல்வி நிதிய முற்பணம் வழங்கி நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் பின்னர் மீள அறவிட்டு வந்தமை.

➢தரம்-05 புலமைப்பரிசில் தேர்வினை காரைவாழ் மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் பொருட்டு 2008ம் ஆண்டு தொடக்கம் 2010வரை தரம் - 04,05 மாணவர்களுக்கு தேர்வு வழிகாட்டற் பயிற்சித் தேர்வுகளை மாதாந்தம் நடாத்தி மீட்டல் வகுப்புக்களையும் விசேட வகுப்புக்களையும் மேற்கொண்டு வருடாந்தம் இதற்கான பரிசளிப்பினையும் நடாத்தி வந்தமை

➢கழக எல்லைப்பரப்பினுள்ளே வாழ்கின்ற பாடசாலை இடைவிலகிய மாணவர்களை இனங் கண்டு அவர்களுள் சிலருக்கு கழகத்தால் இயன்ற பொருத்தமான உதவிகளை வழங்கி அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்தமை.

➢மாணவர்களின் கோரிக்கைக்கு அமைவாக 2006.01.16 அன்று மாணவர் நூலகம் காரைநகர் பொன்னம்பலம் வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகம் காரைநகர் பிரதேச மாணவர்களின் நலன் கருதி 2007.01.05 தொடக்கம் எமது கழக அலுவலகத்துடன் இணைக்கப் பெற்று இயங்கி வந்ததுடன் இரவல் கொடுக்கும் பகுதிஇ வாசகர் பகுதி என்பவையும் செயற்பட்டு வந்தன. தற்போது அலுவலக இடமாற்றம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (2011.06.27)

➢சூழல் பாதுகாப்பின் ஓர் அங்கமாக அவ்வப்போது அரச, சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் மரநடுகைத் திட்டத்தை மேற்கொண்டு வந்தமை.

➢எமது பகுதியில் நிலவி வரும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக 2005.07.17ந் திகதியிலிருந்து காரை அபிவிருத்திச் சபையின் நீர்த்தாங்கி ஊர்தி மூலம் கிடைக்கும் குடிநீர் கழக எல்லைப் பரப்பினுள் பொருத்தமான ஆறு இடங்களில் நீர்த்தாங்கிகள் மூலம் சேகரித்து குறைந்தளவு இலாப நோக்கில் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.2010 ஒக்டோபர் தொடக்கம் காரை அபிவிருத்திச்சபை இதே நீர்த்தாங்கிகளில் வழங்கி வருகின்றது.

➢கழக எல்லைப் பரப்பினுள் வாழும் கணவனை இழந்த குடும்பங்களுள் பொருளாதாரத்தில் மிகுந்த நலிவுற்ற குடும்பங்களுக்கு சுயதொழில் திட்டத்துக்கான உள்ளீடுகள் வழங்கியமையும்இ உலருணவுஇ சேலைகள் வழங்கியமையும்.

➢காரைநகர் பிரதேசமக்களின் நலன் கருதி பத்திரிகைச்சேவை மற்றும் தொலைபேசிச்சேவை, என்பவற்றை வழங்கி வருதல். இதேபோன்று விசேடமாக மாணவர்களின் நலன் கருதி குறைந்த கட்டணத்தில் நிழற்பிரதி சேவையும், கணனி அச்சுப்பதிப்பு சேவையும் வழங்கி வருதல்.

➢கழக உறுப்பினர்களுக்கான சுயமுயற்சிக்கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருதல்.

➢2011 ஒக்டோபர் தொடக்கம் 2012 ஒக்டோபர் வரை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான சிங்கள மொழி வகுப்புக்கள் நடைபெற்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் பற்றிய தகவல்

1. பெயர்:- காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம்

- முகவரி:- மணற்காடு, காரைநகர்
- பதிவிலக்கமும் திகதியும்:- N.J/53/2003/09/05
- நிதியாண்டு:-ஒவ்வொரு வருடம் ஜனவரி 1ம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ம் திகதி வரை
- தொழிற்பரப்பு:- வடக்கு மாகாண சபையின் யாழ் மாவட்டத்தில் உள்ள காரைநகர் பிரதேச செயலக பிரிவாகும்
- அங்கத்துவம்:- காரைநகர் பிரதேசத்தில் உள்ள 10 பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்
- பங்கு:- ஒவ்வொரு சங்கங்களும் ரூபா ஐநூறு (500.00) பெறுமதியான பங்கினை கொண்டுள்ளது
- மேற்பார்வை செய்யும் திணைக்களங்கள்

1. நிதி நிர்வாக கட்டமைப்பு:- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
2. செயற்பாட்டு ஆலோசனைகள்:- கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம்

- தற்போதைய தொழிற்பாடு

1.கிளைச்சங்கங்களை மேற்பார்வை செய்தல்
2.கிளைச்சங்கங்களில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல்
3.கிளைச்சங்கங்களை அழைத்து மாதாந்த கூட்டங்களை நடாத்துதல்

- தற்பொழுது கடமையில் உள்ள நிர்வாகம் பற்றிய தகவல்கள்

தலைவர்:- திரு.பு.ஜெயதீபன்
உபதலைவர்:- திரு. மு.கணேஸ்
செலாளர்:- திரு.க.இராஜசந்திரன்
பொருளாளர்:- திரு. சி. வரதராசன்
நிர்வாக உறுப்பினர்கள்:-திரு.இ.மகாராணி
திரு.பா.கருணன்
திரு.சி. கந்தசிவநாதன்
திரு.பா. கிருஸ்ணமேனன்
திருமதி.இ.புவனேஸ்வரி

இவர்கள் 201204.22ம் திகதி சமாச உபவிதிப்படி இரண்டு வருடம் பதவி வகிப்பார்கள்.

- ஆளணி:- சமாசத்தில் செல்வி. மா.கோகிலேஸ்வரன் முகாமையாளராக கடமையாற்றி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ சமாச எதிர்கால திட்டங்கள்:-

1. திருமதி. க. கனகம்மா அவர்களால் நன்கொடையாக பெறப்பட்ட காணியில் சமாசத்திற்கு என ஓர் நிலையான கட்டடம் ஒன்று அமைத்தல்

2. UNDP நிறுவனத்தால் நன்கொடையாக பெறப்பட்டு செயற்பாடு இன்றி இருக்கும் ஐஸ் உற்பத்தி இயந்திரத்தை திருத்தம் செய்து ஐஸ் உற்பத்தி மேற்கொள்ளல்

3. தொடர்புபட்ட திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

**கிளைச்சங்கங்கள் பற்றிய தகவல்**

| தொடர் இல | சங்கத்தின் பெயர் | முகவரி | கிராம சேவையாளர் பிரிவு | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | வெடியரசன்வீதி காரைநகர் | J/48 | 316 |
| 02 | சிவகௌரி | பெரிய மணல் | J/47 | 245 |
| 03 | நீலங்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம | நீலங்காடு காரைநகர் | J/45 | 47 |
| 04 | வியாவில் ஐயனார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | வியாவில் காரைநகர் | J/45 | 48 |
| 05 | வேரப்பிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | வேப்பிட்டி கல்வந்தாழ்வு காரைநகர் | J/45 | 136 |
| 06 | மருதமலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம | மருதபுரம் காரைநகர் | J/40 | 135 |
| 07 | பிட்டியெல்லை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | பிட்டியெல்லைக ாரைநகர் | J/42 | 200 |
| 08 | பாலாவோடை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | பாலாவோடை காரைநகர் | J/44 | 63 |
| 09 | ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | ஊரி காரைநகர் | J/44 | 500 |
| 10 | தோப்புக்காடு சிறி முருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | தோப்புக்காடு காரைநகர் | J/44 | 69 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைச்சுடர் திரு.ந.சோதிநாதன்
அமைப்பாளரும் தலைவரும்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்

# கிழவன்காடு கலாமன்றம்

காரைநகரிலுள்ள மாணவர்கள் இசையோடு பாடவேண்டும் என்ற சிந்தனையில் பண்ணிசையுடன் இலவச சேவைகள் கடந்த 2002.03.01 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கலாமன்றம் தனது சேவையினை காரைநகரிலுள்ள சகல மக்களுக்கும் வழங்குகின்ற நிலையில் கிழவன்காடு என்ற சூழலில் ஆரம்பிக்கப்பட்டபடியால் "கிழவன்காடு கலாமன்றம்" எனும் பெயரினைக் கொண்டு இயங்கி வருகின்றது. இக் கலாமன்றத்தினுடைய சேவைகளுக்கு பலம் சேர்க்கும் வகையில் 2004ம் ஆண்டு பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார அமைச்சு, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் போனறவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இக்கலாமன்றத்தில் அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும், யோகாசனமும் தியானமும், மாலைகட்டுதல், கோலம் போடுதல், தோரணம் செய்தல் ஆகிய 13 கலைப்பயிற்சி வகுப்புக்களில் பயில்வதற்கு 160 மாணவர்கள் பதிவு செய்துள்ளதோடு 10 ஆசிரியர்கள் அவற்றை போதித்தும் வருகின்றனர். கலாமன்றம் ஆற்றி வரும் சேவைகளாக வருடாந்தம் மாணவர்களுக்கான கலைவிழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், கலை மற்றும் சமய சுற்றுலாக்கள், கண்காட்சிகளை நடாத்தி வருவதோடு ஆலயங்களில் பஜனை, சரியைத் தொண்டுகள், மற்றும் தாகசாந்தி நிலையம் அமைத்து பக்தர்கள் வழிபாடு செய்வதற்குத் துணைபுரிந்து வருகின்றது. கலாமன்றத்தினுடைய முக்கிய நோக்கமாக வட இலங்கை சங்கீத சபை, அமைச்சுக்கள், திணைக்களங்கள், பொதுஅமைப்புக்கள் போன்றவற்றினால் நடாத்தப்படும் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களது திறமைகள் வெளிப்படுவதற்கு வசதி செய்து கொடுப்பதோடு கலைமன்றத்தில் கலை விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகளை செய்வதாகும். கலாமன்றத்தினால் "மிருதங்க அரங்கேற்றம்" ஒன்று நடாத்தப்பட்டதுடன் "சிதம்பர தரிசனம்" இறுவட்டும் வெளியீடு செய்யப்பட்டது. கலாமன்றம் தனது சேவைக்காலத்தில் காரைநகரைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் காரை பரமேஸ்வரி கணேசன் அவர்களுக்கு "இராகசுரபி" என்னும் பட்டத்தினையும்கலாமன்ற மிருதங்க ஆசிரியர் திரு. மாரிமுத்து சிதம்பரநாதன் அவர்களுக்கு "லயஞானசுரபி" என்னும் கௌரவ பட்டத்தினையும் வழங்கியதோடு பல கலைஞர்களையும் கௌரவித்துள்ளது. கலாமன்ற சேவைகளை கௌரவிக்கும் வகையில் காரைநகர் பிரதேச செயலகத்தினால் 2010ம் ஆண்டு நடைபெற்ற கலாசார விழாவில் கலாமன்ற அமைப்பாளர் அவர்கள் "கலைச்சுடர்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கலாமன்றம் தனது கணக்கறிக்கையினையும் செயற்பாட்டறிக்கையினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாவருடம் வெளியிட்டு வருவது யாவரும் அறிந்ததே. கலாமன்ற கௌரவ உறுப்பினர் திரு. சண்முகம் சிவஞானம் அவர்கள் தமது பெற்றோரின் ஞாபகார்த்தமாக கலாமன்றம் தனது சேவைகளை சிறப்பாக செய்வதற்கு சொந்தமாக காணி கட்டிடங்களை கொள்வனவு செய்ததுடன் அதனை புனரமைப்புச் செய்து அழகுபடுத்தி அன்பளிப்பாக வழங்கியதோடு நிதியுதவியும் வழங்கியமை பாராட்டத்தக்கது. எதிர்காலத்தில் கலைமன்றம் தனது சிறப்பான சேவைகளை ஆற்றுவதற்கு அனைத்து உள்ளங்களின் பூரண ஒத்துழைப்பினை எதிர்பார்கின்றேன்.



* * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.பொ.சிவராஜசிவம்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கலாசார மத்திய நிலையம்**
**காரைநகர்**

## பாரம்பரிய பாவனைப்பொருட்களும் அவற்றின் பயன்பாடுகளும்

தமிழர்களால் காலம் காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த பொருட்கள் பல இன்று அருகிக் கொண்டே செல்கின்றமையைக் காணலாம். இப்பொருட்கள் நம் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவே காணப்படுகின்றன. இத்தகைய பொருட்கள் பற்றி இன்றைய சமுதாயம் மாத்திரமன்றி இனிவரும் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும்படியாக அதனை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நம் கிராமப்புற மக்களால் பயன்படுத்தப்பட்ட பாவனைப் பொருட்கள் அருகிக் கொண்டு செல்வதனைக் கண்டு நாம் கவலை கொள்ள வேண்டியுள்ளது. காரணம் எம் பண்பாட்டுக் கோலங்கள் நம் சமுதாயத்தின் பெருமையினை பறை சாற்றியவையாகும். நவீன நாகரிக வளர்ச்சியும் அதன்பால் கொண்ட மோகமும் நம் மக்களிடத்தில் பரவியமை பழைய பாரம்பரியப் பொருட்களை மறக்கச் செய்துள்ளது.

இலங்கையில் அந்நியராட்சி ஏற்பட்டமையால் மேலைத்தேய பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்பட்டு பழைய பொருட்களின் பாவனை சிறுகச்சிறுக குறைந்து செல்கின்றன. இந்த வகையிலே காலம்காலமாக ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இன்று உலகம் பூகோளக் கிராமமாகச் சுருங்கி விட்டது. நம் நாட்டு அரசியல் சூழ்நிலையால் மக்கள் புலம் பெயர்ந்து மேலைநாடுகட்குப் பெருமளவில் சென்று குடியேறியுள்ளனர். இதனால் அவர்களதும் அவர்களைச் சார்ந்தோரினதும் (உள்நாட்டிலுள்ளோர்) பாவனைப் பொருட்களில் மேலைநாட்டுச் சாயல் படிந்து போக்குவரத்துச் சாதனங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், தொழில் கருவிகள், கற்றல் உபகரணங்கள் போன்ற பல்வேறு பொருட்களின் பாவனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு. நவீன நாகரிக மோகம் இதற்கு வலுவூட்டியுள்ள இக்கால சமுதாயம் விரும்பியோ விரும்பாமலோ தெரிந்தோ தெரியாமலோ இம்மாற்றத்தினை ஏற்று செயற்பட்டு வருகின்றது. மின்சாரம் எரிபொருள் ஆகியவற்றின் பயன்பாட்டினால் எதையும் மிக இலகுவாக செய்வது பயனுடையதாயிற்று.

இன்றைய மனிதன் சிந்தித்துச் செயலாற்றியமையை அவனது பாவனைப்பொருட்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. நோயற்ற வாழ்வு, சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல், பொருட்களை வீணாக்காது பேணும் பண்பு, விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் பண்பு, இயற்கையான மூலப் பொருட்களைப் பயன்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், உடல் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகிய பண்புகள் அவன் சிந்தித்துச் செயலாற்றியமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனால் இன்றோ மனிதன் நாகரிக மோகத்தால் பயன்படுத்தப்படும் பொருட்களால் சூழல் மாசடைவதும் அவன் நோய்வாய்ப்படுவதும் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. சமுதாயத்தை அழிவடையச் செய்யும் ஆட்கொல்லி நோய்கள், தொற்று நோய்கள் ஆகியன உலகைப் பயமுறுத்தி வருகின்றன. இன்று மனித சமுதாயத்தின் எதிர்கால வாழ்வே கேள்விக்குறியாகி நிற்கின்றது. நவீன நாகரிக மோகத்தினால் ஏற்பட்டுள்ள இவ் விபரீதத்திலிருந்து விடுபட்டு நவீன சாதனங்களுக்குப் பதிலாக பாரம்பரியமாக நாம் பயன்படுத்தி வந்த சாதனங்களைப் பயன்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.

எனவே அப்பாரம்பரியப் பொருட்களையும் அதன் பயன்பாட்டினையும் அறிந்து அதனைப் பயன்படுத்தி சமுதாயம் நிலைபேறடையச் செய்வோமாக.

**1. வண்டில் 1. ஒற்றைத்திருக்கல் 11 இரட்டைத்திருக்கல்**

பயன்பாடு:- போக்குவரத்திற்கும், சாமான்களை ஏற்றிச் செல்லவும், விவசாயத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. நவீன போக்குவரத்துச் சாதனங்கள் வருமுன் இயற்கையான பொருளால் செய்யப்பட்டு எருதினைப் பயன்படுத்தி போக்குவரத்து செய்யப்பட்டது. இதனால் தீய விளைவுகள் ஏதுமின்றி அச்சமற்ற சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது. விரும்பிய நேரத்தில் விரும்பியவாறு பயன்படுத்தப்பட்டது. இதில் ஒற்றைத்திருக்கல் வண்டில் வெயில் மழை படாதவாறு மேலே மூடியபடி செய்யப்பட்டமையால் பெண்கள் கூடுதலாக போக்குவரத்துக்குப் பயன்படுத்தினர். அதிலும் உயர் அந்தஸ்தினை உடைய சமூகங்களில் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். குச்சுப்பாதைகள், மணல் நிலங்கள் போன்ற இடங்களிலெல்லாம் மிக இலகுவாக பயணம் செய்யக்கூடிய சாதனங்களாக இவை பயன்படுத்தப்படடது.

படவிளக்கம்:- மரத்தினால் செய்யப்பட்டது. பூட்டுவதற்கு இரும்பு ஆணிகள் பயன்படுத்தப்பட்டன. இரட்டைத் திருக்கலில் இரண்டு மாடுகள் பூட்டப்படும், ஒற்றைத்திருக்கலில் ஒருமாடு பூட்டப்படும். மாடுகளின் கழுத்தில் பூட்டப்படும் மரத்தினால் செய்யப்பட்ட துலாவுடன் இணைத்து வண்டிலுடன் சேர்க்கப்பட்டிருக்கும். வண்டிலில் இரண்டு மரச்சக்கரங்கள் இருக்கும். மாடுகளின் கழுத்தில் பிணைக்கப்பட்ட கயிறினை வண்டிலில் சவாரி செய்பவர் பிடித்தபடி மாடுகளைக் துரத்த வண்டிலை மாடுகள் இழுத்துச் செல்லும். அதிக செலவற்ற இச்சாதனம் இன்றும் ஒருசில இடங்களில் விவசாயக் குடும்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**2. கலப்பை**

பயன்பாடு:- விவசாய நிலத்தைப் பண்படுத்த உதவுவது கலப்பை. இதுவும் மரத்தினால் செய்யப்பட்ட மாடுகள் மூலம் செலுத்தப்படுவது. கலப்பை கொண்டு விவசாயி ஆழமாக உழுது நிலத்தைப் பண்படுத்துவான். மனித உழைப்பே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. நவீன விவசாயத்தில் இன்று உழவு இயந்திரத்தின் மூலம் நிலம் பண்படுத்தப்படுகின்றது. இவ் நவீன இயந்திரப்பாவனை அதிக செலவினை ஏற்படுத்துவதொன்றாகும். கிராமிய மக்கள் அன்று ஏரின் மூலம் உழவு செய்யும் போது மிக மகிழ்ச்சியாக பாடல்பாடி உழவு செய்தமையையும் உழவிற்குப் பயன்படுத்தும் மாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாகச் செல்லமாக பெயர் வைத்து அழைத்து தொழிலைச் செய்து மகிழ்ந்தனர் என்பதனையும் பழைய நாட்டார் பாடல்கள் மூலம் அறிகின்றோம்.

படவிளக்கம்:- ஏர் எனும் கருவி மரத்தினாலும் இரும்பினாலும் செய்யப்படுவது. கனதியான குற்றியின் ஒருபக்க நுனியை சீவிக் கூராக்கி அதில் இரும்பையும் கூர் வடிவில் செய்து இறுக்கி விடப்பட்டுள்ளது. ஏரின் மறுபகுதி வளைந்ததாக கைபிடியுடன் இணைக்கப்படும் . அக் கைப்பிடியில் மாடு ஒன்று பிணைக்கப்பட்டு ஏரினை இழுத்துச் செல்ல கமக்காரன் அவற்றை அமத்திப் பிடிக்க ஏர் ஆழமாக உழும். நேராக அதனை மாடு இழுத்துச் செல்லும்.

**3. அரிவாள்**

பயன்பாடு:-அருவி வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. நவீன கண்டு பிடிப்புக்களின் பின் அரிவாளுக்குப் பதிலாக அருவி வெட்டும் இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது. மனித உழைப்பு இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இன்றைய கருவியான அருவி வெட்டும் இயந்திரம் மிகப் பாரிய அளவில் விவசாயம் செய்யப்படுபவர்களாலேலேயே பயன்படுத்தப்படுகின்றது. இவ் இயந்திரப்பாவனைக்கு முதலீடு கூடுதலாக தேவைப்படுவதால் கூடுதலாக சிறிய வேளாண்மை செய்பவர்கள் அரிவாளைப் பயன்படுத்தி அறுவடை செய்கின்றனர். விவசாயி அறுவடை செய்யும் போது பொழுதுபோக்காக அலுப்புத் தெரியாமல் இருக்க பாடல்களைப் பாடிக் கொண்டு அரிவி வெட்டுவார்கள்.

படவிளக்கம்:- இரும்பினால் வளைவாகச் செய்யப்பட்டு மரத்தினால் கைபிடி போடப்பட்டிருக்கும். வருடந்தோறும் அருவிவெட்டு முன் இதனைக் கூராக்கிக் கொண்டு செல்வர்.

**4. உழவாரம்**

பயன்பாடு:- வயல் நிலங்களில் படர்ந்து செல்லும் அறுகு முதலிய புற்களைச் செதுக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இப்புற்களைச் செதுக்கி ஆடு, மாடு முதலியவற்றுக்கு உணவாகப் பயன்படுத்தினர். இக்கருவியின் பயன்பாட்டின் மூலம் இருவித நன்மைகளைப் பெற்றனர். நிலம் துப்புரவாக்கினர். ஆடு, மாடு முதலியவற்றுக்குத் தீனி பெற்றுக் கொடுத்தனர்.

படவிளக்கம்:- இரும்பினால் செய்யப்படும் இக்கருவி சப்பையாக செதுக்குமிடம் அடிக்கப்பட்டு அதன் அடிப்புறத்தில் மரப்பிடி அளவாகப் போடப்பட்டிருக்கும். பிடி போடும் இடம் குழாய் வடிவில் இருக்கும். அத்துடன் புற்களைச் செதுக்கும் போது கைக்கும் பயிற்சி கொடுப்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

**5. புல்லுக்கிண்டி**

பயன்பாடு:- புற்களை ஆழமாக வேருடன் கிண்டி எடுக்கப் பயன்படுத்தப்படும் கருவியே இது. அதாவது ஈரநிலங்களில் பயிர்களுடன் சேர்ந்து வளரும் களைகளை பயிர்கட்கு சேதமின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாக கிண்டி எடுப்பதற்கு இக்கருவி பயன்படுத்தப்படுகின்றது. இவைமாத்திரமன்றி வெங்காயம் கிண்டி எடுக்கவும் இது பயன்படுத்தப்படுகின்றது.

பட விளக்கம்:- இரும்பும் மரமும் பயன்படுத்தப்பட்டு செய்யப்படும் கருவியாகும். அரிவாள் செய்வது போல

பயன்படுத்தப்பட்டு செய்யப்படும் கருவியாகும். அரிவாள் செய்வது போலவன்றி குறைவான வளைவாவும் அதன் நுனிப்பாகம் சற்றுத் தடிப்பாக உறுதியாக சப்பை வடிவில் செய்யப்படுகின்றது. மரத்தினால் கைபிடி போடப்பட்டிருக்கும். இக்கருவியும் அக்கால விவசாயியின் தொழில்நுட்பத்திறனை எடுத்துக் காட்டுகின்றது. இன்றும் இக்கருவி விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

### 6. கொக்கைச்சத்தகம்

பயன்பாடு:- இரும்பினால் செய்யப்பட்ட இக்கருவி மரங்களில் குழை வெட்டுவதற்கும் தேங்காய், முருங்கைக்காய், மாங்காய் போன்ற உயரத்தில் இருக்கும் பொருட்களை பிடுங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு வீடுகளிலும் இக்கருவி பயன்பாட்டில் இருப்பது முக்கிய அம்சமாகும்.

பட விளக்கம்:-இரும்பினால்(தனி) செய்யப்பட்ட இக்கருவி நுனிப்பக்கம் சற்று கொழுவி இழுக்கக் கூடியதாக வளைத்துச் செய்யப்பட்டிருக்கும். அதன் அடிப்பகுதி பிடி வடிவில் அமைந்திருக்கும். அவற்றில் இரு இடங்களில் துளையிடப்பட்டிருக்கும். துளையிடப்பட்ட இப்பகுதியை நீண்ட தடியில் பிணைத்துக் கட்டி பயன்படுத்துவர். கயிற்றாலோ அல்லது கம்பியாலோ பிணைத்து உறுதியாகக் கட்டிப் பொருட்கள் பிடுங்கப் பயன்படுத்தப்படும்.

### 7. காம்புச்சத்தகம்

பயன்பாடு:-இது இரும்பினால் செய்யப்படும் ஒரு கருவியாகும். இக்கருவி பனைவளம் கொழிக்கும் கிராமப்புற மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. கடகம், பெட்டி ,பாய் முதலியன இழைப்பதற்குரிய ஓலையை வார உதவுவதுடன் அதன் காம்பினால் பாய் பின்னும் போதும் பொத்தும் போதும் ஓலையை மிதத்தி இழைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. கிராமப்புறங்களில் இப்பொருள் இன்றும் பயன்பாட்டிலுள்ளது.

படவிளக்கம்:- சத்தகப்பகுதி வளைவாகவும் காம்புப் பகுதிமிக நீளமாகவும் அமைந்திருக்கும். தனி இரும்பினால் செய்யப்படுவது. பாரமற்ற இலகுவாகக் கையாளக்கூடிய கருவியாகும்.

### 8. கோடரி

பயன்பாடு:- மரங்களைப் பிளந்து விறகாக்கவோ அல்லது வேறு தேவைகட்கோ பயன்படுத்த உதவும் கருவி. இக்கருவி இன்றும் பாவனையிலுள்ளது. கிராமப்புறங்களிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் இக்கருவி காணப்படுகின்றது. கனதியான இரும்பினாலான இக்கருவி விவசாயிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றைகள் காடுகளைத் துப்புரவாக்கவும் பயன்படுத்துகிறார்கள்.

படவிளக்கம்:- கனதியான இரும்பினால் அடிக்கப்படும் இக்கருவி ஒரு பக்கம் சப்பையாக மிகவும் கூராகச் செய்யப்படும் மறு பக்கம் உருண்டு திரண்டதாக நடுவே பிடி போடுவதற்கு பெரிய துளை இடப்பட்டிருக்கும். அத்துளைக்குள் மரத்தினால் அதாவது உறுதியான பூவரசு, மஞ்சமுன்னா போன்ற மரங்களின் வைரமான பகுதியை எடுத்து சீவிப் போடுவார்கள்.

### 9. உரல், உலக்கை

பயன்பாடு:- உரல் என்பது பொருட்களை இடித்துத் தூளாக்க பயன்படுத்தப்படுவதாகும். உரலில் இடப்படும் பொருளை உலக்கையால் இடித்துத் தூளாக்குவர். இவ் உரல் நம் பண்பாட்டில் மிகப் புராதன காலம் தொடக்கம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்று அதன் பாவனை நவீன கண்டுபிடிப்புக்களால் குறைந்து செல்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இக்கருவியின் பயன்பாடு மனிதனை திடகாத்திரமானவனாக வைத்திருக்க பயன்பட்டது. உரலில் பொருளையிட்டு உலக்கையால் இடிக்கும் போது அது மனிதனின் கைக்கு வேலையைக் கொடுத்து அதன் மூலம் உடலிற்கு பயிற்சியைக் கொடுக்கின்றது. இதனால் உடலில் ஏற்படும் வியர்வையின் மூலம் கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படும். இது அவனது சுகாதாரத்தைப் பேணி உடல் உறுதியுள்ளவனாக்குகின்றது. இன்று மின்சாரத்தில் இயங்கும் அரைக்கும் கருவிப் பயன்பாட்டினால் உடலில் தேவையற்ற தசைகள் உருவாகி மனிதனை நோயுள்ளவனாக மாற்றியுள்ளது என்பதை எவருமே மறுக்க முடியாது.

பட விளக்கம்:- உரல் என்ற பொருள் மரத்தினாலும் செய்யப்படுகின்றது. கருங்கல்லினாலும் செய்யப்படுகின்றது. மரக்குற்றியை அளவாக அரிந்து அதன் ஒரு பக்கத்தை அழுத்தமாக்கி நிலத்தில் குத்துண்ண வைக்கக் கூடியதாக செய்வர். மறு பக்கத்தை குடைந்து பொருளை இட்டு அடிக்கக் கூடியதாக்குவர். இது போலவே கருங்கல்லிலும் உரல் செய்யப்படும் மர உரலை விட கருங்கல்லில் செய்யப்படும் உரல் பொருளை விரைவாக பொடி செய்ய உதவுகின்றது. உலக்கை என்பது கனதியான மரத்தினால் நீளமாக சீவிச் செய்யப்பட்டு நுனிப்பகுதிக்கு இரும்பினாலான பூண் போடப்பட்டிருக்கும். மரத்தில் மிகச் சிறியதாக பாக்கு இடிப்பதற்கு பாக்குரல் செய்யப்படும். இது பரம்பரை பரம்பரையாக பாவனைக்குரியதாகின்றது. பெண்ணுக்கு திருமணத்தின் போது பரிசுப் பொருளாக இவையெல்லாம் கொடுக்கப்படுவது தமிழர் தம் பண்பாட்டின் வழமையாகும். ஆனால் இவ் உரல் உலக்கைகளை எல்லாம் ஒரு பக்கத்தில் போட்டு விட்டு இன்று மின்சாரத்தில் இயங்கும் அரைக்கும் இயந்திரப் பயன்பாடு பெருகி வருவது கண்கின்றோம். நேர மிச்சம் . உடல் அலுப்பின்றி இலகுவாக செய்யும் தன்மை ஆகியன இதன் விளைவாகவே இன்று நோய்கள் பெருகி மனித சமுதாயத்தை அசசுறுத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10. அம்மி

பயன்பாடு:- பொருட்களை மைபோல அரைக்க உதவும் கருவியே இதுவாகும். மிளகாய், மல்லி அரைக்கவும், தேங்காய் முதலிய பொருட்களை அரைக்கவும் இது உதவுகின்றது. ஒவ்வொரு வீடுகளிலும் மிகப்பிரதான பொருட்களில் இதுவுமொன்று. கைமூட்டிற்குக் கொடுக்கும் பயிற்சி இதன் முக்கியத்துவம் எனலாம். இன்று மின்சாரத்தில் அரைக்கும் கருவிப்பயன்பாடு பெருகியுள்ளமையால் இக்கருவியும் மூலையில் போடப்பட்டு வருவது கண்கூடு.

படவிளக்கம்:- கருங்கல்லைச் செதுக்கிப் பொழிந்து செய்யப்படுகின்றது. இதன் குளவியும் கருங்கல்லை நீளமான உருண்டை வடிவில் பொழிந்து செய்யப்படுகின்றது.

### 11. ஆட்டுக்கல். திரிகை

பயன்பாடு:- குரக்கன் ,உழுந்து, பயறு போன்ற தானியங்களை கோது நீக்கி உடைக்கவும் பின் அதனை மாவாகத் திரிக்கவும் பயன்படும் பொருளே ஆட்டுக்கல், திரிகை போன்றன. ஆட்டுக்கல்லில் உழுந்தை தோசை ,வடை போன்ற உணவுக்காக அரைப்பர். இதில் தண்ணீர் விட்டு அரைப்பதாகும். ஆனால் திரிகையில் வறுத்த பருப்புக்களை நீர் விடாது மாவாக்குவர். எனவே இவ்விரு கருவிகளும் இயற்கையான எதுவித தீங்குமற்ற மனித உழைப்பின் மூலம் பயனடையப்படுகின்றது. இன்று இவ் ஆட்டுக்கல், திரிகை ஆகியனவற்றிற்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கும் கிறைண்டர் எனப்படும் கருவியே பயன்படுத்தப்படுகின்றது. இத் திரிகை, ஆட்டுக்கல் ஆகியன பயனற்ற பொருள்களாக வீட்டு மூலையில் போடப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதிகமாக இவ்விரு கருவிகளும் முன்னர் செல்வந்தர் வீடுகளிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது.

படவிளக்கம்:- கருங்கல்லால் ஆனது. ஆட்டுக்கல் சதுர வடிவிலோ அன்றேல் வட்ட வடிவிலோ பொழிந்து செய்யப்பட்டு அக்கல்லில் நடுவில் கிடங்கு போல பொருளை அதில் போடக்கூடியதாக இருக்கும். அவ் ஆட்டுக் கல்லுடன் குளவி ஒன்று காணப்படும். பொருளை ஆட்டுக்கல்லில் இட்டு குளவியினை அதனுள் வைத்து சுற்றுவதன் மூலம் அரைக்கப்படும். இது போலவே கருங்கல்லால் செய்யப்பட்ட திரிகை இரு கற்கள் ஒன்றின் மேலொன்றை வைத்து மரத்தடியும் பிணைத்து அத்தடியை பிடித்தபடி இழுக்க அது சுற்றும். வறுத்த உழுந்தையோ பயறையோ உடைக்க அதன் துவாரத்தினுள் போட்டு உடைப்பர்.

### 12. பித்தளையாலான விளக்கு/குத்து விளக்கு

பயன்பாடு:- பித்தளையாலான விளக்கு / குத்து விளக்கு ஆகியன அன்றைய பயன்பாட்டில் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தன எனலாம். மிகப்பிரதானமான பொருள்கள் ஆகையால் இவற்றை ஏழை, பணக்கார் பேதமின்றி யாவரும் வீடுகளில் பயன்படுத்தினர். வீட்டில் ஒளியைத் தருவது இவ்விளக்குகளே. மின்சாரம் அறிமுகமாகுமுன் இவற்றின் பயன்பாடு மிக மிக முக்கியமானதாக இருந்தது. விளக்கு மண்ணெண்ணை விட்டு வீட்டிற்கு வெளிச்சத்திற்காகக் கொழுத்தப்படும். குத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு தேங்காய் எண்ணைய், இலுப்பெண்ணை ஆகியன விட்டு சுவாமி அறையிலோ அன்றேல் வீட்டில் தெய்வ காரியங்கள் நடைபெறும் போதோ கொழுத்தப்படும். குத்துவிளக்கினை மங்களகரமானது, இலட்சுமிகரமானது என மதித்து அதற்கு பூ, விபூதி, குங்குமம், சந்தணம், பூமாலை ஆகியன அணிவித்து மகிழ்வோடு பக்திகரமாக வணங்கினர் எம் முன்னோர்கள். இன்றும் இதன் பயன்பாடு நடைமுறையிலிருப்பதைக் காண்கின்றோம்.

படவிளக்கம்:- (அ) விளக்கு:- பித்தளையால் செய்யப்பட்டது. விளக்கின் வடிவத்தினை மண்ணில் செய்து அதில் பித்தளையை உருக்கி வார்ப்பர். இவ்விளக்கு கால் வைத்து செய்யப்படும். மேசையிலோ அல்லது குந்துகளிலோ இதனை இரவில் கொழுத்தி வைத்து பயன் பெறுவர். விளக்கின் நுனியில் குழாய் போலிருக்கும் இடத்தில் திரியிடப்படும் அதனை நடுவில் குடம் போலிருக்கும். எண்ணை(மண்ணெண்ணை) விடப்பட்ட பகுதியில் பொருத்தி விளக்கினை ஏற்றுவர்.

(ஆ) குத்து விளக்கும் நீளமான கால் வைத்துச் செய்யப்படும் இதுவும் அதன் வடிவத்தில் பித்தளையை உருக்கி விட்டு வார்க்கப்படும். விளக்கின் மேல் பகுதியில் எண்ணெய் விட செய்யப்பட்ட இடத்தில் எண்ணை விட்டு திரியிட்டு கொழுத்தப்படும்.

**13. பித்தளைப் பாத்திரங்கள்- குடங்கள் .சருவங்கள், கிடாரம், செம்பு, இட்லிப்பானை**

பயன்பாடு:- நீரினை பாதுகாப்பாக வைத்து பயன்படுத்த உதவுவது குடம் எனும் பாத்திரமாகும். குடத்தில் வைக்கப்படும் நீர் பழுதாகாது. வெயில் காலத்திற்கு மிகவும் குளிர்மையாக இருக்கும். தற்போது இதன் பயன்பாடு மிக அருகிச் சென்றுள்ளது. இதற்குப் பதிலாக இன்று பிளாஸ்ரிக்கினாலான குடம், கலன் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் அள்ளி வைக்கப்படும் நீர் சுவையற்று சூடாக இருப்பது இதன் தீய விளைவுகளாகும். மிக மலிவானதும் கொண்டு செல்ல இலகுவானதாகவும் இருப்பது பிளாஸ்ரிக்கின் நன்மையாகும்.

சருவம் என்பது சோறு சமைப்பதற்கும், பொங்கல் பொங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. நீண்ட கால அதாவது பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தத்தக்கது. மினுக்கி அடுப்பிலேற்றி சமைக்கும் போது அதன் பளபளப்பான அழகே உணவினை சுவைத்துச் சாப்பிட வைக்கும். இன்று பித்தளையினாலான சருவத்திற்குப் பதிலாக அலுமினியப் பாத்திரம், எவர் சில்வர் பாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. கூடுதலாக எவர் சில்வர் பாத்திரமே பயன்படுத்துகின்றோம். இதன் நச்சுத்தன்மை பறறி நாம் சிந்திப்பதில்லை. பித்தளைப் பாத்திரம் பக்க விளைவற்றது. எனினும் அதன் பெறுமதி அதிகமாதலால் ஏழை மக்களுக்கு அதனைப் பயன்படுத்த முடியாத நிலையே உள்ளது.

கிடாரம் நெல் அவிக்கவும் கொண்டாட்டங்களின் போது சோறு சமைக்கவும் உதவுவது. இப்பாத்திரம் பெரும்பாலும் செல்வந்தர் வீடுகளிலேயே உளள்து. வசதி குறைந்தோர் தமது வீட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டங்களிற்கு கைமாற்றலாகப் பெற்றே தமது கொண்டாட்டங்களை நடத்துவர்.

செம்பு என்பது பெரும்பாலும் எல்லா வீகளிலும் காணப்படும் ஒரு பொருளாகும். நீரினை குடிப்பதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது. வீட்டிற்கு வருவோரை உபசரிப்பதற்கு செம்பும் தண்ணியும் கொடுத்து உபசரிக்கும் வழக்கம் தமிழர் தம் பண்பாட்டுப் பாரம்பரியமாகும். மரியாதையாகவும் உறவைப் பேணுவதற்கும் இப்பாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. கொண்டாட்டங்களின் போது குறிப்பாக திருமணத்தின் போது பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கும் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கும் "செம்பும் தண்ணீரும்" கொடுத்து உபசரித்து உணவளிக்கும் வழமையைக் காண்கின்றோம். தம் தகுதிக்கு ஒவ்வாத திருமண பந்தத்தை விரும்பாதவர்கள் "செம்பும் தண்ணியும் எடுக்காத இடம்" என்று பரிகாசம் பண்ணும் வழமையும் நம் தமிழரிடையே காணப்படுகின்றது. ஆனால் இன்று கலப்புத் திருமணங்கன் மலிந்துள்ளதால் குறிப்பாக நாகரிக வளர்ச்சியும் வெளிநாட்டுத் தொடர்பும் பெருகி வருவதால் அத்தகைய வழமை குறைந்து கொண்டே இருக்கின்றமையைக் காண்கின்றோம்.

இட்லிப்பானை என்னும் பாத்திரம் இட்லி அவிக்கவும் மோதகம் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றது. பானைக்கு மேல்தட்டில் பொருளை வைத்து ஆவியில் அவிக்கப்படும். கூடுதலாக நடுத்தர வர்க்க குடும்பங்களிடமும் மேல் மட்டக் குடும்பங்களிடமும் இட்லிப்பானை புழக்கத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

படவிளக்கம்:- பித்தளைக்குடம் நீர் மொண்டு வைக்கக் கூடியதாக அடியிலும் நுனியிலும் ஒடுங்கியும் நடுவில் அகன்றதாகவும் இருக்கும். இது பித்தளையை உருக்கி குடவடிவில் வார்ப்புச் செய்யப்படும். சருவங்களும் பித்தளையை உருக்கியே செய்யப்படும். இதன் வாய்ப்பகுதி குடம் போலில்லாமல் சற்று அகன்றதாக அமைந்திருக்கும். கிடாரம் மிகப் பெரிதாக வாயகன்று இருக்கும். அதன் இரு பக்கமும் கைபிடி போடப்பட்டிருக்கும். செம்புகள் பித்தளைக் குட வடிவில் இருக்கும். ஆனால் கையால் தூக்கி நீரைக் குடிக்கக் கூடியதாக சிறியதாக இருக்கும். கூடுதலாக எல்லா வீடுகளிலும் பொருளாக இட்லிபானை அகன்ற வாயுள்ளதாக இருக்கும். இரண்டு பக்கமும் கைபிடி போடப்பட்டிருக்கும் அதனுள்ளே பொருளை வைத்து அவிப்பதற்கு தட்டுக்கள் வைக்கப்படும். இத்தட்டுக்களில் நான்கு அல்லது ஐந்து குழிகள் இருக்கும். அக்குழிகளில் துளைகளிடப்பட்டிருக்கும். அத்துளைகளூடாக ஆவி வந்து இட்லியை அவிக்க உதவும். பித்தளையில் வார்க்கப்படும் செம்பு, குடம், இட்லிப் பானை ஆகியன பழைய காலத்தில் கூடுதலாக புழக்கத்தில் இருந்தமையைக் காணலாம். ஆனால் இன்று அதற்குப் பதிலாக கூடுதலாக வெண்கலத்தில் செய்யப்பட்ட பொருளே பாவனையில் உள்ளது.

பயன்படுத்தப்படுகின்றது. இத் தட்டம் நீள்வட்ட வடிவிலும் வட்ட வடிவிலும் காணப்படும். இன்று பித்தளைக்குப் பதிலாக சில்வரில் செய்யப்பட்ட பாத்திரங்கள் மிக மலிவாக எல்லோராலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தத்தக்க வகையில் சந்தைப்படுத்தப்படுகின்றமையைக் காணலாம்.

படவிளக்கம்:-பித்தளையாலோ அல்லது சில்வராலேயோ செய்யப்படும் இத்தட்டம் கால் வைத்தும் கால் வைக்காமலும் செய்யப்படுகின்றது. கால் வைக்காமல் செய்யப்படும் தட்டம் நீள்சதுர வடிவில், நீள்வட்ட வடிவில், வட்ட வடிவில் செய்யப்படுகின்றது.

**16. ஏடுகள்.**

பயன்பாடு:- கடதாசி கண்டு பிடிக்கப்படுமுன் பயன்படுத்தபப்ட்ட கல்விச் சாதனமே ஏடுகள் எனலாம். கற்களில் எழுதுதல், செப்பேடுகளில் எழுதுதல் என்பன போலவே ஏடுகளிலும் நம் முன்னோர் எழுதி வைத்து தம் பரம்பரைக்குக் கையளித்தனர். அதாவது பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டு நூலினால் கோர்த்துக் கட்டப்பட்டது. (ஒழுங்காக) இவ் ஏடுகளாகும். மருத்துவமாக இருப்பினும் சரி பழைய இலக்கண இலக்கியங்களாயினும் சரி சோதிடம் மாந்திரிகமாயினும் சரி இவ் ஏடுகளில் எழுதிப் பேணினர். அரசர்கள் சிலர் தம் அயலூர் மன்னர்களுடனோ வேறொருவருடனோ தொடர்பு கொள்ளவும் இவ் ஏட்டில் எழுதியே செய்தியை அனுப்பினர். “ஓலை” என இது அழைக்கப்பட்டது. இன்றும் பரம்பரை சித்தமருத்துவத் துறையினர் இவ் ஏடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர். நாம் இன்றும் முதன்முதல் குழந்தை அகரத்தினைக் கற்கும் போது ஏட்டில் எழுதிய அட்சரங்களையே கற்றுக் கொடுக்கும் வழமையைக் கடைப்பிடிப்பது இதன் முக்கியத்துவத்தினைக் காட்டி நிற்கின்றது. எமது நாயன்மார்கள் அருளிய தேவாரங்கள் ஏட்டிலேயே எழுதப்பட்டன. இது செல்லரிக்கும் தன்மை வாய்ந்தது.

படவிளக்கம்:- பனை ஓலையின் சார்வினை தனித்தனி ஓலையாக எடுத்து எழுத்தாணியால் எழுத வேண்டியவற்றை அதில் எழுதும் போது ஊன்றி எழுத அது ஏட்டில் பதியும். இதனை துளையிட்டு நூல் கொண்டு சேர்த்துக் கட்டப்படும். ஒழுங்கு முறையைக் காட்ட பக்கம் போடப்பட்ருக்கும். அதன் முதல் பக்கத்தில் ஏடு கூறும் விடயம் பற்றித் தலையங்கம் போடப்பட்டிருக்கும். பா வடிவில் அதாவது செய்யுள் வடிவமாகவே இருக்கும். அச் செய்யுளை இயற்றியவர் பெயரும் முதல் பக்கத்தில் இடப்பட்டிருக்கும்.

**17. மட்கூசா**

பயன்பாடு:- இப் பொருள் தண்ணீரை ஊற்றி வைத்து வேண்டப்படும் போது பருக மிகமிகக் குளிர்மையாகவும் மிக ஊருசியாகவும் இருக்கும். வெயில் காலத்தில்தான் இதனருமை புலப்படும். கூசாவில் ஊற்றப்படும் நீர் பழுதாகாது. வேண்டப்படும் நேரம் பயன்படுத்தலாம். அக்கால மக்கள் தண்ணீரைப் பயன்படுத்தும் முறை பற்றி நன்கு தெரிந்திருந்தார்கள் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

படவிளக்கம்:- மண்ணைக் குழைத்து திரிகையிலிட்டு கூசா செய்யப்படுகின்றது. நிலத்தில் வைக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக அடியில் தப்பையாக செய்து பின் பானை வடிவில் நீரை வைத்திருக்கும் பகுதி

**14. மூக்குப்பேணி**

பயன்பாடு:- இன்று மிக அரிதாக காணப்படும் மூக்குப்பேணி நம் பண்பாட்டினை வெளிப்படுத்தும் முக்கிய பொருளாகும். தேனீர் அருந்துவதற்குப் பயன்படுத்தப்படும் இம் மூக்குப்பேணி சுகாதாரத்தைப் பேணும் ஒரு பொருளாகக் காணப்படுகின்றது. தேனீர் அருந்தும் போது வாய் எச்சில் பேணியில் படாது அண்ணாந்து பருகுவதால் இப் பேணியை எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. ஒருவரது நோய் இன்னொருவருக்குத் தொற்றாமல் இருப்பது இதன் முக்கிய நோக்கமாகும். கூடுதலாக தேனீர்க்கடைகளில் மூக்குப்பேணியே பயன்படுத்தப்பட்டது. பின்னர் வெண்கலப் பேணியே தேனீர் கடைகளில் பயன்படுத்தும் வழக்கமேற்பட்டது. அத்துடன் கிளாஸ் பாத்திரமும் பயன்படுத்தப்பட்டது. இன்றும் சில்வர் பேணியும், கண்ணாடிப் பாத்திரமும் தேனீர் அருந்தப் பயன்படுத்தப்படுகின்றது. இன்று மூக்குப்பேணியைக் காண்பது அரிதாகி விட்டது.

படவிளக்கம்:- பித்தளையை உருக்கி செய்யப்படும் இம் மூக்குப்பேணி அடியில் ஒடுங்கியும் வாய்ப்பகுதி அகன்றும் இருக்கும். மேலே மூக்கு வடிவில் வாய்ப் பகுதியில் பொருத்தப்பட்ட பகுதியூடாக தேனீர் வாய்க்குள் விடப்படும். நாள்தோறும் மூக்குப்பேணியை மினுக்கி பயன்படுத்தும் போது இது பளபளப்பாக காட்சியளிக்கும். தேநீர் அருந்தவும் மிகவும் விருப்பமாகவும் இருக்கும்.

**15. பித்தளைத் தட்டம்**

பயன்பாடு:- பித்தளைத் தட்டம் இரண்டு வித வடிவில் இருக்கும். ஒன்று கால் வைக்கப்பட்டிருக்கும். மற்றையது கால் வைக்காது செய்யப்பட்டிருக்கும். கால்வைத்து வட்டமாக சிறிதாக செய்யப்படும் கால்தட்டம் வெற்றிலை பாக்கினை வைத்து வருவோரை உபசரிக்கவும் வீட்டிலுள்ளோர் பயன்படுத்தவும் உதவுகின்றது. தமிழர்தம் பாரம்பரியத்தையும் பண்பினையும் வெளிப்படுத்தி நிற்பது இவ் வெற்றிலைத்தட்டமாகும். இது பொதுவாக எல்லா வீடுகளிலும் பயன்படுத்தப்பட்ட ஒரு பொருளாகும். இன்று இவ்வாறு வெற்றிலை பாக்கு கொடுத்து வரவேற்று உபசரிக்கும் வழமை குறைந்து செல்வதால் வெற்றிலை தட்டின் பாவனையும் குறைந்து சென்றுள்ளது எனலாம். பித்தளைத் தட்டம் வருவோரைத் தேனீர் கொடுத்து உபசரித்து வரவேற்கவும் ஆலயங்களில் கிரியைகளின் போது பயன்படுத்தவும் அர்ச்சனை செய்யவும் கொட்டைப் பெட்டி எப்போதும் மடியிலிருக்கும். தற்போது (Phone) கைப்பை கொண்டு போல பழைய காலத்தில் கொட்டைப் பெட்டி கொண்டு செல்லும் மரபு காணப்பட்டது. தம்மைச் சேர்ந்தவர்களைச் சந்திக்கும் போது கொட்டைப் பெட்டியிலிருந்து தாம்பூலம் எடுத்துக் கொடுத்து பரிமாறித் தம் அன்பினை வெளிப்படுத்துவதற்கு இக் கொட்டைப் பெட்டி உதவியது குறிப்பிடத்தக்கது. இன்று இக் கொட்டைப் பெட்டி பயன்பாடு அருகிச் சென்றுள்ளதெனலாம்.

படவிளக்கம்:- பனைஓலைச் சார்வினை காய வைத்து சிறுசிறு அளவில் காம்புச்சத்தகத்தினால் வார்ந்து தமக்குத் தேவையான வடிவத்தில் பின்னுவர். பெரிய கொட்டைப் பெட்டியினுள் சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டைப் பெட்டி அடுக்காக வைக்கப்படும். ஒவ்வொரு பெட்டியிலும் ஒவ்வொரு பொருளை வைப்பர். தேவையான போது பொருளை எடுப்பதற்கு ஏற்ற வகையில் இது அமைந்திருக்கும். கூடுதலாக வியாபாரம் செய்யும் பெண்கள் கொட்டைப் பெட்டியைப் பயன்படுத்துவதனை இன்றும் காணலாம்.

**21. தட்டுவம்**

பயன்பாடு:- பனைஓலையால் செய்யப்படும் இப் பொருள் கள் அருந்தவும் உணவுப் பொருட்களைச் சாப்பிடவும் பயன்படுத்தப்பட்டது. பனைஓலையின் விரிந்த பகுதியை சேர்த்துக் கட்டி செய்யப்படும் தட்டுவங்கள் அருந்தப் பயன்படுத்தப்படுவது பெரும்பாலான வழக்கமாகும். இன்னும் கோயில்களில் குளிர்த்தி விழாவின் போது கஞ்சியை இத் தட்டுவத்திலேயே குடிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. பழைய காலத்தில் சிலர் சோறு கறியினைக் கூட இத் தட்டுவத்தில் உண்ட வழமையும் இருந்ததென அறிகின்றோம். இதில் உணவுப் பொருளை வைத்து உண்பதால் மிகச்சுவையாக இருக்கமெனவும் எதுவித பக்க விளைவுகளுமற்ற சுகாதாரமானதெனவும் அறிந்ததனாலேயே இதனைப் பயன்படுத்தினார்கள். இன்று கள்ளுத் தவறணையில் இதற்குப் பதிலாக கிளாஸ் பாவிக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

**22. உமல்**

பயன்பாடு :- பனைஓலையால் பின்னப்படும் இப் பொருள் மீன் முதலிய உணவுப் பொருட்களை வைத்து பயன்படுத்த உதவியதைக் காணலாம். பழுதாகாமல் இருக்குமென்பதே இதன் பயனாகும். மூன்று நான்கு நாட்களுக்குப் பலகாரம் பழுதாகாமல் காயாமல் வைத்துக் கொள்ளவும் இது உதவுகின்றது.

படவிளக்கம்: - பனை ஓலையை வார்ந்து பை வடிவில் பின்னப்படும் இவ் உமலின் பயன்பாடு முன்னர் முக்கியமானதாக இருந்தது. பை வடிவில் பின்னப்பட்டு பிடியும் ஓலையால் பின்னப்பட்டு பொருத்தப்பட்டு இருக்கும்.

**23. கோர்க்காலியும் நெல் போட்டு வைக்கும் பெட்டகமும்**

பயன்பாடு:- பனைமரத்தினை சீவி செய்யப்படும் கோர்க்காலியும் பொருள் நிலத்தில் படாதவாறு உயரத்தில் வைக்க உதவுகின்றது. கமக்காரர் வீட்டில் இது பிரதானமாக பயன்படுத்தப்பட்டது. வீட்டின் முன்னே உள்ள மாலுக்குள் (திறந்த விறாந்தை ஓலையால் வேயப்பட்டு மண்நிலமாக இருக்கும்) இக் கோர்க்காலி வைக்கப்படும். இக் கோர்க்காலியின் மேல் பனை ஓலையால் பனை நாரால் கடகம் போல உயரமாக பின்னி வைக்கப்படும். இதற்கு மூடியும் இருக்கும். நெல்லினைப் பழுதாகாமல் நீண்ட நாட்களுக்கு பேணி வைக்க இது பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இன்று மரத்தினால் செய்யப்பட்ட பெட்டி (பெட்டகம்) பயன்படுத்தப்படுகின்றது. இது மாத்திரமன்றி இன்று கூடுதலாக உரப் பையில் போட்டு கட்டி வைக்கும் வழக்கமே காணப்படுகின்றது. இதன் விளைவாக நெல்லை எலி முதலியன இலகுவாக அரித்துத் தின்னும் நிலையே காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவிளக்கம்:- கோர்க்காலியை நோக்கின் சதுரமாக பனை மரத்தைப் பிணைத்து அச்சுப் போட்டு இறுக்கி செய்யப்படுவது. அதறகுக் குறுக்கே சட்டங்களும் பிணைக்கப்படும். அதன் மேல் நெல்லை போட்டு வைக்க ஓலையாலோ அன்றோ நாராலோ கூடை வடிவில் நீள் சதுரமாக பின்னப்பட்ட வைக்கப்படும் அதற்கு அளவாக மூடியும் செய்யப்பட்டு மூடப்படும். நெல்லினை எடுக்கும் போது கோர்க்காலியின் மேலேறி எடுப்பர். இது போலவே மரத்தினால் செய்யப்படும் பெட்டகமும் ஏறி நின்று நெல்லை எடுக்க ஏற்றாற் போல செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**திரு.க.கருணாநிதி**
**நீர்ப்பாசனப் பொறியியலாளர்**
**யாழ்ப்பாணம்**

# தற்போது நன்னீர் வளத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும்

உலகளாவிய ரீதியில் மனிதனால் ஏற்படுத்தப்படும் பல்வேறுபட்ட அனர்த்தங்களின் ஊடாக பூமியில் காலம் காலமாக நடைபெற்று வரும் இயல்பான பல செயற்பாடுகள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதை எம்மால் உணர்வு பூர்வமாக அறிய முடிகின்றது. இவ்வாறான மனித அனர்த்தத்தின் விளைவாக இயற்கை அனர்த்தங்களும் தொடராக இடம்பெறுவது கால ஓட்டத்தில் ஒன்றாகவே உள்ளது. இயற்கை அனர்த்தப் பாதிப்புக்களுக்கு இடம், காலம் என்பன ஒரு போதும் தடையாக இருப்பதில்லை. இவை எங்கும் எப்போதும் தோன்றலாம். இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணியாக இருப்பது சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவற்ற விஞ்ஞான மற்றும் சமூக வளர்ச்சியும் அதனோடு இணைந்த முன்னேற்றமுமாகும். இவற்றில் காலநிலை அனர்த்தங்கள் (Climatic Hazards) அதிக முக்கியத்துவம் பெற்றவையாக மாறியுள்ளன. உலகளாவிய ரீதியில் உள்ள காலநிலை மாற்றத்தின் விளைவாக காலநிலை அனர்த்தங்கள் அடிக்கடி தோன்றுகின்ற அதே வேளை அவற்றினுடைய அழிவுகளும் அதிகமானவையாகவே காணப்படுகின்றன. இவ்வாறாக, மனிதனுடைய சூழலுடன் ஒத்திசைவற்ற செயற்பாடுகள் பல பூமி எங்கணும் தொடருமேயானால் எதிர்வரும் காலங்களில் இப்பூமியில் உயிர் வாழவ்தற்கான இசைவுத்தன்மை பல பகுதிகளில் குறைந்து செல்வதோடு சில பகுதிகளில் முற்றாக அருகிவிடும் (கடல்மட்ட உயர்வு காரணமாக) அபாய நிலையும் ஏற்படும் என்பது தெட்டத் தெளிவாக அறியமுடிகின்றது.

உலகில் பொதுவாக ஏற்படும் அனர்த்தங்களாக வெள்ளம், வறட்சி, சுனாமி, மண்சரிவு எரிமலை, அசாதாரணமான கடல்மட்ட எழுகை, கடல் அரிப்பு, நன்னீர் மாசடைதல் மற்றும் ஓசோன் படையில் ஏற்படும் துளைகள் போன்றவற்றைக் கொள்ள முடியும். இவற்றில் சில இயற்கையாகவும் பல சூழலுடன் ஒவ்வாத மனித செயற்பாட்டின் ஊடாகவும் இடம் பெறுகின்றதை அறியமுடிகின்றது. அத்துடன் கடந்த காலங்களில் இவற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதை எம்மால் உணரமுடிகின்றது. எமது மாவட்டம் உள்ளடங்கலாக நாட்டின் பல பகுதிகளில் 2004ம் ஆண்டில் சுனாமி தாக்கத்திற்கு உட்பட்டு பல உயிர்கள் மற்றும் உடமைகள் காவு கொள்ளப்பட்டதை நாம் அறிவோம். பின்னர் 2008 இல் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனஉத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களும் எமது கடந்தகால அனுபவங்களாக பதியப்பட்டுள்ளன. எனவே இவ்வாறு ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து எம்மை விடுவிப்பதற்கு / தணிப்பதற்கு எமது அன்றாட செயற்பாடுகள் அனைத்தும் குறித்த திசையை நோக்கி ஒருங்கமைக்கப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுவாக உயிர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு சுத்தமான உணவு, நீர் மற்றும் காற்று என்பன அவசியப்படுகின்றது. ஆனால் இன்று எம்மால் நுகரப்படும் மேற்குறித்த மூன்றுமே மாசுபட்டதாகவே கிடைக்கப் பெறுகின்றது. இதனால் உயிர்களின் வாழ்க்கை காலம் குறைவடைந்து செல்வதோடு ஆரோக்கியமற்ற, நோய்த்தாக்கத்திற்குட்பட்ட சமூகமாகவும் வாழ்ந்து வருகின்றோம். அன்று இயற்கையால் இலவசமாக தரப்பட்ட சுத்தமான காற்று மற்றும் நீர் என்பன இன்று பாரியளவில் மாசடைந்து காணப்படுகின்றன. இதனால் எம்மில் பலஉ நீரை பணம் கொடுத்து வாங்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

யாழ் மாவட்டத்தை பொறுத்தவரையில் நன்னீரில் ஏற்படும் மாசுத்தன்மை அண்மைக்காலத்தில் மிகவேகமாக அதிகரித்து செல்வதை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றில் சில வகை மாசுக்கள் சாதாரண மக்களால் இனங்காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக நன்னீரில் ஏற்படும் உவர்நீர்ச் சேர்க்கை (Salinity) யைக் குறிப்பிடலாம். ஏனைய மாசுக்களை பரிசோதனை வாயிலாகவே அறியக்கூடியதாக இருப்பதுடன் அவை சாதாரண மக்களால் இனங்காணப்பட முடியாதவையாகவும் காணப்படுகின்றன (Nitrate, Fecal, Pollution). எனவே நீர் மாசுபடுவதை குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கு விரைந்து செயற்பாடாதுவிடின் எமது நன்னீர் வளத்தின் எதிர்கால இருப்பு கேள்விக்குறியாகும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எமது மாவட்டத்தை பொறுத்தவரையில் பாரிய நீர்த் தேக்கங்களோ, ஆறுகளோ, ஏரிகளோ மற்றும் மேற்பரப்பில் கூடிய காலத்திற்கு நீரை தக்க வைக்கக் கூடிய மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள் எவையும் இல்லை. இதற்கு அடிப்படைக் காரணம் பௌதீகத் தோற்றமும் (Geography) நிலக்கீழ் உள்ள பாறையமைப்பும் (Geology) ஆகும். எமது மாவட்ட தரைக்கீழ் பாறையானது சுண்ணக்கல் (டுஐஅநளவழநெ) பாறையமைப்பை கொண்ட ஒரு கட்டமைப்பாகும். இது மிகவும் நீரை ஊடு புகவிடு தன்மையுடைய கட்டமைப்பாகும். எனவே மேற்பரப்பு நீரானது பாறையின் ஊடாக ஊடுருவி தரைக்கீழ் நீர் மட்டத்தை (underground Aquifer) சென்றடையும். இவ்வாறு சேமிக்கப்படும் நன்னீரே கிணறுகள் மூலமாக மேற்பரப்பிற்கு கொண்டுவரப்பட்டு பல தேவைகளுக்குமாக எம்மால் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தரைக்கீழ் நீர்வளமாக மாற்றப்படும் நன்னீரானது பல்வேறு வழிகளிலும் மாசடைகின்றது. இவற்றிற்கு மனித செயற்பாடுகளே பிரதான காரணமாக அமைந்துள்ளது என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். எனவே இந்நிலை தொடர்வதை தடுப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் கூடிய அபிவிருத்தியை முன்னெடுப்பதன் ஊடாகவே நீர்வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியை எட்ட முடியும். பொதுவாக மாவட்டத்தில் உள்ள தரைக்கீழ் நீர்வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படக் கூடிய சில நடவடிக்ககைகளாக பின்வருவனவற்றை கொள்ள முடியும்.

1.தரைக்கீழ் நீரை மிகையாக அகழ்ந்து எடுத்தலை தவிர்த்து திட்டமிட்ட முறையில் பயன்படுத்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.நன்னீருடனான உவர்நீர்ச் சேர்க்கை

3.விவசாய கிருமிநாசினிகள் மற்றும் உரவகைகளின் அதீத பாவனை

4திண்ம மற்றும் திரவ கழிவுகள் மூலம் ஏற்படும் மாசுக்கள் உ+ ம் : சுன்னாக கிணறுகளில் மசகு எண்ணெயின் கலப்பு)

5.தரைக்கீழ் நீர் கடலுக்குள் நேரடியாக செல்லுதல் (உதாரணம் : கீரிமலை கரையோரம்)

பாதுகாக்கப்பட்டுள்ளன. நீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு கிணறு ஏற்கனவே உவரேறி பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தது. தற்போது (குறித்த உவர்நீர்த்தடுப்பணை புனரமைப்பின் பின்) குறித்த கிணற்றின் உவர்த்தன்மை குறைந்து வருகின்றமை பரிசோதனை மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் காரைநகரின் வடக்குப் பகுதியில் வெளிச்ச வீட்டிற்கு அண்மையிலும் கடல்நீர் உள்வரும் பகுதி அடையாளம் காணப்பட்டு உலக வங்கியின் நிதியின் மூலம் தற்போது புதிதாக உவர்நீர்தடுப்பணை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த மூன்று கட்டுமானங்கள் மூலமாக காரைநகரின் வடக்குப் பகுதியினூடாக கடல்நீர் உட்புகுதலும் அதன் மூலம் மணல் மண்ணை கொண்டுள்ள நிலப்படுக்கையின் ஊடாக கடல்நீர் உட்புகுந்து தரைக்கீழ் நீர் வளத்தை மாசடையச் செய்வதும் முற்றாக தடுக்கப்பட்டுள்ளது

மேலும் காரைநகரின் வட கிழக்கு மூலையில் இருந்து கிழக்கு கரை வழியே அண்ணளவாக 4.5 Km நீளமான வேணன் அணை ( படம் 3) புனரமைப்பு வேலைகள் தற்போது பூரணப்படுத்தப்பட்டதன் மூலமாக மழைநீர் கடலுக்குள் செல்வது முற்றாக தடுக்கப்பட்டுள்ளதோடு பாரியளவு மழைநீரை இப்பகுதியினுள் சேமிக்க முடிந்துள்ளது. இதன் மூலம் படிப்படியாக காரை கிழக்கு, காரை வடகிழக்கு போன்ற பகுதிகளில் உள்ள தரைக்கீழ் நீர்வளம் மேம்படத் தொடங்கும். அத்துடன் காரை கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் உள்ள விவசாயம், உவர் அதிகரிப்பு காரணமாக வருடா வருடம் பாதிப்படைந்து, குறைந்த உற்பத்தியே கிடைத்து வருகின்றது. இந்நிலை குறித்த காலத்திற்கு பின்னர் முற்றாக மாற்றமடைவதோடு உற்பத்தியும் அதிகரிக்கும்.

கடந்த 2012ம் ஆண்டு வடக்கு மாகாண நிதி ஒதுக்கீடு மற்றும் இராணுவ பொறியியற் பிரிவின் ஒத்துழைப்புடன் இரண்டு பெரிய குளங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (வலந்தலைக்குளம், மாவுதனைக்குளம்) இதன் மூலம் கடலுக்குச் செல்லும் மழைநீரை இவற்றுள் சேமிப்பதன் ஊடாக குறித்த பிரதேச தரைக்கீழ் நீர்வளத்தை மேம்படச் செய்ய முடியும் மேலும் இதுவரை புனரமைக்கப்படாத கிழுவனை வாய்க்கால் மற்றும் அதனோடு இணைந்த கட்டுமானங்களையும் மிக விரைவாக பூரணப்படுத்தும் போது அவற்றிற்கு அண்மையில் உள்ள தரைக்கீழ் நீர்வளம் எதிர்காலத்தில் மேம்படும். அத்துடன் கமநல சேவைகள் நிலையத்தின் கீழ் உள்ள சிறு சிறு குளங்களையும் புனரமைப்பதுடன் ஒவ்வொரு வருடம் அவற்றிற்குரிய பராமரிப்புக்களை கிரமமாக மேற்கொள்வதன் ஊடாக தரைக்கீழ் நீர்வளத்தை மேலும் வலுவடையச் செய்ய முடியும்.

தற்போது பெருமளவு பிரதேச மக்கள் தங்களின் நன்னீர் தேவைக்காக சுன்னாகத்தில் இருந்து தருவிக்கப்படும் நீர்த்தாங்கி மூலமான குடிநீரையே நம்பியுள்ளார்கள். இது நன்னீர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வாக அமையாது அத்துடன் பெறப்படும் நீரும் கடந்த காலங்களில் பகுதியளவில் மாசடைந்த நீராகவே காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், தற்போது நீர் பெறப்படும் பிரதேச சபை எல்லையினுள் உள்ள வளத்தை வெளிக்கொண்டு செல்வது தொடர்பாக இறுக்கமான சட்டங்கள் இயற்றப்படுமேயானால் அவ்வாறு சுன்னாகத்தில் இருந்தோ அல்லது வேறு இடங்களில் இருந்தோ நன்னீரை பெறுவது கடினமான விடயமாக அமையக்கூடும் அத்துடன் 2016ம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் இரணைமடுவில் இருந்தான நன்னீர்த் திட்டமும் எவ்வளவு காலம் நீடித்து இருக்கக் கூடியது என்பதை இப்போது எதிர்வுகூற முடியாதுள்ளது.

எனவே நன்னீருக்காக நாம் தனியே வெளிமூலங்களில் மட்டும் தங்கியிராது எமது நன்னீர் வளத்தை மேம்படுத்தி உச்ச நிலையில் வைத்திருக்க வேண்டியது எமது அனைவரதும் கட்டாய கடமையாகும். இதற்காக நாம் பின்வரும் முயற்சிகளை இயலுமானவரை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

- அனைத்து உவர்நீர்த் தடுப்பணைகளும் புனரமைக்கப்படுவதோடு காலத்திற்கு காலம் அவற்றின் வினைத்திறன் மிகு செயற்பாடுகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்

- அனைத்து சிறு சிறு குளங்களும் தூர்வாரப்பட்டு அதன் செயற்பாடுகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்

- கரையோரமாக உள்ள நன்னீர்க்கிணறுகளில் இருந்து இயந்திரங்களை பயன்படுத்தி பாரிய நீர்த்தாங்கிகளுக்கு நீர் எடுப்பது மற்றும் விநியோகத்திற்காக நீர எடுப்பது என்பன முற்றாக தடுக்கப்பட வேண்டும்

- சாத்தியமான இடங்களில் மழை நீரைத் தேக்கக் கூடிய குளங்கள் மற்றும் குட்டைகளை அமைத்தல் வேண்டும்

- வெறுமையாக உள்ள வெற்றுக் காணிகளை நீர் இலகுவில் ஊடுபுகக் கூடிய வகையில் உழுதுவிட வேண்டும்

- சாத்தியமான சந்தர்ப்பங்களில் மழை நீரை நேரடியாக மேித்து அவற்றை பின்னர் பயன்படுத்தக் கூடிய மனநிலையை மக்கள் மத்தியில் பரவவிடல்

எனவே மாறிவரும் காலநிலை மாற்றத்திற்கேற்ப கிடைக்கும் மழைநீரை இயன்றளவில் சேமித்து எமது பிரதேசத்தின் நன்னீர் வளத்தை மேம்படுத்த அனைவரும் பாடுபடுவோமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. கலாசக்தி றோபேஷன்**
**ஆசிரியர்** (BFA,PGDE)
**யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்**
**காரைநகர்**

# காரைநகரும் கலையும்

திருவும் கல்வியும் சீரும் தழைத்தோங்கும் நன்ஊராக விளங்குவது காரைநகர். இந்நகரில் கல்வி மட்டுமல்ல கலையும் சோர்ந்து தழைத்தோங்கியது. இக்கலையானது பெருஞ் சிறப்புற அன்றும் இன்றும் மட்டுமல்லாது இனியும் வளரும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இசை, நடனம், நாடகம், கூத்து பேச்சு, வாத்தியம், பண்ணிசை, சிற்பம், சித்திரம், பேச்சு, கவிதை போன்ற இன்னோரன்ன பல கலைகள் இவ்வூரில் வளர்ந்ததாக நம் முன்னோர் கூறுகின்றனர். குறிப்பிட்ட கலைகள் காரைநகரின் எல்லாப் பகுதியிலும் வளர்ந்தன. இவ்வாறு இக்கலைகளைப் பெரும்பான்மையாக வளர்த்தவர்களை "அண்ணாவிமார்" என்று கூறுவர். இவ்வாறு வளர்ந்த கலைகள் தொடர்ந்து இன்றும் அழிவடையாது பேணப்பட்டு வளர்ச்சியடைந்து வருவதனை நாம் அவதானிக்கும் போது நமது காரைநகரின் கலைப்பாரம்பரியமானது அழிவடையாது வருகின்றது என்பது கண்கூடு. இவ்வாறு கலைகளை வளர்த்து வந்த அண்ணாவிமார் காவடி, கும்மி, கோலாட்டம், போன்றவற்றை சிறுவர்களுக்குப் பயிற்றுவித்து கோவில்களில் சிறுவர்களுக்குரிய நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.

காரைநகரில் கைலாயக்கம்பர் பரம்பரையில் தவில், நாதஸ்வர வாத்தியக் கலையானது நல்ல முன்னேற்றம் கண்டது. ஆரம்ப காலத்தில் நாதஸ்வர வித்துவான் விளங்கிய சுப்பையா கம்பர் என்பவர் வளர்த்தது மட்டுமல்லாது இன்றும் இவரது புத்திரர் திரு. மந்திரமூர்த்தி அவர்கள் வாத்தியக் கலையை அழியவிடாது வளர்த்து வருவதனைக் காண முடிகின்றது. மேலும் கைலாயக் கம்பர் பரம்பரையில் வந்த நாதஸ்வர வித்துவான் என்.கே.நடேசன் அவர்கள், தவில் வித்துவான் என்.கே வீராச்சாமி அவர்கள், என்.கே. கணேசன் ஆகிய மூவரும் தவில், நாதஸ்வரக் கலையை வளர்த்தது மட்டுமல்லாது தொடர்ந்து இவர்களது புத்திரர்களும் இக் கலையை வளர்த்து வருகின்றனர் என்பது எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாகும். இத்துடன் உலகப் புகழ் பெற்ற தவில் மேதை தட்சணாமூர்த்தி அவர்களும் சிறுவனாக இருந்த காலத்தில் ஈழத்துச் சிதம்பரத்தில் தவில் வாசித்ததாக அறிய முடிகின்றது.

அடுத்து காரைநகர் இந்துக் கல்லூரி என அழைக்கப்பட்டு தற்போது யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. சுப்பையா, திரு கனகசுந்தரம் ஆகியோர் ஆரம்ப காலத்தில் இசையை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திலும் யாழ்ற்றன் கல்லூரியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றி ஓய்வு பெற்ற கலாபூக்ஷணம் சு. கணபதிப்பிள்ளை (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் பாடசாலைகளில் இசையை வளர்த்தது மட்டுமல்லாது ஆலயங்களிலும் பண்ணோடு தேவார திருமுறைப் பாடல்களை ஓதியும் அன்றும் இன்றும் இசையை வளர்த்து வருகின்றார்.
தொடர்ந்து கைலாயகம்பர் பரம்பரையில் உதித்த செல்வி பரமேஸ்வரி கணேசன் விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுவதுடன் காரையில் இசையை வளர்ப்பதற்குப் பங்காற்றி வருகின்றார் என்பது கண்கூடு. மேலும் திருமதி தேவமனோகரி உருத்திரசிங்கம் (நுண்கலைமாணி) ஆசிரியர் யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் பல மாணவர்களை இசைத்துறையில் உருவாக்கி இசையை வளர்த்தது மட்டுமல்லாது காரைநகரின் இசைத்துறை வளர்ச்சிக்கு அன்றும் இன்றும் பெரும் பங்காற்றி வருகின்றார். மேலும் கலாபூக்ஷணம் திரு.நடராசா அவர்களும் இசையை வளர்த்து வந்துள்ளார். தொடர்ந்து திருமதி. சௌந்தராம்பிகை இராமகிருக்ஷ்ணன் (நுண்கலைமாணி) அவர்களும் யாஃயாழ்ற்றன் கல்லூரியில் மாணவர்களிடையே இசையை வளர்த்து மாணவர்கள் இசைத்துறையில் நுழைய பங்காற்றியுள்ளஉட். தற்பொழுது லீலாவதி இராசரத்தினம், திருமதி பங்கயற்செல்வி முகுந்தன், திருமதி சக்தியாம்பாள் சிறிதரன், செல்வி கமலவாணி, செல்வி சர்மிளா தியாகலிங்கம், திருமதி. யாழினி, செல்வி.பிரியதர்சினி ஆனந்தராசா, செல்வி.சுமலதா ஆகியோரும் யபாழ்ப்பாண நுண்கலைப் பீடத்தில் தமது கல்வியை முடித்து காரைநகரின் இசை வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றமை குறிபபிடத்தக்க அம்சமாகும்.
மேலும் ஆலயங்களில் தேவார முதலிகளால் வளர்க்கப்பட்டு வந்த பண்ணிசையானது காரைநகரிலும் வளர்க்கப்பட்டு வருகின்றது என்பதனை ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்களில் ஒருவரான மு.சுந்தரலிங்கம், ஓய்வு நிலை நீதிபதி எஸ். ஏ. ஈ ஏகநாதன், அமரர் தியாகராஜா, முன்னாள் அதிபர் மு.சு.வேலாயுதபிள்ளை, திரு. திருச்செல்வம், செல்வி லீலாவதி இராசரத்தினம் போன்றோர்களின் பணியிலிருந்து அவதானிக்க முடிகின்றது.

தொடர்ந்து யாஃகலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அமரர் திரு நா.கனகசுந்தரம் புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லுனராகவும் அமரர் திரு. இ.வைத்திலிங்கம் அவர்கள் மிருதங்கம் வாசிப்பதில் வல்லுனராக திகழ்ந்தது மட்டுமல்லாது வாத்தியக் கலையையும் இவ்வூரில் வளர்த்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. இவ்வாத்தியக்கலையானது தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதனை திரு.பிரமநாதன் (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் செல்வன் மோகலிங்கம் சஞ்சீவன் என்பவருக்கு முறையாக மிருதங்கத்தினை பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்துள்ளமை, பக்கவாத்தியம் வாசித்து வருகின்றமை மூலம் புலனாகின்றது. மேலும் திரு தில்லைநாதன் சண்முகசுந்தரம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்) மிருதங்கம் வாசிப்பதன் மூலமும் திரு வடிவேலு பன்னிருகையா அவர்கள் ஆர்மோனியம் வாசிப்பதன் மூலமும் இக்கலையானது பேணப்பட்டு வருவதனை அவதானிக்கலாம்.
திருமதி மாலதி தர்மா, திருமதி நந்தினி நடராஜா ஆகியோர் நடனக்கலையை சிறப்புறக் கற்று அரங்கேற்றியதோடு இக்கலையை வளர்த்து வந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட்டு வந்த நடனக்கலையை திரு அனிருத்தன் (நுண்கலைமாணி) அவர்கள் நடனக் கலையை கற்றுத் தேறி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடன ஆசிரியராக திகழ்வது மட்டுமல்லாமல் மாணவர்களிடையே கலையை வளர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் நடனக்கலையின் ஒரு அம்சமாகிய காவடி, கோலாட்டம், கும்மி போன்றவற்றை காரைநகரைச் சேர்ந்த திரு.மு.மயில்வாகனம் அவர்கள் சிறப்புற வளர்த்து நடனக்குழுவை தயாரித்து பல இடங்களில் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார் என்பதில் எதுவித ஐயமுமில்லை. 2010 ம் ஆண்டில் இவர் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாவருடம் நடாத்தப்படும் கலை இலக்கிய விழா கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற போது வடமாகாண ஆளுநர் விருதினை கிராமியக் கலைக்கு பெறற்மை இவரது கலைச் சேவைக்கு கிடைத்த பாராட்டாகும்.

எமது ஊரைச் சேர்ந்த புகைப்படக்கலையில் சிறந்து விளங்கும் அ.திருநாவுக்கரசு, திரு.மூ.தேவதாஸ் நாடகக் கலையில் சிறந்து விளங்குகின்றார்கள். திரு.மூ.தேவதாஸ் அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டி 2012ல் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைநகரைச் சேர்ந்த இ.மதியழகன் அவர்கள் சித்திரக் கலையில் வல்லுனராகவும் மாணவர்களிடையே சித்திரக்கலையை சிறப்புற வளர்த்து வருகின்றமை புலனாகின்றது. அடுத்து சிற்பக்கலை வித்துவான் மு..சபாரத்தினம் அவர்கள் வளர்த்து வந்த பேச்சுக்கலையை இன்று தமிழருவி த.சிவகுமாரன், என்.கணேசமூர்த்தி, எஸ்.பாலசுப்பிரமணியம், எ.பி.அருளானந்தம், காரை எஸ்.கங்காதரன், பண்டிதை யோகா சோமசுந்தரம், பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை சண்முகரத்தினம், திருமதி. பராசக்தி பரராசசிங்கம் திருமதி வீரமங்கை யோகரத்தினம் போன்றவர்கள் வளர்த்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

எமது ஊரைச் சேர்ந்த குஓஊ.நடராசா மற்றும் பிரம்ம ஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் பல நூல்களை எழுதி வெளியிட்டு வந்துள்ளனர். இன்று இக்கலையை திரு.சி. பொன்னம்பலம் அவர்கள் பேணிக்காத்து வருகின்றமையை காணலாம். இது மட்டுமல்லாது நமது ஊரில் கலைகளை வளர்ப்பதற்கு மன்றங்களும் பெரும் பங்காற்றி வருகின்றது என்பது கண்கூடு. ஆரம்பத்தில் திருமதி இராசமலர் நடராசா அவர்களால் நடாத்தப்பட்டு வந்த முத்தமிழ் கலைமன்றமானது பல கலைகளை வளர்த்து பல கலைஞர்களை உருவாக்கியது மட்டுமல்லாது இன்றும் பலகலைகளை வளர்த்து மாணவர்களிடையே கலை ஆற்றல்களை ஏற்படுத்தி விருத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அடுத்து காரைநகர் கிழவன்காடு கலாமன்றமானது காரை மாணவர்களுக்கு கிடைத்த ஒரு கலை ஊற்று என்று கூறுவது மிகையாகாது. ஏனென்றால் தொடர்ந்து பல வருடங்களாக சங்கீதம், பண்ணிசை, அறநெறி நடனம், மிருதங்கம், வயலின், நாடகம், சித்திரம், யோகாசனம், கோலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுதல், மாலை கட்டுதல் போன்ற இன்னோரன்ன கலைகளை திறமைமிக்க ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் வளர்த்து வருவது மட்டுமல்லாது பல நிகழ்வுகளிலும், போட்டிகளிலும் மாணவர்களை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் பங்கு பெறச் செய்து சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெறச் செய்து கலைத்துறையை வளர்த்து வருகின்றது என்பதில் எதுவித ஐயமுமில்லை. மேலும் ஆலயங்கள் தோறும் பஜனைப் பாடல்களையும், இசைக்கச்சேரிகள், நடன நிகழ்வுகள், வாத்திய நிகழ்ச்சிகள், நாடகம் போன்றவற்றை வழங்கி மக்களை இசை வெள்ளத்தில் ஆழ்த்தி வருகின்றது. இதன் மூலம் மாணவர்களிடையே கலை ஆற்றல்களை மட்டுமன்றி தலைமைத்துவம், ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை போன்ற நற்பண்புகளையும் உருவாக்குகின்றது என்பது கண்கூடு.

எனவே எமது ஊரில் கலையானது மென்மேலும் சிறப்புற வளர்ச்சியடைவதற்கு எமது ஊர்க்கல்லூரி இசை ஆசிரியர்கள் கலைமன்றங்கள், காரைநகர் பிரதேச கலாசார பேரவை என்பன ஒத்துழைப்பு நல்குமாக இருப்பின் காரைநகர் இசை வளர் நகராக மாறும் என்பதில் ஐயமில்லை. இத்துடன் காரை ஆலயங்களில் பண்சுமந்த திருமுறைகளைப் பாட ஓதுவார்களையும் மாணவர்களையும் உருவாக்க வேண்டும் என்பது எனது எண்ணம். எனவே இதனை இசையாசிரியர்கள், மன்றங்கள், மாணவர்கள், சபைகள், போன்றவை சேர்த்து நிறைவேற்றும் என்பது திண்ணம்.

சிற்பக்கலை

விஸ்வ பிரம்மாவின் ஐந்து திருமுகங்களிலிருந்து தோன்றிய தச்சர், சிற்பி போன்றவர்களில் மரபுவழிவந்த ஆசாரிமார்களுள் காரைநகர் களபூமி காளி கோவிலடியில் பெருங்குடிகளாம் ஆசாரிமாரர்களும், மணற்காட்டு அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பெருங்குடிகளாம் ஆசாரிமார்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் காளி கோவிலடி ஆசாரிமார்களில் ஒருவரான துரைச்சாமி திருநாவுக்கரசு என்பவரை நோக்குமிடத்து விட்டு வேலை, வீட்டுத்தளபாடம், கோயில் வேலை, அலுவலக கட்டட வேலைகள் என்பவற்றை திறம்படச் செய்து தடம் பதித்தமை, ஈழத்துச் சிதம்பரத்திற்கு தேர் சப்பறம் செய்தமை, திக்கரை முருகமூர்த்தி ஆலயம், பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயம் போன்றவற்றிற்கு சப்பறம் செய்தமை கொட்டகை அமைத்தமை போன்றவற்றை சிறப்பாகச் செய்து சிற்பக்கலை விற்பன்னராக திகழ்ந்தமை கண்கூடு. இவர் இதன் மூலம் பட்டங்களைப் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் இன்று இவரது புத்திரர்கள் இக் கலையை வளர்த்து வருகின்றனர். மேலும் காரை கதிர்காம கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை ஸ்ரீகரன் என்பவர் தமது பரம்பரைத் தொழிலான சிற்பக்கலையை வளர்த்து வருவதனைக் காணலாம். கல்விளான், அனிஞ்சயன் குளம், மல்லாவி, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றின் கொட்டகைகளை அமைத்து பாராட்டுக்களை பெற்றார். மேலும் மணற்காட்டு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த நடராசா பரம்பரையில் வந்துதித்த சிவபாலன் என்பவரிடம் கற்றுக் கொண்டும் இணைந்தும் பல சித்திரத் தேர், வாகனங்கள், சிம்மாசனம் திருவாசி போன்றவற்றையும் வடித்துள்ளார். இன்றும் இக்கலையானது பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வருவதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. நடராசா பாரதி
காரைநகர்

# காரைநகரும் ஆலயங்களும்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரில் சைவ ஆலயங்கள் நிறைந்து விளங்குகின்றன. கல்வியில் சிறந்த சான்றோரும் பொருள் ஈட்டும் வணிக குழாமும் தொல் குடித்தோன்றல் வேளான் மக்களும் சைவச்சான்றோரும் இணைந்து வாழும் ஊராகும். உலகம் உவப்ப உயர்ந்து ஓங்கி நிற்கும் காரைநகர் தனிசசிறப்புடன் திகழ்கிறது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் முதுமொழிக்கேற்ப ஆலயங்களை நெருக்கமாக அமைத்து மக்கள் வழிபாடு செய்து வருகிறார்கள். நாலரை மைல் நீளமும் மூன்றரை மைல் அகலமும் கொண்ட காரைநகரில் அறுபதுக்கும் மேற்பட்ட ஆலயங்கள் விளங்குகின்றன. இவற்றில் தேரோடும் மகோற்சவம் நடைபெறும் ஆலயங்கள் பன்னிரண்டும் அலங்கார உற்சவம் பத்து நாளும் நடைபெறும் ஆலயங்கள் பதிநான்கும் நாளாந்த பூசை விசேடபூசைகள் நடைபெறும் ஆலயங்கள் மிகுதியுமாக விளங்குகின்றன.

**மகோற்சவம் நடைபெறும் ஆலயங்கள்**

01. வியாவில் ஜயனார் ஆலயம்
02. காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில்
03. வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம்
04. மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்
05. துறைமுக பிள்ளையார் ஆலயம்
06. பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய ஆலயம்
07. கருங்காலி முருகமூர்த்தி கோவில்
08. திக்கரை முருகமூர்த்தி கோவில்
09. பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்மன் ஆலயம்
10. மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயம்
11. அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோவில்
12. சிவகாமி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம் நடைபெறும் ஆலயங்கள்

01. கிழவன்காடு கதிர்காம சுவாமி கோவில்
02. மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய ஆலயம்
03. மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயம்
04. பத்தர்கேணி வான்மீக விநாயகர் ஆலயம்
05. ஆலங்கன்று ஞான வைரவர் ஆலயம்
06. புளியங்குள பிள்ளையார் கோவில்
07. தங்கோடை நாகம்மாள் கோவில்
08. தெருவடிப்பிள்ளையார் கோவில்
09. களபூமி காளி கோவில்
10. வலந்தலை கண்ணகி அம்மன் கோவில்
11. இலகடி அத்திபுரம் கந்தசாமி கோவில்
12. கல்வந்தாழ்வு ஸ்ரீமுருகன் கோவில்
13. நீலிப்பந்தனை அம்மன் கோவில்
14. பலகாடு இராஜேஸ்வரி அம்மன் கோவில்

## விசேட பூசை நடைபெறும் ஆலயங்கள் சில

01. தன்னை பிள்ளையார் கோவில்
02. களபூமி மாதாங் கோவில்
03. விளானை வைரவர் கோவில்
04. பொன்னாவளை பிள்ளையார் கோவில்
05. சிதம்பரமூர்த்தி கேணி வைரவர் கோவில்
06. மொந்திபுலம் ஞான வைரவர் கோவில்
07. சத்திரந்தை ஞான வைரவர் கோவில்
08. இலகடி சேவகர் கோவில்
09. சடையாளி வைரவர் கோவில்
10. தினகரம் பிட்டி வைரவர் கோவில்
11. திண்ணபுரம் பத்திரகாளி கோவில்
12. தங்கோடை காளி கோவில்
13. சுப்பிரமணிய வீதி முதலியார் கோவில்
14. பொன்னம்பலம் வீதி வீரபத்திரர் கோவில்
15. பெரிய தம்பிரான் ஆலயம்
16. நீலிப்பந்தனை காளி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் சிலவற்றை விரிவாக நோக்குவோம்

## 01.ஈழத்துச்சிதம்பரம் எனப்போற்றப்படும் திண்ணபுரச் சிவன் கோயில்

இவ் ஆலயங்களில் நடு நாயகமாக விளங்கும் ஆலயம் ஈழத்துச்சிதம்பரம் எனப்போற்றப்படும் திண்ணபுரச் சிவன் கோயிலாகும். ஈழத்திருநாட்டிலுள்ள சிவ ஆலயங்களில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம் போன்று ஈழத்துச் சிதம்பரமும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்தலம் இந்தியஉவிலுள்ள சிதம்பரக் கோயிலில் நடைபெறும் கிரியை மரபுகளை பாரம்பரியமாகச் செய்து வருவதாலும் மார்கழித் திருவாதிரை உற்சவமும் ஒத்து விளங்குகின்ற காரணத்தாலும் ஈழத்துச்சிதம்பரம் எனச் சைவச்சான்றோர்களால் போற்றப்பட்டு வருகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவும் விசேடமாக அமைந்த பெருங்கோயிலாகும்.

இத்திருக்கோயிலில் அருவுருத்திருமேனியாக விளங்கும் சிவலிங்கப் பெருமானுக்கும், பூரணை, புட்கலை சமேத ஜயனார் பெருமானுக்கும் அடுத்தடுத்து இரு கோபுரங்கள் வானை ஓங்கி நிற்கின்றன. இவ்ஆவயத்தில் அருள்பாலிக்கும் நடராஜப் பெருமானின் திருவுருவம் மிக அற்புதமானது. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் திருவடியின் இருமருங்கிலும் தொழுதேத்த முயலகன் மேல் ஊன்றிய வலத் திருப்பாதமும் தூக்கி வளர்த்த இடப்பாகமும் கொண்ட எம் பெருமான் சிவகாமியம்மையாருடன் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் குமிழ் சிரிப்புடன் அருள்பாலிக்கும் காட்சி அற்புதமானது. தேரடியில் வன்னி மரத்தின் கீழ் ஜந்து கரம் கொண்ட ஆனைமுகனின் திருக்கோலமும் விசேடமானதாகும்.

இத்தலத்தில் பங்குனி, ஆடி, மார்கழி ஆகிய மாதங்களில் பெருந்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் மார்கழி மாதத் திருவாதிரை உற்சவம் சிறப்புடையது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து வழிபடுவார்கள். பத்து நாட்களும் காலையும் மாலையும் திருவெம்பாவை ஓதல் நடைபெறும். ஒன்பதாம் நாள் ஆடல் வல்லான் ஆகிய நடராசப் பெருமான் செவ்வந்திப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு சிவகாமிசுந்தரியோடு ஆனந்த நர்த்தனம் புரிந்த வண்ணம் தேரில் ஆரோகணமாவதற்கு எழுந்தருளும் காட்சி உள்ளத்தை ஈர்க்கும் காட்சியாகும். மூன்றாம் வீதியில் பஞ்சரதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அன்று இரவு இரண்டு மணியிலிருந்து ஆனந்தக் கூத்தனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதிகாலை 6 மணிக்கு ஆருத்திரா தரிசனக் காட்சியையும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு ஆனந்த பரவசமடைவார்கள்.

இத்தலத்தின் மகிமையை நாகமுத்துப் புலவர் இயற்றிய சுந்தரேசர் திருப்பதிகம், சுந்தரேசர் திருவூஞ்சல், சுந்தரேசர் பக்திரச கீர்த்தனைகள் ஆகிய பாடல்களும் கார்த்திகேயப் புலவர் இயற்றிய திண்ணபுர வெண்பா ஆகிய பாடல்களும் பஞ்சாட்சரக்குருக்கள் இயற்றிய திண்ணபுர வெண்பா ஆகிய பாடல்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஈழத்து சிதம்பரபுராணம், ஆண்டிகேணி ஜயனார் புராணம் ஆகியன தலபுராணங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றன.

**02.வியாவில் ஐயனார் ஆலயம்**

காரைநகரில் முதல் முதலில் தோன்றிய ஆலயம் வியாவில் ஜயனார் ஆலயமாகும். யாழப்பாணத்தை தமிழரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் குளக்கோட்ட மன்னனால் ஏழுநிலை மாட கோபுரத்துடன் எழுச்சி பெற்ற ஆலயமாக விளங்கியது. இவ் ஆலயத் திருப்பணிகள் முடிவுற்று 1518ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 25ம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறிய முடிகிறது.

இத்தகைய பழைமை வாய்ந்த ஆலயத்தை ஒல்லாந்தா் ஆட்சிக்காலத்தில் கோயிலை இடித்து தரைமட்டமாக்கி ஆலயக் கற்களைக் கொண்டு ஊர்காவற்றுறையில் கடல் கோட்டையைக் கட்டுவித்தனர். இக் கோவிலின் முல விக்கிரமாகிய பூரணை, புட்கலை, சமேத ஜயனாரின் திருவுருவம் திண்ணபுரத்தில் ஒளித்து வைத்தனா் எனவும் ஆண்டி முனிவர் கேணியை தோண்டிய போது இவிவிக்கிரகம் வெளிப்பட்டுள்ளது. அதனை ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில் அமைத்து வழிபட்டனர்.

ஆங்கிலேயர் காலத்தில் மதச்சுதந்திரம் வழங்கியமையால் வியாவில் ஜயனார் ஆலயமும் சிறிய அளவில் அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. காலத்துக்குக்காலம் கோயில் கட்டப்பட்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டும் பெரும் ஆலயமாக இன்று விளங்குகின்றது. மூர்த்தி, தலம், தீா்த்தம், மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்ஆலயத்தில் மகோற்சவம் ஆடி அமாவாசை தினத்தினை தீஉத்தத் திருவிழாவாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெற்று தேரோடும் காட்சியும் இடம்பெற்று வருகின்றது. இவ்வாலயச் சூழலில் சுவாமி தீர்த்தமாடுவதற்கும் பிதிர்க்கடன் செய்வதற்கும் வசதியாகத் தீர்த்தக்கரை அமைந்துள்ளது. அறப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு வரும் ஆலயமாக விளங்குகின்றது.

**03.வாரிவளவு பிள்ளையார் ஆலயம்**

பழமையும் பெருமையும் வாய்ந்த வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் காரைநகர் மேற்கு வீதியில் வாரிவளவு எனும் குறிச்சியில் அமைந்துள்ளது. சுப்புடையார் பரம்பரையினர் 1880 ஆம் ஆண்டு தொட்டு சிறு கோயில் மண்ணால் கட்டி வழிபட்டனர். திரு. த. கணேசபிள்ளை காலத்தில் பெருங்கோயிலாகக் கட்டி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1972ஆம் ஆண்டு ஈ.வி. கார்த்திகேசு, ந. கணபதிப்பிள்ளை, சி.சிவஞானம் ஆகிய மூவரைக் கொண்ட குழுவினரிடம் நிர்வாகப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சி.சிவஞானம் அவர்கள் மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்னும் முதுமொழிக்கேற்ப இராச கோபுரம் 982ல் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. காரைநகரில் முதன்முதலாக இராச கோபுரம் கட்டப்பட்ட திருக்கோயில் என்ற பெருமையைப் பெறுகிறது. மேலும் மூன்று பக்கங்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரம் அமைக்கப்பட்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டும் 2004 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இவ் ஆலயத்தில் நித்திய பூசைகளும், நைமித்திய பூசைகளாக விளங்கும் சதுர்த்தி விரதம், பிள்ளையார் கதை, கஜமுகன் சங்காரம் ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சித்திரைப்புத்தாண்டு தினத்தில் இரதோற்சவமாகக் கொண்டு பத்துத்திங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றன.

## 04.திக்கரை முருகன் திருத்தலம்

களபூமியில் திக்கரை எனும் பகுதியில் கலியுக வரதனாகிய முருகப்பெருமான் அருள்பாலிக்கும் ஆலயமாக விளங்குகின்றது. வயல் செறிந்த இப்பகுதியில் வயல் மேட்டில் வேல் வைத்து ஊர் மக்கள் வழிபாடு செய்து வந்த வேளையில் காசிநாதர் என்னும் பெரியார் முருகனின் அருளால் இழந்த கண்பார்வையை மீளவும் பெற்றார். இதனால் அவர் சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டார். 1880 ம் ஆண்டளவில் கனகசபை காசிநாதர் பொறுப்பேற்று பெருங்கோயிலாகக் கட்டி 1902ல் கும்பாபிஷேகத்தையும் நடத்தி முடித்தார். நித்திய பூசையை சிறப்பாக நிகழ்த்துவதற்கு 25 பரப்பு நெற் காணியும் கொள்வனவு செய்து கோயிலுக்கு தரும சாசனம் செய்து வைத்தார்.

1928ம் ஆண்டிலும் 1974ஆம் ஆண்டிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றன. நித்திய பூசையும் நைமித்திய பூசைகளும் ஒழுங்காக நமைபெறுபவையாக விளங்குகிறது.

05.கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலயம்

கருங்காலியில் உள்ள போசுட்டி காணியில் அமைந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானின் ஆலயமாகும். இவ் ஆலயம் 1865 ம் ஆண்டில் அமைக்கப்ட்டு க.இராமலிங்கம் அவர்களால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. 1891ம் 1925ஆம் ஆண்டுகளில் ஆலயம் விஸ்தரிக்கப்பட்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. 1948 ல் காந்தியவாதியான இராமலிங்கம் நாகலிங்கம் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். 1986 இல் இராசகோபுரம் அமைக்கப்பட்டும் தேர்த்திருப்பணியும் முடிவுற்றதும் கும்பாபிஷேகத்தையும் நடத்தி முடித்தனர். இடப்பெயர்வினால் சிதைவடைந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்து 2002.04.25 இல் மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

இக் கோயிலில் நித்திய பூசைகளும் மகோற்சவம் பத்து நாட்களும் வைகாசி விசாகம் கந்தசஷ்டி திருக்கல்யானம் ஆகிய சிறப்பான நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. இவ்ஆலய முருகப் பெருமானின் மகிமையை கார்த்திகேய ஜயர் அவர்கள் நூல்கள் இயற்றினார். “திருப்போசைவெண்பா” என்றும் பிரம்ம ஸ்ரீ கார்த்திகேய ஜயரால் பாடப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.மணற்காடு முத்துமாரிஅம்மன் ஆலயம்

மேற்கு வீதியில் மணற்காடு என்னும் குறிச்சியில் அமைந்திருந்து அருள்பாலிக்கும் ஆலயமே முத்துமாரிஅம்மன் ஆலயமாகும். போர்த்துக்கேயர் காரைநகருக்கு வந்த காலப்பகுதியில் மக்கள் பெரியம்மை நோயினால் பெரிதும் அவதிப்பட்டனர். இந்நோயை அகற்றுவதற்கு முத்துத்தாண்டவர் என்னும் பெரியார் இவ் ஆலயத்தை கட்டி கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார். இதனால் பெரியம்மை நோயினின்றும் மக்கள் விடுதலை பெற்றனர்.

1947 ஆம் ஆண்டிலும் 1985 ம் ஆண்டிலும் கோயில் விஸ்தரிக்கப்பட்டும் புனருத்தாரணம் செய்தும் மகாகும்பாபிஷேகங்கள் நடத்தி வந்தனர். இவ் ஆலயம் பல்லாண்டு காலமாகப் பஞ்சாயத்து முறைப்படி பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இவ் ஆலயத்தில் பங்குனி மாதத்தில் மகோற்சவமும் நவராத்திரி பத்து நாட்களும் பௌர்ணமி தினங்களில் விசேட திருவிழாக்களும் நடைபெற்று வருவது வழக்கமாகும்.

07.பாலாவோடை அம்மன் கோயில்

பாலாவோடை என்னும் குறிச்சியில் கிழக்கு கடற்கரையோரத்தில் எழுந்தருளி அருள் பொழியும் அம்மன் ஆலயமாக விளங்குகின்றது. நாகஅரசின் வழிபாட்டுத்தலமாக விளங்குவதால் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் அம்மனின் கீரிடமாக ஐந்து தலைநாகம் அமைந்திருக்கிறது.

சோழ மன்னர்கள் ஈழநாட்டில் செல்வாக்குப் பெற்ற காலத்தில் முருகைக்கற்களால் அமைக்கப்பட்ட பழமை பொருந்திய ஆலயமாகும். இவ் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. வழிபாட்டுக்குரிய விக்கிரகங்கள் பாலாவோடையில் உள்ள மரங்கள் செறிந்து வளர்ந்து காட்டுப்பகுதியாக விளங்கிய இடத்தில் மறைத்து வைத்திருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தம்பி பேரம்பலம் என்னும் பெரியார் மூலம் குறிஞ்சாக்குழி பற்றைக்குள் இருந்து சில விக்கிரகங்கள் எடுக்கப்பட்டன. ஊர்மக்களின் உதவியுடன் ஆலயம் அமைத்து வழிபட்டனர். 2001ஆம் ஆண்டு கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டும் இராசகோபுரம் கட்டப்பட்டும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றன.

வைகாசி மாச விசாகப் பௌர்ணமி திதியை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்து நாட்களும் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து வேள்வி நிகழ்வும் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை, மாதப்பிறப்பு, புதுவருடப்பிறப்பு போன்ற நாள்களில் விசேட பூசை நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்.த. ஜெயசீலன்

## எது நிகர்?

கடலும் வயல்களும் காதல் புரிந்ததால்,
கரையில் சவுக்கு மரங்கள் அடர்ந்ததால்,
திடமுடன் தமிழ் சைவம் தழைப்பதால்,
செல்வம் வீரமும் கல்வியும் ஓங்கலால்,
குடிக்க நீருக்கு அருந்தலே தோன்றினும்...
குணத்தில் பண்பில் குளிர்ந்தோர்கள் சூழ்வதால்,
இடர் களைந்து உழைப்போர் நிறைந்ததால்,
இன்றும் காரை மண் வெல்லும்...பெருமையால்!

"காகம் பறக்காத ஊரும் இல்லை...இந்தக்
காரைதீவார்கள் போகாத ஊரில்லை"
யாரும் அறியாத பழமொழி...உண்மைதான்!
வியாபாரம் காரை மண்ணின்...மகிமைகாண்!
பாரம்பரியங்கள் மீட்டு... எங்கேகிலும்
"பற்றை"விட்டுக் கொடாமல்...தனித்துவம்
காப்போர் இன்றைக்கும் வாழும் நகர் இந்தக்
காரைநகர் ...இதற்கேதடா சொல் நிகர்?

எந்த இடியையும் தாங்கிக்...குருவிபோல்
இளைத்துக் களைத்துஞ் சிறிது சிறிதாய்த் தேடி,
அன்பு ஆசாரம் விருந்தோம்பல் பேணி....நல்
அரவணைப்பினால் கூடி, இன்றும் பழஞ்
சந்ததிப் புகழ் உலகெலாம் பேசி, இத்
தலைமுறைக்கும் ஒழுக்கம் பழக்கி, நம்
செந்தமிழ்ச் சைவ நெறியை உயர்த்தி, பேர்
சிறக்க ஓங்குதே காரை நகர்ப் பதி!
கோவில்கள், குளம்,கேணி, துறைமுகம்,
வெளிச்ச வீடு, கடற்கோட்டை, பனைஅரண்,
"வேணன்" அணைப் பாதுகாப்பு, தரைதொடும்
வீதி, "மொட்டைக்கறுப்பன்"இ அருள்மிகு
"ஈழத்துச்சிதம்பரத்தின்" பலம், எழில்
இலங்கும் உல்லாசச் "சவுக்கடிப் பொற்கரை",
காரை நகரின் முகங்கள் இவை! என்றும்
காய்ந்து கருகாது காரை நகர் விதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## பிரதேச பாடல்

இராகம்: கானடா தாளம்:ஆதி(திஸ்ரம்)

1. கனிவான கலை வளமும் கவிதான கடல் வளமும்
காரைநகரின் செல்வ அழகே//
தணியாத வாழ்வினிலும், தாய் தந்தை மாண்பினிலும்
தங்கமானதே காரைநகர்

கனிவான.....

2. இனிதான ஆலயங்கள் , எங்குமே அருள் சுரக்க
ஓப்பிலா மணி ஒலிக்குமே, - அங்கே,
பணிவோடு செல்வமெல்லாம் பாரெல்லாம் முதலாக
பாலிக்கும் சிவாலயமே் பரவ நல்ல ஈழத்துச் சிதம்பரமே

கனிவான.....

3. மனிதருள்ளும் மாணிக்க மாந்தர்கள் வாழ்கின்ற
மகிமையுள்ள மண் காரைநகர் - அங்கே,
தனித்துவமான தங்கப் பெண்கள் பேறுகொண்ட நகர்
தலைமை வரமே காரைநகர்

கனிவான.....

4. நனிகொள்ளும் அழகான கடல் பேசும் கசூரினா
நமதாகும் திருவூரிலே, - அங்கே,
பனிதூங்கும் பனைவளம், பாலெல்லாம் நலமாக
பசிதீர்க்கும் பயிர் விளையும் - அதுதான் பாங்கான காரைநகர்

கனிவான.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வி. ஜீ. தங்கவேல்
பனைவள ஆய்வாளர்

# வரலாற்றில் பனையின் சிறப்பும் பண்டைத்தமிழர் வாழ்வும்

ஆய்வச் சுருக்கம்

- இன்றைய நிலையில் பனையின் வகிபங்கு
- பனையின் பயன்பாடுகள்
- பனையின் புவியியல் அமைவிடங்கள்
- தொல்லியல் ஆய்வு விடயம்
- பனைக்கொடைச்சிறப்பு
- தமிழ் இலக்கியத்தில் பனைவளம்
- தொல்காப்பியமும் பனைவளமும்
- யாழ்ப்பாணமும் பனையும்
- வடக்கு கிழக்கு மாகாணங்களின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் பனை வளம்
- பனையின் பெருமை

இந்த ஆய்வானது பகுப்பாய்வு முறையியல், வரலாற்று முறையியல் போன்றவற்றின் துணையுடன் மேற்கொள்ளப்படுவதுடன் இவ்ஆய்வுக்கு தேவையான தரவுகள் ஆய்வுடன் சம்மந்தப்பட்ட நூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள், சஞ்சிகைகள், போன்றவற்றின் ஊடாக பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

சொல்லொணாத் துன்பங்களுக்கு நம்மவரில் பெரும்பாலானோர் முகம் கொடுக்கும் வேளைகளில் இறைவன் அருளால் மண்ணின் மகிமையால் நம்முன்னோர் தவப்பயனால் நமக்கு கிடைத்த அரும்பெரும் சொத்துக்களால் மலைபோல் வரும் சோதனைகள் திணையளவாகச் சிறிது சிறிதாகி வருவதையும் பனித்துளி போல் மறைவதையும் காணலாம். எமது எண்ணங்களில் ஏதாவது ஒரு நினைவைத் தருவது "கற்பகதரு" எனப் போற்றிப் புகழப்படும் பனை மரமாகும். பெருமைக்குரிய பனை பற்றிய சிறப்பும் பழந்தமிழர் வாழ்வுடன் இரண்டறக் கலந்த தன்மையினையும் பண்பாட்டுக் கோலங்களையும் அறியக் கூடியதாகவுள்ளது.

இன்றைய நிலையில் முழுமையான அபிவிருத்தியினை அடையாத ஒன்றாகப் பனைவளம் காணப்படுகின்றது. பண்டைய பெருமையினையும் நீண்ட காலமாகப் பலரின் அக்கறையற்ற தன்மையினால் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகப் பனைவளம் காணப்படுகின்றது. இதன் வளர்ச்சியுடன் அடையாளம் காணப்பட்ட நிறுவனங்கள் எதுவும் 1970 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆரம்பிக்கப்படவில்லை. பனைவள உற்பத்திகள் இலங்கையில் வெகுவாகப் பிரசித்தமாகாத நிலையில் இருப்பதற்கு பனைவளம் இலங்கையின் வடக்க கிழக்கு மாகாணங்களின் தனியுரிமை வளமாகக் காணப்படுவதுடன் வெளிநாட்டவர்களின் கவனத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்க்கத் தவறியதும் நீண்ட தூரத்தில் இருப்பதுமாகும். ஆயினும் பனைவளப் பயன்பாடு நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டு பொருளாதார ரீதியான தரம் உயர்வடையுமாயின் மேற்குறிப்பிட்ட பிரச்சனைகள் யாவும் தானாகவே நீங்கிப் போகும். பனம் பொருள் உற்பத்திகளின் பொருளாதார நலன்கள் மக்கள் நடைமுறை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதன் மூலம் பனை வளத்தின் மேம்பாடு சமூகத்தின் மத்தியில் உயர்வடைந்து செல்லும் வகையில் உதவுவதற்காக மூலநிறுவனங்களைக் கட்டி எழுப்புதல் அவசியம் ஆகும். இந்த வகையில் கூட்டுறவு இயக்கம், பனை அபிவிருத்திச் சபை, உயர்கல்வி நிறுவனங்கள், சமூகப்பாற்றாளர்கள், பொருளியலாளர்கள், ஆய்வாளர்களின் ஆக்கபூர்வமான பணிகளினால் இன்று சிறப்பாக முன்னேறிவரும் நிலையில் யாழ் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினால் மேற்கொள்ளப்படுகின்ற யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சியின் ஓர் அங்கமான இவ்ஆய்வரங்கில் இவ்அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

உலகில் உள்ள தாவரங்களில் பனைவளம் வற்றாத இயற்கைச் செல்வமாகும். மனித வாழ்வுக்கு இயற்கை அன்னை வாரி வழங்கும் சூரிய ஒளி, மழை, காற்று, போன்று பனையும் நிலப் பயன்பாடு, பசளை, நீர் இல்லாத இடங்களிலும் மனிதனுடைய நேரடிக் கண்காணிப்பு இல்லாத நிலையிலும் தானாகவே வளர்ந்து மக்களுக்கு பயன் கொடுக்கின்ற தாவரம் பனையைப் போல் வேறில்லையென்பர். இதனால் பனையை தாவரங்களின் அரசி என்று பயன் தெரிந்தோரால் போற்றப்படுகின்றது. சிறந்த குடிசைக் கைத்தொழிலுக்கு அதிக மூலப் பொருட்களை வழங்கி தம்மை அண்டி வாழ்கின்ற மக்களுக்கு நுனிமுதல் அடிவேர் வரை உதவும் மரம் வேறொன்றில்லை. கால்நடைகளின் உணவாகவும் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கும் பனைவளம் உதவுவதுடன் ஏற்றுமதிக்கான உற்பத்திகளை வழங்குவதன் மூலம் அந்நியச் செலவாணியையும் பெறுவதற்கு உதவுகின்றது.

பனைவளம் மத்திய ரேகையின் வடக்கே 450 பாகையும் தெற்கே 450 ற்கும் இடைப்பட்ட "தாலவட்டம்" என அழைக்கப்படும் உஷ்ண வலயப் பிரதேசங்களிலுள்ள மேற்கு ஆபிரிக்கா, தெற்காசியா, தென்கிழக்காசியா ஆகிய பிரதேசங்களில் குறிப்பாக இந்தியா, இலங்கை இந்தோனேசியா, வங்காளம், தாய்லாந்து, ஆபிரிக்கா, மலேசியா ஆகிய நாடுகளில் பனைகள் செழிப்புற்று வளர்கின்றன. பனைவளம் அதிகூடிய எண்ணிக்கையான 60 மில்லியன் மரங்கள் இந்தியாவிலும் 11.2 மில்லியன் மரங்கள் இந்தோனேசியாவில் 10 மில்லியன் தாய்லாந்தில் 02 மில்லியன் பர்மாவில் 2.3 மில்லியன் மதகாரில் 01 மில்லியனும் கம்பூச்சியாவில் 02 மில்லியனும் ஏனைய இடங்களில் தொகை குறைவாகவும் பரந்துள்ளன.

பனையின் தொல்லியல் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள தொல்லியலாளர்கள் கி.மு 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலும் பனைத்தொழில் செழிப்புடன் காணப்படுவதற்கான உயிரியல் சுவடுகள் சான்று பகர்வதாக அறிவித்துள்ளனர். பனைவளம் அதிகமுடைய பாரத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் கி.மு 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் பனைத்தொழில் மேற்கொண்டதற்கான சரித்திர சான்றுகள் காணப்படுகின்றன. பனையிலிருந்து 801 வகையான பொருட்களைப் பெறலாம் என்பதனை தமிழ்நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த அருணாசலக் கவிராயரால் எழுதப்பட்ட " தாலவிலாசம்" அல்லது "பனைமரக்காவியம்" எனும் பழமையான நூல் பகிருகின்றது. யாழ்ப்பாண நல்லூரைச் சேர்ந்த ச.சு. பொன்னம்பலமுதலியார் 14.12.1979 ல் இயற்றி வெளியிட்ட "பனை நூறு" எனும் கவிதை நூல் மூலம் சிறப்பித்துள்ளார். குடல் கொண்ட தமிழகத்தில் " ஏழ் பனைநாடு" இருந்ததாக பண்டைய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. குடல் கொண்ட தமிழகத்தின் வடக்கில் எஞ்சிய நிலப்பரப்பு இலங்கையாகும். பண்டைய "ஏழ் பனைநாடு" அழிவுற்றதாயினும் அந்நிலப்பரப்பில் எஞ்சிய ஈழத்தில் பனைகள் நிலைபெற்று விளங்குகின்றன.

இந்த வகையில் இலங்கையில் ஒருகோடியே 25 இலட்சம் பனைமரங்களில் யாழ் மாவட்டத்தில் 77 இலட்சம் பனை மரங்கள் பொருளாதார அபிவிருத்திக்கும் சூழற் பாதுகாப்புக்கும் போச் சூழலில் மக்களைக் காக்கும் காப்பரணாகவும் பிரதானமாக வரண்ட பிரதேச நுண்ணுயிர்ச் சூழலைப் பாதுகாக்கவும் மண்ணரிப்பைத் தடுக்கவும் மண்மாரியிலிருந்தும் சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் மக்களைக் காக்கவும், மக்களுக்கும் கால்நடைகளுக்கும் உணவாகவும் உதவுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் 45,000 மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகவும் 25,000 குடும்பங்கள் மறைமுகமாகவும் பனை வளத்தில் தங்கியுள்ளன. ஆயினும் மொத்தப் பனைவளத்தில் 2சதவிகிதமான வளம் மட்டுமே கூடிய வருவாய் வழங்குகின்ற சாற்று உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் வளத்தின் நான்கு சதவிகிதம் மட்டுமே தற்போது ஏதோ ஒரு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

லோக கற்பக தரு எனவும் பஞ்சம் போக்கி எனவும் போற்றப்படும் பனைவளம் தமிழர் வாழ்வுடன் இரண்டறக் கலந்த தாவரமாகப் போற்றப்படுகின்றது. பண்டைய புலவர்களாலும் ஞானிகளாலும் சமயப் குரவர்களாலும் சித்தர்களாலும் அறிஞர்களாலும் மன்னர்களாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டது பனை வளமாகும். சமய குரவர்களில் திருஞான சம்மந்தர் ஆண்பனையை பெண்பனையாக மாற்றியும் மாணிக்க வாசகர் பனையின் அழகைப் போற்றியும் பாடியுள்ளார்கள். திருஞான சம்மந்தர் காலத்தில் பனையை வளர்த்தல் சிவதொண்டாகக் கருதப்பட்டது.

தமிழ் இலக்கிய அடிப்படையில் தமிழர் வாழ்வுடன் இரண்டறக் கலந்த தாவரமாக பனையைப் பற்றி தொல்காப்பியம் தொடக்கம் திருக்குறள் தொடக்கம் திருக்குறள், தேவார திருவாசகம், இதிகாசம் யாவற்றிலும் சிறப்புற்று பேசப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் பனைவளத்தின் தன்மை தமிழர் புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்கள் வாயிலாக பல ஒப்பீட்டுக் காரணங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். பனைக்கொடி ஏந்திய பலராமனும் பனம்மாலை அணிந்து போருக்குச் சென்ற சேரனும், பனைக்கொடி ஏந்திய ஞானிகளில் பீஷ்மரும் குறிப்பிடத்தக்கவர்கள். இதற்கான சான்றுகள் பல தெரிவிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர் குலம் பற்றியும் அவர்கள் வாழ்ந்த வரலாற்றையும் பனையைத் தெய்வமாக வழிபட்டதையும் செப்புகின்றது மகாவம்சம் எனும் நூல் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் ஈழத்தை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் சிலர் தமது பட்டப்பெயராக "பனையன்மாறன்" என்ற சிறப்புப்பெயர் கொண்டு ஆட்சி செய்ததாக பகருகின்றது.

அடுத்து பழந்தமிழர் வாழ்வில் பனைஉணவு நிலையிலே மக்களுக்கு உதவி புரிந்துள்ளதனைப் புலவர்கள் பலவாறு எடுத்து இயம்பியுள்ளார்கள். நல்லூரில் வாழ்ந்த நங்கையர் பதநீர் அருந்தி மகிழும் நிலையினைப் புறநானூற்றுப் பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். குறுந்தொகையில் ஆத்திரையினர் எனும் பெரும் புலவர் பனை மரங்களில் இருந்து இறக்கப்படும் கள் போதை மிக்கது. அக்கள்ளினை அருந்தி மக்கள் முனைவர். கள் இல்லாதவிடத்து பனை நுங்கினைப் பருகி தமது வேட்கையினைத் தணிப்பர் என்பார். பதிற்றுப்பத்தில் வரும் விருந்தினர்களுக்கு கள்ளும் சோறும் அளித்து உபசரிப்பதை விபரிக்கின்றது. சேரனது கொடைச்சிறப்பு பற்றி பாடும் புலவர் உணவுநிலையில் கள் அருந்தியதை முக்கியப்படுத்துகின்றார். பருகும் கள்ளுக்குப் பதிலாக விறகும் கொள்ளும் கொடுத்த செய்தியும் உணவு நிலையில் பனையின் பயன்பாடுகள் பெரும் வளங்களாக இருந்ததைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர்.

அடுத்துப் பனை மரத்தின் ஓலை உண்கலமாகப் பாவிக்கப்பட்டதனை கபிலர் தனது நற்றினை பாடல்கள் மூலமாக விபரிக்கின்றார். அதேபோல் புறநானூற்றுப் பாடலில் ஓலையினாலான உண்கலத்தில் உணவுப் பொருட்களை சுத்தமாக உண்பதற்கு பயன்படுத்தி வந்ததைப் பதிவு செய்துள்ளார். தமிழர் உணவருந்தும் கோலத்தை மூலங்கிழார் எனும் புலவர் இளம் பனை ஓலைகளிலிருந்து தயாரிக்கப்படும் "தட்டுவம்" என்னும் உண்கலம் தூய்மைமிக்கதாக குறிப்பிடுவர். இன்றும் கிராமங்களில் நடைமுறையில் தட்டுவம் பயன்படுத்தப்படுகின்றது. பனையின் இன்னொரு பகுதியான பன்னாடையின் உபயோகம் பற்றி புறநானூற்றுப்பாடல் மூலம் பதிவு செய்துள்ளார்கள்.

அடுத்து மொழி நிலையில் பனையின் சிறப்புப் போற்றப்படுகின்றது. பனை மனிதனுக்கு உணவும் உறையுளும் தந்ததுடன் அவன் மொழி நிலையிலும் உலாவுவது சிறப்பிடம் பெறுகின்றது. மரங்களிலே மனித வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது பனையே. பனையை அடியொற்றிய பழமொழிகளில் சில,

- பனை நிழலும் பரத்தையர் உறவும் போல்
- பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்
- குருவி கழுத்திலே பனம்பழம் கட்டியது போல்
- பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
- காவோலை விழ குருத்தோலை சிரிக்கின்றது
- பனைபட்டாலும் ஆயிரம் நின்றாலும் ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலோடு இரண்டறக் கலந்த தன்மையினையும் அவர்களின் அகவாழ்வு நிலையிலும், புறவாழ்வு நிலையிலும் நெருக்கமான பிணைப்பினைக் கொண்டமைந்த தன்மையினையும் பண்பாட்டுக் கோலங்களையும் அறியக் கூடியதாகவுள்ளது.

தொல்காப்பியத்தின் மரபியலில் (85) "புறக் காழனவே புல்லென மொழிப்" எனும் சூத்திரத்தில் புல்லும் மரபும் என இரு சொல்லின் உற்பத்தி கூறப்பட்டுள்ளது. இச் சூத்திரத்திற்குப் பொருள் கூறும் அறிஞர்கள் "புறத்துக் காழ்ப்பு" உடையனவற்றை "புல்" எனவும் "அகத்துக் காழ்ப்பு" உடையனவற்றை மரம் எனவும் கூறியுள்ளார்கள். "புறக்காழன்" எனவே அவ்வழி வெளிலு என்பது அறியப்படும். ஆவை பனையும் தெங்கும் கமுகும் புல் எனப்படும். இலுப்பையும், புளியும் அரசு முதலாயின மரம் எனப்டும்.

புறத்தே வைரமுள்ளனவனாய் உள்ளே ஓட்டையாகும் தன்மையான சோற்றி அல்லது சோத்தியைக் கொண்டனவாய் இருக்கும் தாவரங்களை "புல்" எனவும் வெளியில் சோற்றியாய் உள்வைரமாய் இருப்பவற்றை மரம் எனவும் பெயரிட்டு வழங்கியதில் பொருள்களின் இயல்பை அவதானித்து அவற்றிற்குத் தக்க பெயரிடும் வழக்கம் காணப்படுகின்றது. உண்மையில் "புல்" எனும் சொல் உட்டுளையை காட்டுகின்ற ஓர் அடியிலும் மரம் எனும் சொல் வைரத்தைக் காட்டுகின்ற ஓர் அடியிலும் நின்றே பிறந்தன என நாம் அறிவோம். "புல்" எனும் சொல்லை சிங்களத்தில் "பொல்" என வைத்து தெங்கின் பெயராக சொல்வார். சிங்களத்தில் இது போன்று வேறு பல பழந்தமிழ் சொற்கள் பழைய உச்சரிப்பின்படி போலும் இன்றைக்கும் நிலவுகின்றன.

உண்மையில் "புல்"எனும் சொல் உட்டுளையுள்ள தாவரங்கள் எல்லாவற்றிற்கும் பொதுப்பெயர். ஆகவே பனை ஆகியவற்றிற்கு வெவ்வேறு சிறப்புப் பெயர்களும் வேண்டப்பட்டன. அவற்றுள் பனைக்கு "பொல்" என்ற அடியிலிருந்தே ஒரு பெயர் எழுந்தது. அது "போந்து" என்ற பெயர் கொள்ளுதல், போழ்தல் என்று ஆகி போழ்ந்தது (உட்டுளையுள்ளது) "போந்து" பனைப் பெயராவதை உதயணன் கதை இலாவாண காண்டம் 12-24 இல் காணலாம். பின் கலந்தையும் - போந்து பனை எனவும், போந்தை இளம் பனை எனவும் குறிக்கின்றது. போந்துச் சொல்லே போந்தை என மாறிற்று. பனைக்கு பல பெயர்கள் எழுந்த வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் "பிங்கிலநிகண்டு" குறிக்கும் மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்கள். போந்து, தாலம், பெண்ணை, புற்பதி, தாளி, கரும்புறம், ஏடகம், கற்பகதரு, காமபுரம், தருமவிசாரன், தாணி, துருமேகம், நீலம், பாரிபதத்திரம், பார்பதம், புல்லூதிபம், புற்றளி எனப் பல்வேறு பெயர்களை ஒலி நூல் வாயிலாகவும், காரணப் பெயராகவும் கொண்டு வழக்கில் வந்துள்ளது.

மனிதனின் உள்ளம் சம்மந்தமான அகவாழ்வு நிலையில் பண்டைய தமிழர்களின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் குறிப்பு நிலையினைக் கூறவந்த புலவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களான நற்றிண, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை ஆகிய காவியங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்துள்ளர்கள். அதே வேளை அகவாழ்வு நிலையினைத் தொடர்ந்து புறவாழ்வு நிலையில் போரும் அது சம்மந்தமான நிகழ்வுகளும் புறவொழுக்கம் எனப் புலவர்களால் விளக்கப்பட்டது. புறநானூற்றுப் பாடலில் பனையின் உயரமும் கருமையும் வலிமை படைத்த யானையின் துதிக்கையுடன் பொருந்தி நிற்கின்றது. அகநானூறு,

என்பன போன்ற பழமொழிகளில் பனை பிரதான இடம் வகிக்கின்றது. வள்ளுவர் தமது குறளில் மூன்று குறள்களை பனையினை மேற்கோள் காட்டியே இயற்றியுள்ளார். தமிழ் புலவர்கள் மட்டும் அல்ல ஆங்கிலப்புலவர் கீட்ஸ் தமது இஸபெல்லா எனும் காவியத்தில் பதநீர் இறக்கும் பனம்பாளை வாடுவது போல் என்ற உவமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒளவையாரும் "தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை" என வர்ணித்துள்ளார். திருமுறை தந்த திருமூலர் தம் திருமந்திரம் எனும் 10ம் திருமுறையில் பனையின் சிறப்பு பற்றி பாடியுள்ளார்.

யாழ்ப்பாண மன்னர்களில் ஒருவரான செகராஜசேகரனின் அவைப்புலவர் வையாபுரி ஜயர் தாம் இயற்றிய நூலின் 12ஆம் - 13ஆம் பாடல்களில் இராவணன் இறந்த பின் முடிசூடிக் கொண்ட விபீஷணன் மன்னன் முன்னிலையில் கபோதியான யாழ் வாசிப்பவன் தமது திறமையான யாழ் வாசிப்புக்காக தாம் பரிசாகப் பெற்ற மணற்றிட்டினை திருத்திவேறு எவற்றுடனும் ஒப்பிட்டு சொல்ல முடியாத கற்பகதருவான பனையினையும் ஏனைய தாவரங்களையும் நடுகை செய்தான் எனக் கூறுகின்றது. யாழ்ப்பாணம் என்ற பெயர் இந்த யாழ்பாடியின் தொடர்பாக ஏற்பட்டது என்பதையும் பனை வளத்துடனேயே யாழ்ப்பாணக் குடியேற்றம் நடைபெற்றுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம், வேதசாஸ்திரங்கள், காளிதாசனின் சகுந்தலம், வள்ளுவனின் குறள், தேவார திருவாசகம், தமிழ் சங்கம் தந்த தொல்காப்பியம் தந்த இலக்கண இலக்கியங்கள் யாவும் பனைஓலை ஏட்டில் எழுதப்பட்டவை ஆகும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் பனைவளம் முக்கிய இடம் வகிக்கின்றது. பனைவளம் பலாலாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்களின் உணவு, போஷாக்கு, வீடமைத்தல், அலங்காரப் பொருட்கள், பானங்கள், பாவனைப் பொருட்கள் என்பவற்றை வழங்கும் கற்பக தருவாக விளங்கி வருகின்றது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கை முறை மாற்றங்கள் காரணமாக பனைவளப் பயன்பாட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய போதும் தொடர்ந்தும் இப்பகுதியில் வாழ்ந்த கணிசமான மக்கள் தொகுதியினர் தமது நாளாந்த வாழ்வுக்கு பனை வளததினையே நம்பி வாழ்ந்தார்கள். வாழ்ந்தும் வருகின்றார்கள். பனை பல நாடுகளில் பல சமூகங்கள் மத்தியில் வளர்ந்திருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து "காலமும் தமிழனும் தலை வணங்காத் தன்மையில் ஒத்தவர்கள்" என ஒப்பிட்டுப் பெருமை கொள்ளும் வகையில் காணப்படுகின்றது. காலமாற்றம் காரணமாக பனைவளம் தமிழ் மக்களினால் கைவிடப்பட்டு அழிவுற்றுச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டிருகின்றது. இத்தகைய அருமையான வளத்தின் பெருமையினை மேலைத்தேய அறிஞர் உணர்ந்து கூறுவது போல் "தமிழ் மக்களுக்கு அத்துணை அளப்பரிய உதவியாகவுள்ள பயிருக்கு இழைக்கப்படும் ஓர் அநியாயமாகும் என்ற உண்மையினை இவ் ஆக்கம் வெளிப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றது.

உசாத்துணைகள்

- மோகனதாஸ் சு. தங்கவேல் - விஜீ – பனைசெல்வம் - வடக்கு கிழக்கு தாலமூலவள அபிவிருத்தி நிறுவனம் - 2004
- பொன்னம்பலம் ச.சு. பனைநூறு, கொழும்பு தமிழ் சங்கம் பனை அபிவிருத்திச் சபை 1970

சம்பந்தம் கே. பனைதொழில் பாகம் 1, 2 சென்னை மாநில பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம்

- பனையின் பெயர்கள் செந்தமிழ் பத்திரிகை
- வட இலங்கையில் யாழ்ப்பாணமும் பனையும் ஒன்றாகத் தோன்றின – கற்பகம் பத்திரிகை
- சண்முகதாஸ் அ .திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பண்டைத்தமிழ் இலக்கியத்தில் பனைமரம்
- குலரத்தினம் கா.சி. பனைவளம் மில்க்வைற் வெளியீடு
- எஸ் . சிவலிங்கராசா, தமிழர் வாழ்வியலில் பனை

மீள் பதிப்பு யாழ்ப்பாண வாழ்வியல் வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையா சுகந்தகுமார்.
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
காரைநகர்

# தண்ணீர்

"அம்மா வசந்தா அக்கா வீட்ட குளிக்கப் போட்டு வாறேன்" என்று கூறிக்கொண்டே புறப்பட்டாள் செவ்வந்தி.

"கெதியா வா பிள்ளை, வேலைக்கு நேரமெல்லோ போட்டுது" என்று குசினிக்குள் இருந்தபடியே குரல் கொடுத்தாள் அன்னம்மா.

ஆனி, ஆடி தொடங்கி விட்டாலே அன்னம்மா வீட்டுக் கிணறு உப்பு கரிக்கத் தொடங்கிவிடும்.தண்ணீர் வற்றி அரை அடிக்கும் குறைவாகதான் நீர் நிற்கும். அரை அரை வாளியாகத்தான் தண்ணீர் கோலி அள்ள முடியும். சட்டி, பானை கழுவ மட்டும்தான் அதனை பயன்படுத்த முடியும்.

"உப்பு போடாமல் இந்த தண்ணியில் கறி வைக்கலாம் அம்மா" என்று சின்னவன் ராசு அன்னம்மாவிடம் அடிக்கடி பகிடியாகக் கூறுவான்.

இது காரைநகருக்கு மட்டுமல்ல தீவுப்பகுதிகளுக்கே இயற்கை காட்டும் ஓரவஞ்சனை. கடல் நாலுபுறமும் சூழ்ந்து நிற்பதால் கிணற்றுத் தண்ணீர் பெரும்பாலான பிரதேசங்களில் உப்பாக இருக்கும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நல்ல மாரி பெய்து மழைநீர் கரைபுரண்டு குளம் குட்டைகளையும், கிணறுகளையும் நிறைத்தால், நாலு ஐந்து மாதங்களுக்கு அதாவது வைகாசி, ஆனி மாதம் மட்டும் கிணற்றுநீர் மழைத்தண்ணீராகஇ நல்லதண்ணீராக இருக்கும். பின்னர் உவராக மாறிக்கொண்டு வரும். பின்னர் ஆடு, மாடுகளும் மனிதர்களும் தண்ணீருக்கு அந்தரிக்கத் தொடங்கி அலைய வேண்டியதுதான்.

அன்னம்மாவின் மூத்த மகளான செவ்வந்தி யுஃடு பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்ல பரீட்சைப் பெறுபேறு ஒத்துழைக்காததால் யாழ் நகரிலுள்ள புடவைக் கடையொன்றில் வேலை பார்க்கிறாள். சின்னவன் ராசு இப்பதான் ஏழாம் வகுப்பில் படிக்கிறான். கணவன் கதிரமலை கந்தானையில் கடைச் சிப்பந்தியாய் வேலைசெய்தான். விடுமுறையில் வீடு திரும்பி வரும் பொழுது காணாமல் போய் விட்டான். கணவன் காணாமல் போனபின் கைக்குழந்தையாக இருந்த ராசுவையும் பராயப்பட்டு போயிருந்த குமாரையும் பராமரிக்க வேறு வழியில்லாமல் வீட்டுவேலைகள்இ வேலியடைத்தல்இ சமைத்தல் என நானாவித வேலைகளை செய்பவளாக மாறியிருந்தாள் அன்னம்மா.

"வசந்தாஅக்கா" செவ்வந்தியின் குரல் மும்முறை ஒலிக்கிறது.

"விடியுது விடிய முன்னர் வந்திட்டினம். இவையெல்லாம் குளிக்காமல் போனா என்ன குறைஞ்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிடுவினம்இ குடிக்கிற தண்ணியா இருந்த நல்ல தண்ணி கிணறு கண்டவையும் குளிச்சு குளிச்சு உப்பா மாறிக் கொண்டு போகுது" வசந்தா அக்காவின் பாட்டியின் குரல் உள்ளே ஒலிக்கிறது.

செவ்வந்தி முகம் குன்றிப் போனாள். வேண்டுமென்றுதான் சீதாவின் பாட்டி இவ்வாறு சொல்கிறாள்." சே இந்த தண்ணி இல்லா ஊரில பிறந்து ஒவ்வொருநாள் காலை குளிக்க குடிக்க என்று ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டவேண்டியிருக்கு" என்று அவள் மனம் விம்முகிறாள்.

"வா செவ்வந்தி" என்று படலையைத் திறந்தாள் வசந்தாவின் மகள் கீதா.

"பாட்டி உப்பிடித்தான், உனக்குத் தெரியும் தானே குறை நினைக்காத" என்று கையைப் பிடித்தாள் கீதா. இருவரும் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள்.

"நான் குறை நினைக்கேல்லை" என்று ஒற்றைச் சொல்லை உதித்தபடி கிணற்றடியை நோக்கி நடந்தாள் செவ்வந்தி.

வசந்தா அக்கா வீட்டுக் கிணறு அந்த ஏரியாவிலேயே நல்லதண்ணி. மழைவரும் வரையும் ஐப்பசி, கார்த்திகை மட்டும் தாக்கிப் பிடிக்கும். காரைநகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நல்ல தண்ணி கிணறுகளில் இதுவும் ஒன்று.

வீட்டுக் கிணறு வற்றும் போது செவ்வந்தி தனது "நண்பியின் வீடுதானே" என்று இங்கு குளிக்க வருவாள். ஆனால் கீதாவின் பாட்டி இப்படித்தான் பேசுவாள். என்ன செய்வது பேச்சு, ஏச்சு வாங்கினாலும் தினமும் குளித்துத் தானே ஆக வேண்டும். ஒவ்வொரு நாளும் விடிய வரும் போது சீதாவின் பாட்டி எழும்பியிருக்கக் கூடாது என்று கடவுளை நேர்ந்தபடிதான் செவ்வந்தி குளிக்க வருவாள். ஆனால் இந்தக் கிழவி நேரத்திற்கு எழும்பினால் அன்று சனிபிடித்த மாதிரித்தான். குளிச்சு முடியும் மட்டும் திட்டிக் கொண்டே இருக்கும்.

அவள் நேரத்திற்கு குளித்து முடித்து கடைக்கண்ணால் கிழவியை பார்த்தபடி பயந்தவாறே வீட்டுக்குச் செல்கிறாள். இனி பஸ் பிடித்து யாழ்நகருக்கு செல்ல வேண்டும். பஸ்சில் வரும் மன்மதர்களின் லீலைகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். தட்டிக் கேட்டால்"நீங்கள் தனி பஸ் பிடித்து வாருங்கோ" என்ற அவர்களின் வழமையான பல்லவியையும் பொறுத்தபடி கால் கடுக்க நின்றவாறு கடைக்கு செல்ல வேண்டும்.

கடையில் அவள் செய்யும் வேலைக்கு ஏற்ற சம்பளம் கிடைப்பதில்லை. பஸ் காசை கழித்துப் பார்த்தால் மூவாயிரம் ரூபாய் தான் அவளின் சம்பளம். "ம்...என்ன செய்ய. பொம்பிளைப் பிள்ளைகளுக்கு இதுக்கு மேல தர ஏலாது. பொடியள் எண்டால் இரவும் நிண்டு வேலை செய்வாங்கள் "என்று இரட்டை அர்த்தம் பேசும் முதலாளியிடம் இதற்குமேல் சம்பளம் எதிர்பார்க்க முடியாதுதான்.

ஆறு மணிக்கு வேலை முடியும். வீடு திரும்பிவர எப்படியும் ஏழு மணியாகும். வாசலில் மகளுக்காக காத்திருப்பாள் அன்னம்மா. "பாவம் செவ்வந்தி துள்ளித் திரிய வேண்டிய வயசில் இப்படி வேலை பார்க்க வேண்டியுள்ளதே "என அன்னம்மா அடிக்கடி இறைவனை நொந்து கொள்வாள்.

ஏழு மணிக்கு பின் செவ்வந்தி வந்து உடுப்பு தோய்ப்பது என்றால் அன்று சிவராத்திரிதான். கடற்கரையின் அருகில் நான்கடி கிணறு சுரக்கும் தேவாமிர்தம் போன்றதண்ணீர். "சண்ணுவத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றடி" தண்ணீர் காரைநகர் வடகிழக்கு மக்களுக்கு உரிய வரப்பிரசாதம்தான்.

அமெரிக்கமிஷனுக்கு சொந்தமானது என அறியப்படும் அந்த ஓரு பரப்புஇ நல்லதண்ணி காணியில் தன்னந்தனியாக வாழ்ந்து வந்தார் சண்ணுவத்தார். காலை ஆறு மணியிலிருந்து மாலை இருள் கவியும் வரை தண்ணி எடுக்க அனுமதி வழங்குவார் சண்ணுவத்தார். விடிய முந்தியோ இருட்டிய பிறகோ யாராவது தண்ணி எடுக்க வந்தால் அவ்வளவுதான் "என்னுமடா நினைச்சு கொண்டிருக்கிறியள் வாமுற வீட்டில இருட்டினதுக்கு பிறகு தண்ணி எடுக்க வருகினம்" என்று பொரிந்து தள்ளிவிடுவார். அவர் நிற்கிறாரோ? இல்லையோ? என தெரியாது வரும் பொடியள் அவரது குரலை கேட்டால் நாலைந்து மைலுக்கு அப்பால் ஓடி விடுவார்கள். அவ்வளவு பயம் அவர் மீது.

இவ்வளவு அல்லல்பட்டு குடிக்க என்று எடுத்து வரும் தண்ணீரை உடுப்பு தோய்க்க என்று எடுத்தால் அவ்வளவுதான் ராசு புரட்டி எடுத்து விடுவான்.

இருந்தாலும் ராசு அள்ளி வாற நல்ல தண்ணியில் கொஞ்சம் அவனுக்குத் தெரியாமல் எடுத்து உடுப்பு ஊற வைச்சு பிறகு உப்புத் தண்ணியில் தோய்ப்பாள் செவ்வந்தி.

வசந்தியக்கா வீட்டை சிலவேளைகளில் போகாதபோது வீட்டுத் தண்ணியிலயும் குளிப்பாள். ஆனால் வீட்டுத் தண்ணியில் சோப்பு நுரைக்காது. சோப்பு போட்டுக் கழுவினால் களியை உடம்பில் பூசின மாதிரி ஒட்டிக் கொண்டிருக்கும். கழுவினாலும் சோப்பு போகாது. வெள்ளை வெள்ளையாய் உடம்பு முழுதும் பரட்டை அடிக்கும். சே! என்ன வாழ்க்கை இது. பேசாமல் ஓவென்று கதறி அழலாமா என செவ்வந்திக்கு தோன்றும்.

இப்படித்தான் அவள் கடைக்கு சேர்ந்த புதிசில் சாப்பிட்டு விட்டு கை கழுவும் போது "இது குடிக்கிற தண்ணியோ? கழுவுற தண்ணியோ?" என ஊர் ஞாபகத்தில் கேட்க யாழ்ப்பாண பெட்டையளும் பெடியளும் " இஞ்ச எல்லாம் ஒண்டுதான் நீர் காரைதீவுதானே" என்று நக்கலடித்து சிரித்தது இன்னும் மனதில் வலித்தது.

ஒவ்வொரு மழைக்கும் அவள் கொண்டு வந்து வைக்கும் பூச்செடிகள் மழைக்காலம் முடிந்ததும் கருகிவிடும். வெளியிடத்து நண்பர்கள் எல்லாம் தமது வீட்டில் பூங்கன்றுகள் வைத்து அழகு பார்க்கும் போது தன் நிலத்தினதும், நீரினதும் இயல்பை எண்ணி மனம் வருந்துவாள் செவ்வந்தி. "காரைநகர் தண்ணியை விட்டு பூங்கண்டை பட வைக்கிறதிலும் பார்க்க தண்ணி விடாமல் இருந்தால் கொஞ்சக் காலம் பூங்கண்டு உயிரோடு நிற்கும்" என்று அவளது நண்பிகள் கிண்டலடிப்பார்கள்.

"நான் இந்த ஊரில பிறந்தது என்ர பாவமா" என்று அவளது மனம் அடிக்கடி ஏங்குவதுண்டு.

"காலாகாலத்தில உனக்கு ஒரு கல்யாணம் பண்ண வேண்டும் "என்று அன்னம்மா சொந்தத்துக்குள் ஒரு பொடியனைக் கொண்டு வந்த போதும் காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவன் என்ற ஒரே காரணத்தைக் காட்டி மறுத்து விட்டாள் செவ்வந்தி.

"ஏழு மணிக்கு வாறவள் எட்டு மணியாகியும் இன்னம் காணவில்லை" என்று அன்னம்மா வாசலை பார்த்தபடி கிடந்தாள். ராசுவை "அக்கா வருவா ஏத்திக் கொண்டு வா"என்று பஸ் தரிப்பிடத்திற்கு அனுப்பி ஒரு மணித்தியாலம் ஆகி விட்டிருந்தது. இன்னமும் அவனை காணவில்லை. ஏதோ ஞாபகம் வந்ததுபோல் அவளது மேசை இருக்குமிடம் தேடிப் போனாள் அன்னம்மா. ரெலிபோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நம்பரை அங்குதான் அவள் கொப்பியில் எழுதி வைத்திருந்தாள்.

போன் நம்பர் செயலிழந்திருந்தது. "பிள்ளை எப்பவும் போனை ஓவ் பண்ணமாட்டாள் என்ன நடந்ததோ! கடவுளே" அன்னம்மா அழத் தொடங்கி விட்டாள்.

அழுது கொண்டே மேசையிலிருந்த கொப்பிகளை கிளறத் தொடங்கினாள். ஒரு கொப்பிக்குள் நான்காக மடிக்கப்பட்ட காகிதம். அது காகிதமல்ல கடிதம். "அன்புள்ள அம்மா. நான் எனது மனதுக்கு பிடித்த........"என்று தொடங்கிய வரிகளை கண்ணீருடன் வாசிக்கத் தொடங்கினாள் அன்னம்மா.

"அம்மா அம்மா அக்கா ரவுணில இருந்து பஸ் ஏறவே இல்லையாம். காலமை கடைக்கும் போகேலையாம். கடையில நிக்கிற ராணி அக்கா வீட்ட ரெலிபோன் பண்ணி கேட்டனான்" என்று ராசு கூறிக்கொண்டே வீட்டுக்குள் வருவது அன்னம்மாவுக்கு தெரிந்தது.

"என்னை மன்னிச்சிடுங்க அம்மா! எனது மனதுக்கு பிடித்தவருடன் வாழப் போகிறேன். இந்த முடிவை நான் எடுப்பதற்குக் காரணம்இ நான் வாழப் போறது குடிசையா இருந்தாலும் அங்கிருக்கும் நல்ல தண்ணியும் தான்" என்று கடிதத்தில் செவ்வந்தி எழுதியிருந்த வரிகள் அன்னம்மாவின் கண்களில் மறுபடியும் நிழலாடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை
(ஓய்வு நிலை அதிபர்)

## காரைநகரும் கல்வியும்

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள தீவுகளில் ஒன்றாக விளங்குவது காரைநகராகும். நாற்புறமும் கடலால் சூழப்பட்டுத் தீவாக இருந்த போதும் பழமைப் பண்பாடும் கல்விப் பெருமையும் நோக்கி காரைநகர் என்னும் பெயர் ஆங்கிலேய ஆட்சியாளரினால் 1923.09.12 இல் வழங்கப்பட்டது. உலகம் உவப்ப உயர்ந்தோங்கி நிற்கும் காரைநகர் தனிப் பெருஞ் சிறப்புடன் நின்று நிலவுகின்றது. தாளாண்மை மிக்க வேளாண்மையாளரும் (உழவுத் தொழிலாளரும் ) கற்றறிந்த கல்வியாளரும், நன்நெறி புகட்டிய நல்லாசான்களும், கற்றுத் தேறி கருமமாற்றும் உத்தியோகத்தர்களும், திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் வணிகர் குழாமும், கடல் செல்வத்தைத் தேடிக்குவிக்கும் கடற்றொழிலாளரும் தனிச்சிறப்புடன் வாழும் தொல்லூராகும்.

கல்வியில் சிறந்த காரைநகரில் புலவர்களும் அறிஞர்களும் கல்வியாளர்களும் நுண்மாண் நுழை புலத்தினரும் வாழ்ந்த காரணத்தால் பண்பாட்டு பெருமை மிக்க சமூகமாக காரைநகவ் உருவாகியது. திரு.மு.கார்த்திகேயப் புலவர், த.நாகமுத்துப் புலவர், பண்டிதர் சிவஶ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் போன்ற பழம் பெரும் புலவராலும்

திருவாசக ஆய்வுரையாக்கிய சங்கநூற் செல்வர் பண்டிதர் அ. அருளம்பலவாணர், காரை மான்மியம் தந்த மகா வித்துவான் எவ்.எக்ஸ்.சி நடராசா, ஈழத்துச் சிதம்பரம் பதிப்பித்த பண்டிதமணி கலாநிதி சிவஶ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள், சுப்பிரமணியம் ஜெயநேசன் அடிகளார், கவிஞர் கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை ஆகிய தமிழ் வளர்த்த சான்றோர்களாலும்

வானியல் ஆய்வு நிபுணரும் கணிதத்துறை விற்பன்னருமாகிய அலன் ஆபிரகாம் அம்பலவாணர், சிங்கப்பூர் மலேசியா பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியராக விளங்கிய இ.கனகசுந்தரம் , புகழ்புத்த வைத்திய கலாநிதிகளா என்.ரீ.சம்பந்தன், சிவசோதி, கனகராசா, சபாரத்தினம் சிவகுமார், தண்டாயுதபாணி, இந்திராணி கண்ணுத்துரை, செல்வி. நவமலர் கனகரத்தினம், நடராசா ஜெயக்குமார், விசுவலிங்கம் விஜயரத்தினம் ஆகியோர்க்ளுடன் மேலும் சேவையில் ஆற்றிவரும் இளவைத்திய கலாநிதிகளாலும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான பொன்னம்பலம் ரகுபதி (தொல் பொருளியல்) வே.தர்மரத்தினம் (கணிதம்) எஸ்.ஜீ.சிவகுருநாதன் (ஆங்கிலம்), ஜீ.பரமேஸ்வரன் (மருத்துவம்) போன்ற அறிஞர்களாலும்

திருவாளர்கள் நமசிவாயம் நடராசா.கே.சீ, எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் ஆகிய நீதிவான்களாலும் திருவாளர்கள் ப.விக்கினேஸ்வரன் (வடமாகாணம்) த.மேகநாதன் (வவுனியா) ஆகிய கல்விப்பணிப்பாளராலும் திரு.ஆ. சபாபதி – வட்டாரக் கல்வி அதிகாரியாலும் திருவாளர்கள் முத்து சயம்பு , அருணாசலம் உபாத்தியாயர், சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், உடையார் நாகலிங்கம், கந்தப்பர் சுப்பிரமணியம், ஆ.ச.சங்கரப்பிள்ளை போன்ற பாடசாலை ஸ்தாபகராலும்

புகழ் பூத்த இரு கல்லூரிகளிலும் அதிபர்களாக விளங்கிய திருவாளர்கள் கலாநிதி ஆ. தியாகராஜா, கே.கே .நடராசா, என். சபாரத்தினம், எஸ்.ஆர்.எஸ்.தேவதாசன், எஸ்.வைத்தியநாதன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என். பரமசிவம், மு.சு.வேலாயுதபிள்ளை போன்றோர்களினாலும் மேலும் ஏனைய பாடசாலைகளில் உள்ள வளர்ந்து வரும் அதிபர்களினாலும்

திருவாளர்கள் மு.சபாரத்தினம் முருகேசு போன்ற தமிழ்த்துறை வித்துவான்களாலும், சிவஸ்ரீ.க.வைலத்தீஸ்வரக்குருக்கள் மு.சு. வேலாயுதபிள்ளை, செல்வி யோகா சோமசுந்தரம் போன்ற பண்டிதர்களாலும், பூரணம் ஏனாதிநாதன் ஆகிய புலவராலும்

கவிஞர்களான வே.குமாரசுவாமி, சி.பொன்னம்பலம், எம்.பீஅருளானந்தம் போன்றவர்களாலும், என்.கே.கணேசன், என்.கே..வீராச்சாமி, என்.கே.கே.பவப்பிரியன் ஆகிய தவில் நாதஸ்வர வித்துவான்களாலும் செல்வி பரமேஸ்வரி கணேசனின் இசைத்துறையாலும்

புகழ் பூத்த பேச்சாளராகிய செல்லையா ஆசிரியர், வித்துவான் சபாரத்தினம், தமிழருவி தம்பிராசா சிவகுமாரன் எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோராலும்

பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் ஆ.தியாகராசா, தி.மகேஸ்வரன், திருமதி. விஜயகலா மகேஸ்வரன் திரு. ந. ஸ்ரீகாந்தா ஆகியோரதும் ஏட்டில் அடங்கா பதினாறு பாடசாலைகளில் கற்பித்த, கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரிய பெருந்தகைகள் ஆகியோரதும் அயராமுயற்சியினாலும் திறமையினாலும் வழிகாட்டலினாலும் காரைநகரில் பண்பட்ட மக்களை உருவாக்கியது எனக் கூறலாம்.

இதத்கைய கல்விமான்களை உருவாக்கிய பெருமை நமது காரைநகர்ப் பாடசாலைகளைச் சார்ந்தது ஆகும். பாடசாலைகளின் வளர்ச்சியிலே ஊர்ச்சிறப்பு தங்கியுள்ளது. எனவே படசாலைகளின் வளர்ச்சியில் அக்கிராம மக்களும் ஏனைய தாபனங்களும் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்க்க வேண்டும்.

உலகிலேயே மனித செயற்பாடுகளில் முதன்மையானது கறற்லாகும். கற்பதற்கான களமாகப் பாடசாலைகளே இயங்குகின்றன. சிறந்த நற்பிரஜைகளையும் ஆழமான தேசப்பற்றுக் கொண்ட மனித வளத்தையும் உருவாக்குவதற்கு வினைத்திறமான பாடசாலைகள் வழிகாட்டுகின்றன. பாடசாலைக்கல்வி இயலில் கற்றலும் – கற்பித்தலும் இரு கண்களாயுள்ளன. நாலரை மைல் நீளமும் மூன்றரை மைல் அகலமுமுடைய காரைநகரில் பதினாறு பாடசாலைகள் இயங்கி வந்துள்ளமை பெரிதும் போற்றுதற்குரியது. இவற்றில் தங்கோடை அ.மி.த.(கோவிந்தர் பாடசாலை) யாழ்ற்றன் கல்லூரியுடன் இணைந்து இயங்கி வருகின்றது. இலகடி சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை, காரை கிழக்கு அ.மி.த.பாடசாலை ஆகிய இரண்டும் இடப்பெயர்வுக்குப் பின் திறக்கப்படாத பாடசாலைகளாகும். தற்போது காரைநகரில் இயங்கி வரும் பாடசாலைகளில் கற்கும் கற்பிக்கும் மாணவர்–ஆசிரியர் விபரம் பின்வருமாறு

இன்று மொத்தமாக 2132 மாணவர்கள் கற்றலிலும் 138 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலை வளர்ச்சியானது ஆற்றல் மிக்க அதிபரின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. எனவே பாடசாலை அதிபரானவர் குறிப்பிடத்தக்க பண்புகளை வளர்ப்பதுடன் ஆசிரியர், மாணவர், பெற்றோர், அயற்சமூகம், பழைய மாணவ சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களம், அரசியல்வாதிகள் எனப் பல்வேறு தரப்பினருடனும் உயிர்த்துடிப்பான, ஆரோக்கியமான தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும்.

காரைநகர் மாணவர்கள் காரைநகர் கல்லூரிகளில் படித்து சாதனையான பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். 1934ல் சீதாராமையர் அதிபராக இருந்த காலத்தில் (அப்போது இருந்த உயர் வகுப்பு) கனிஷ்ட பாடசாலை விடுகைப்பத்திர பரீட்சையில் (J.S.C) பதினைந்து மாணவர்கள் தோற்றி ஒருவர் முதற் தரத்திலும் பதின்மூன்று மாணவர்கள் இரண்டாம் தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர். வடமாகாணத்தில் முதற் தரத்தில் சித்தி பெற்ற மாணவன் ஒருவனே. அவனே காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலை மாணவன் ஆவான் என்னும் போது எவ்வளவு உயர்ந்த சாதனை! (ஆதபாரம் 1934 வெளிவந்த ஞான சித்தி சஞ்சிகை)

2004ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சையில் 88 மாணவர்கள் தோற்றி 57 சதவீதமான மாணவர்கள் பெருமளவில் சித்தியடைந்துள்ளனர். ஐந்து வலயங்கள் உள்ள யாழ் மாவட்டத்தில் 216 பாடசாலைகள் பரீட்சைக்குத் தோற்றின. தீவக வலயத்தில் முதலிடத்தையும் யாழ் மாவட்டத்தில் பதினாறாவது (16) இடத்தையும் கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தியாலயம் பிடித்துள்ளது. கிராமப் புறசூழலில் வளர்ந்த கல்லூரி நீண்டகால இடப்பெயர்வினால் பௌதீக வளங்கள், போதிய ஆசிரிய ஆளணிகள் போன்ற வளங்களற்ற சூழலில் அதன் பெறுபேறுகள் பெருஞ் சாதனையாக விளங்கியுள்ளது எனலாம். (ஆதாரம் சயம்பு மலர் - 2005)

இத்தகைய தகுதியுடைய மாணவருக்கு கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் மாத்திரம் நின்று விடாது மாணவர் ஒழுக்கம், சமய விழுமியங்கள், ஆளுமை விருத்தி சமூகமயமாக்கல் ஆகியவற்றை உயர்வாக வளர்த்து பாடசாலையை புதுமைகாண் உயிர்ப்பு அமைப்பாக நிலை நிறுத்த வேண்டும்.

ஆரம்பக் கல்வி புகட்டும் முன்பள்ளி நிறுவனங்களும் கல்வியில் பிரதான இடத்தை வகிக்கின்றன. முதற்கோணல் முற்றும் கோணலாக்கி விடும். இதை உணர்ந்து தரமான முன்பள்ளி நிலையங்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இப்பள்ளிகள் தனியாரின் உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. காரைநகர் பிரதேசத்தில் பதினைந்து முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையுள்ள நானூற்று இருபத்தைந்து பாலகர்கள் பயின்று வருகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் கல்வி உலகில் சவால்கள் அதிகரித்து வருவதனால் அதற்கு ஏற்ற கல்வியை முன்பள்ளியிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான முன்பள்ளிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்த வேண்டும். பழமைப் போக்குகளிலிருந்து விடுபட வேண்டும். எண், எழுத்து, வாசிப்பு போன்றவற்றை போதிப்பதுதான் முன்பள்ளியின் நோக்கமாக இருக்கக் கூடாது. முன்பள்ளிகள் சில எவ்வித கல்வித் தகைமைகளோ பயிற்சியோ இல்லாத ஆசிரியர்களியால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்குப் போதிய வருமானமற்ற முன்பள்ளி நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய முன்பள்ளிகள் முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். முன்பள்ளி சார்ந்த சமூகம், சமூக நிறுவனங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிகளில் விட்டு விலகிய மாணவ மாணவிகளுக்கு முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் கல்வித் திணைக்களம் தொழில் சார்ந்த சில கற்கை நெறிகளைப் போதித்து வருகின்றது. இக் கற்கைநெறிகள் கல்லூரி நேரம் தவிர்ந்த மாலை வேளைகளில் கல்லூரி அதிபரினூடாக கணினி பயிற்சி, திரை அச்சுப் பயிற்சி, மின் இணைப்பு போன்ற பாடங்களும் போதிக்கப்பட்டு வருகின்றன.

இத்துடன் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையானது பிரதேச சபைகளினூடாக க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தோர்க்கு பின்வரும் பாடங்கள் போதிக்கப்ட்டு வருகின்றன. காரைநகர் வலந்தலைச் சந்தியில் உள்ள கட்டட அமைப்பில் இப் பாட நெறிகள் இயங்கி வருகின்றன. வீட்டு மின் இணைப்பாளர், அலுமினியம் பொருத்துனர், கட்டட நிர்மாண உதவியாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், முச்சக்கர வாகனத் திருத்துனர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் ஆகிய பயிற்சிநெறிகள் பயிற்றுவித்து வருகின்றன. இப் பயிற்சிநெறியைப் பின்பற்றுவோர் ே.ஏ.ஞ.3 சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும். இச்சான்றிதழ் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும், டிப்ளோமா பயிற்சி பெறுவதற்கும் பெரிதும் துணை புரிகிறது.

இத்தகைய தொழிற்கல்வியைப் பெறுவற்கு மாணவர்கள் முன்வருதல் வேண்டும். குறுகிய கால(6மாதம்)ப் பயிற்சிகளான தொழிற்கல்வியை கற்பதால் மேலதிக தகைமையாகப் பெற்றுக் கொள்ள உதவுகிறது. இவை உங்கள் வாழ்க்கைக்கு பல வகையில் பெரிதும் பயன்படும்.

“கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றப் பிற”

என்னும் தெய்வப் புலவர் வாக்குக்கிணங்க ஏட்டுக் கல்வியாயினும் தொழிற்கல்வியாயினும் கற்று ஊர் வளம் பெற நாடு வளம் பெற வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.தவரத்தினம்.
ஆசிரியர்

## காரைநகர் பிரதேச மக்களின் வாழ்வியல் சடங்கு முறைகளும் கலாசார சம்பிரதாயங்களும்

காரைநகர் பிரதேசம் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. 1878ம் ஆண்டு தரை வழியுடன் கற்பாதை அமைக்கப்படும் வரை மக்கள் கட்டு மரம், தோணி ஆகியன மூலம் ஏனைய இடங்களுக்கான போக்குவரத்தை மேற் கொண்டு இருந்தனர்.

இலங்கைக்கு மேலைத்தேயவரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரது தொடர் வருகைக்கு முன்பு காரைநகர் பிரதேசமும் மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தமைக்கான வாரலாற்றுச் சான்றாதாரமாக மூலாதாரங்களும், செவிவழிக்கதைகளும் உள்ளன. வெடியரசனும் அவனது சகோதரர்களான விளங்கு தேவன், வீரநாராயனன், போர்வீரகண்டன், ஏரிளங்குமரன், ஆகியோர் ஆட்சி செய்து வந்ததாகவும் வெடியரன் வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது.

1922 ஆம் ஆண்டு வரை காரைதீவு என்ற பெயருடன் விளங்கிய தமது ஊர் சேர் பொன் இராமநாதன் வருகையினால் காரைநகர் என மாற்றம் செய்யப்பட்டு 1923.09.12 தொடக்கம் காரைநகர் என்ற நாமத்துடன் இலங்கைத் தீவின் தலையாக விளங்குகின்றது. இதற்கான தகுதி பெற்ற மக்களாக நாகரீகத்திலும், கல்வி கலாசார பண்பாட்டிலும், செல்வத்திலும் தலைசிறந்தர்களாக விளங்கி வருகின்றமையே காரணமாகும். இம் மக்கள் தற்போது இலங்கைத் தீவின் எலாலாப் பாகங்களிலும் உலகெங்கணும் பரந்து வாழ்கின்றமையால் "காகம் பறக்காத ஊரும் இல்லை காரைதீவான் செல்லாத ஊரும் இல்லை" என்ற பழைய பழமொழி சான்றாதாரமாக விளங்குவதைக் காணலாம்.

கலாசாரம் என்பது பழக்க வழக்கங்களிலேயெ தங்கியுள்ளது. இதில் குலமரபு வழக்குகளும், வழக்காறுகளும் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அன்னியர் ஆட்சிக் காலத்தில் பிற மதத்தினரின் செல்வாக்கு ஏனைய தீவுகளில் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றது. ஆயினும் ஆதி தொன்மை மிக்க சைவ பாரம்பரியங்களை அதிகம் கடைப்பிடித்து வருபவர்களாக காரைநகர் மக்கள் காணப்படுகின்றனர். இதனால் இங்கு தென்இந்திய சைவப் பண்பாடு வேரோடி இருப்பதைக் காணலாம்.

இந்தியாவின் பல ஊர்களின் பெயர்கள் காரைநகரில் உள்ளதைக் காணலாம். ஊரும் கோவளம், இலகடி, சடையாளி ஆகியனவாம். மேலும் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பு காரைநகரும் அருகில் உள்ள ஊரான ஊர்காற்றுறையும் புகழ் மிக்க செல்வச் செழிப்பு மிக்க துறைமுகங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

இவ்வாறான புவியியல் அமைவிடச் சிறப்பும் மக்களின் சிறந்த வளமான வாழ்வும் சிறப்புறு வாழ்வியல் பழக்கவழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் கடைப்பிடித்து நிறைவாக வாழ்வதற்கான வழிகாட்டி நிற்கின்றது.

அந்த வகையில் மங்களகரமான வாழ்வியல் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும் நோக்குவோம். எமது ஊரில் அதிகம் சைவமக்கள் வாழ்ந்து வருவதனால் சைவசமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியங்களே வாழ்வியல் சடங்குகளில் இடம் பெறுவதைக் காணலாம். மேலும் குலமரபுகளுக்கு ஏற்ப விசேடமான முறைகள் காணப்பட்டாலும் பொதுமைப்பாடான முறைகளே அதிகம். சமயத்துடன் சோதிடம், தலைமுறை பழக்க வழக்கங்கள், வாழ்வில் அதிகம் இடம் பெறுகிறது. இந்த வகையில் பண்டிகைக் கொண்டாட்டங்களை நோக்குவோம்.

தைப்பொங்கல்

தைப்பொங்கல் விழாவை தத்தமது வீடுகளில் கொண்டாடுவர். துக்ககரமான விடயங்கள் தமக்கோ, ஆண்வழிச் சுற்றத்தாருக்கோ ஏற்பட்டால் தமது வீடுகளில் பொங்கலை நடாத்தமாட்டார்கள். பொங்கல் விழாவை தமது 16 கிராமங்களில் உள்ள ஆலயங்களிலும் கிராம சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கங்களிலும் கொண்டாடுவர். மாலையில் விளையாட்டு விழாக்களும் இரவு நாடகங்களும், கலை விழாக்களும் இடப்பெயர்வுக்கு முன்பு பல நூற்றாண்டுகளாக நடாத்தப்பட்டு வந்தன.

வருடப் பிறப்பு

சித்திரை முதல்நாள் தமிழ் வருடப் பிறப்பு அன்று மங்களகரமான நாளாகக் கருதப்படுகின்றது. அன்று புத்தாடை அணிந்து பொங்கல் வழிபாடு செய்து தத்தமது கிராமங்களில் கலை நிகழ்வுகள் நடாத்தி இன்புறுவர். பொதுவாக சைவ உணவுகளையே அன்று பலர் உண்பர். மாலை வேளை பால் முட்டி அடித்தல் நிகழ்வு இடம் பெறும்.

ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்பு மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். அன்று ஆலயங்களிலும், வீடுகளிலும் சிறப்பான உணவுகளை செய்து உண்டு மகிழ்கின்றனர். தமது மூதாதையர்களை நினைவு கூர்ந்து மாலைவேளை விசேட உணவுகளை ஆக்கி படையல் செய்து மூதாதையரின் ஆத்மாவை நினைவு கூருவர்.

தீபாவளி

தீபாவளி சிறப்பாகக் கொண்டாடப்படும். புத்தாடை அணிந்து இறை வழிபாட்டில் ஈடுபட்டு மாலைவேளை கலை விழாக்களும், பால்முட்டி அடித்தல் நிகழ்வும் நடைபெற்று வருகின்றன.

சிவராத்திரி இரவு சப்பரம் கட்டி ஊர் ஊராய் இழுத்து ஆடல் பாடல் புரிந்து கண் விழித்து வருவது வேறு எங்கும் காணமுடியாத சிறப்பியல்பாகக் காணப்படுகின்றது.

சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக சிகை அலங்காரம் செய்தால் வீட்டுக்குள்ளே செல்லமாட்டார்கள் வெளியே நின்று கொள்வர். நீராடிய பின்னே உள்ளே செல்வார்கள். சிகை அலங்கரிப்பை அதிகமாக புதன், சனி ஆகிய நாட்களில் அதிகம் மேற்கொள்வர்.

மேலும் வெளியூர் பிரயாணம் செய்தாலோ அல்லது வைத்தியசாலைக்குச் சென்றாலோ, மரணச் சடங்கு வீடுகளுக்குச் சென்றாலோ வீட்டுக்குள் செல்லாமல் நீராடியே உட்செல்வர். சிலர் வீட்டுக்கு வெளியே தெரிவிலே தலையில் நீராடி முன்னைய காலங்களில் சென்றனர்.

காரைநகர் பிரதேசத்துக் கோவில்களின் வழிபாட்டு முறையில் முற்காலத்திலும் தற்காலத்திலும் மிருக பலியிடுதல்சடங்குகள் காணப்படவில்லை. தற்காலத்தில் முற்று முழுதாக இவ் வழிபாட்டு முறைகள் இல்லை என்று குறிப்பிடலாம். மேலும் பொங்கல், குளிர்த்தி, மடை போன்ற சைவ உணவுகளையும் வாழைக்குலை, பலாப்பழம் போன்ற பழவகைகளை மடையாகச் செலுத்தி வழிபாடாற்றுவது அன்றும் இன்றும் நடைபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது.

விழாக்கள், சடங்குகள் போன்றவற்றில் ஆக்கப்படும் உணவுகளும் விசேடமானவையாகும். பலகார வகைகளும் விசேடமானவையாகக் காணப்படுகின்றது. பல நாட்கள் பழுதடையாமல் பாதுகாக்கும் பலகார வகைகளை ஆக்குகின்றனர்.

காரைநகர் பிரதேச மக்கள் அதிகமாக உள்ளூரிலேயே திருமணங்களை செய்து வருகின்றனர். ஆரம்ப காலங்களில் சிறு வயதிலேயே திருமணங்கள் நிச்சயித்தனர். தற்போது கால மாற்றத்தினால் அதிகமாக வெளியூரில் வாழ்ந்தாலும் தமது பாரம்பரிய வாழ்விடத்தைக் கொண்ட காரைநகர் மக்கள் பூர்வீகமான சந்ததியடியினரைக் கொண்டவர்களுடன் திருமணம் புரிவதை அவதானிக்கலாம்.

இலங்கையின் வடபுலத்தேயுள்ள ஏழுதீவுகளில் காரைநகரே மிக அண்மையாக 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் கடலைக்கடந்து தரைமார்க்கமாக நிலப்பரப்புடன் தொடர்பு கொண்டு இருப்பதுடன் பிரதான யாழ் நகருக்கு 14 கிலோமிற்றர் கிடடிய தூரத்தையும் கொண்டுள்ளது. மேலும் இத்தீவிலேயே மணல் கல் போன்ற கட்டடத் தேவைக்கு பயன்படுத்தும் மூலப்பொருட்களை பெறக்கூடிய வசதி இருந்தது. தீவின் மேற்குப்புறமாக 1916ஆண்டு நிர்மானிக்கப்பட்ட (வெளிச்சவீடு) அமைந்துள்ளது. அதிக பனை வளமும் அதிக தென்னை வளத்தையும் கொண்டுள்ளது. இடப்பெயர்வுக்கு முன்னர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் காரைநகரில் இருந்து ஏனைய இடங்களுக்கு பசுந்தாழ் பசளையாக பூவரசம் இலை, தாள் ஒன்றுக்கு முப்பது வண்டில்களுக்கு மேற்பட இருமாதங்களுக்கு வெளியூர்களுக்கு செல்லும். இவ்வாறான வளம் மிக்க தாவர வளத்தை தன்னகத்தே கொண்டதாக விளங்கியது. இவ் வளம் இன்று அருகி விட்டது.

தீவுகளிலே நெல் வயல் அதிகமுள்ள தீவு காரைநகராகும். அதேவேளை செழிப்பு மிக்க கடல் வளத்தையும் கொண்டுள்ளது. அதற்கு காரணமாக சமுத்திரத்தையும் கடல் நீரேரியையும் கொண்டுள்ளது. எனவே வேளாண்தொழிலையும் அலைகடலில் ஆழ்கடல் வரை தொழில் புரியும் திறனும் படைத்தவர்களாக தமது மரபுகளை அத் தொழில்களில் பாதுகாத்தும் வருவபர்களாக மக்கள் விளங்குகின்றனர்.

1991 ஏப்பிரல் 25ம் திகதி காரைநகர் மக்கள் 99மூ இடம் பெயர்ந்து சென்றாலும் இன்று வரை தமது ஊர் அபிமானத்தை பெரிதும் பேணிக் கடைப்பிடித்து வருகின்றனர். அதற்கான சாட்சியாக வாழும் மக்கள் தொகை அளவு குறைவடைந்த போதும் ஆலய விழாக்கள் புனர் நிர்மானம், கல்வி, கலாசார விடயங்களில் இன்றும் தனித்துவத்தைப் பேணி வாழ்நிலத்திலும் புலம்பெயர்விலும் உணர்வில் நன்றிணைந்துள்ளனர்.

அன்று தொட்டு இன்றுவரை தமது தனித்துவத்தால் ஏனைய பிரதேச மக்களின் மனங்களைக் கவர்ந்து உலகின் பேசப்படும் அறியப்படும் ஒரு பிரதேசமாக காரைநகர் விளங்குகின்றதெனலாம்.

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வானில் நனி சிறந்தவை”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் வீதிகள்

- சயம்பு வீதி
- சுப்பிரமணிய வீதி
- புதுறோட் – சிவன்கோவில் வீதி – கசூரினா பீச் வீதி
- அல்வின் வீதி
- சிவகாமி அம்பாள் வீதி
- வெடியரசன் வீதி
- பொன்னம்பலம் வீதி
- கோவளம் வெளிச்சவீட்டு வீதி
- மகேந்திரம் வீதி – வேம்படி
- பயிரிக்கூடல் வீதி
- பத்தர்கேணிப் பிள்ளையார் கோயில் வீதி
- மணற்காட்டு அம்மன் வீதி
- கல்வந்தாழ்வு வீதி
- வேரக்குளம் வீதி – கருங்காலி
- கேசடை வீதி, களபூமி
- நாராணி கேணி வீதி
- நீலங்காட்டு வீதி
- பாலாவோடை அம்மன் கோயில் வீதி
- திக்கரை கோயில் வீதி – சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
- பொன்னாவளை வீதி – தெருவடி பிள்ளையார்
- காளி கோயிலடி வீதி – களபூமி
- பிட்டியெல்லை - ஊரி வீதி
- முல்லைப்பிலவு வீதி
- மருதபுரம் வீதி
- கருங்காலி முருகமூர்த்தி கோவில் வீதி
- சல்லை வீதி
- கள்ளித்தெரு – கடற்கரை வீதி
- நாவல்கண்டி – மணற்பிட்டி வீதி
- தோப்புக்காடு வீதி
- கசூரினா பீச் ஆஞ்சனேயர் வீதி
- கணக்கனார் கண்டி – பண்டித்தாழ்வு வீதி
- இடைப்பிட்டி – வேம்படி வீதி
- குமிழங்குளம் வீதி
- சின்னாலடி – செம்பாடு வீதி
- மருதடி – நிலிப்பந்தனை வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரிலுள்ள கேணிகளும் குளங்களும்

- ஈழத்துச்சிதம்பரம் தேரடி கேணி – சித்தாமிருதவாவி
- ஈழத்துச்சிதம்பரம் அம்மன் வாசல் திருக்குளம்
- ஈழத்துச்சிதம்பரம் மூன்றாம் வீதி தாமரைக்கேணி
- தரவைக்குளம்
- ஆலங்கன்றடி வைரவர் கேணி
- சடையாளி வைரவர் பெரியகேணி
- சடையாளி வைரவர் சின்ன கேணி
- இலகடி முதலிகேணி
- நீலிப்பந்தனை அம்மன் கோயில் கேணி
- மருதடி விநாயகர் கோயில் கேணி
- சிதம்பரா மூர்த்தி கேணி
- அல்லின் வீதி காமாட்சி கேணி (புனரமைக்கப்பட்டுள்ளது)
- சின்னப்பு ஐயர் கதிர்காமசாமி கோயில் கேணி
- சிவகாமி அம்மன் கேணி
- வண்ணாங்குளம்
- தச்சகுளம்
- ஆயிலி கேணி (புனரமைக்கப்பட்டுள்ளது)
- மணற்காடு முத்துமாரி அம்மன் கேணி
- புளியங்குளம் பிள்ளையார் கோயில் கேணி
- வாரி வளை பிள்ளையார் கேணி
- கருங்காலி முருகமூர்த்தி கேணி
- பலகாடு நாரணி கேணி
- பலகாடு நாச்சிமார் கோயில் கேணி
- முல்லைப்பிலவு ஞானியார் கோயில் கேணி
- கோவளம் நாராணி கேணி
- நட்டுப்பாளிக் கேணி
- பாலாவோடை அம்மன் கேணி
- திக்கரை முருகமூர்த்தி கோவில் கேணி
- பிட்டிஎல்லை பூசணிக்குண்டடிக்குளம்
- கருங்காலி வேரக்குளம்
- வாரிவளை பால்குத்தி மடம் கேணி
- மடத்துக்கரை அம்மன் கோயில் கேணி
- கிளுவனைக்கேணி
- கிளுவனைக் குளம்
- பஸ் டிப்போ வயலடி புதுக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வலந்தலை மதவடி புதுக்குளம்
- நாயன்மார் கோவில் சின்னக்கேணி மருதபுரம்
- கைலாசகேணி மருதபுரம்
- பத்தர் கேணி– மணற்காடு
- எண்ணாங்கப்பிட்டிக் கேணி
- சாம்பலோடைக் குளம்
- கோவளம் வெட்டுக்காடு கேணி
- ஆலடி பண்டாரி மேன் கேணி
- ஈழத்துச்சிதம்பர எல்லைமானப்பந்தல்–பின்பறம் கந்தர் கேணி (புனரமைக்கப்பட்டுள்ளது)
- கல்வந்தாழ்வு முருகன் கோவில் கேணி
- மாவிட்டை கேணி
- வாரிவளவு பிள்ளையார் கோவிலின் முன்புறமுள்ள கேணி
- மாவட்டை தம்பிரான் கோவில் கேணி
- பெரிய மதவடி தணக்கம் பிட்டிக் கேணி
- சக்கலாவோடை குளம்
- பயிரிக்கூடல் முருகன் கோவில் கேணி (மழவராயர் கேணி)
- காரைப்புரியல் பத்திவிநாசிகேணி
- முல்லைப்பிளவு நாச்சிமார் கோவில் கேணி
- வியாவில் ஐயனார் கேணி
- மூடுசாந்து கிணற்றடி நாராணிகேணி
- கள்ளித்தெரு — கந்தர் கேணி
- மெலிஞ்சி ஓடைக்கேணி– கோவளம்
- புளியங்குளம் – செட்டிவிநாயகர் குளம் – பண்டித்தாழ்வு
- ஊதிராப்பிட்டி கேணி — சத்திரந்தை மேற்கு பிலத்தரை
- கலட்டி குளம் – சத்திரந்தை கிழக்கு பிலத்தரை
- மானாக்கை கேணி துறைமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரிலுள்ள நன்னீர்க் கிணறுகள்

- துறைமுகத்தடி வயல் கிணறு - தம்பன் கிணறு
- விளானை தாமோதரி பொன்னர் இராமனாதி கிணறு
- விளானை கையிரர் கிணறு
- கோம்பாவோடை சபா கிணறு
- கிளுவனை கிணறு
- சுப்பிரமணியம் வீதி – மணியங்கிணறு
- மல்லிகை கிணறு
- ஆலங்கன்றடி கிணறுகள்
- சிவன்கோவிலடி இரண்டாம் வீதி கிணறு
- அம்மா மடத்தடி கிணறு
- கசூரினா பீச்சடி கிணறு
- கோவளம் மூடு சாந்து கிணறு
- நாகம்மாள் கோவிலடி கிராவத்தை கிணறு
- கருங்காலி முருகமூர்த்தி கோவில் கிணறு
- இலகடி பாடசாலைக் கிணறு
- நாராணி கேணியடி கிணறு
- வியாவில் கிணறு
- கணபதீஸ்வரர் நூல் நிலையக் கிணறு – கருங்காலி
- பால்குத்தி மடத்தடி கிணறு
- பத்தர் கேணியடி ராசு கிணறு
- சந்தம் புளியடி முருகன் கோவில் கிணறு
- அத்தாய் சின்னக்கிணறு – மருதபுரம்
- அத்தாய் பெரிய கிணறு – மருதபுரம்
- இ.போ.ச சாலை நன்னீர் கிணறு
- சல்லை கிணறு
- பாற்குத்தி மடத்தடி கிணறு வாரியந்தனை
- பயிரிக்கூடல் பாதிரி கிணறு
- புலவன் தோட்டக்கிணறு – வேரக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. நடராசா பாரதி
காரைநகர்

# காரைநகர் அபிவிருத்திச் சபை ஒரு நோக்கு

காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காகக் காலத்திற்குக்காலம் பல்வேறு பொது அமைப்புக்கள் தோற்றம் பெற்றுக் காரைநகரின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்து வந்தன. எனினும் 1991ல் ஏற்பட்ட பாரிய இடம் பெயர்வினால் அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக இடைநிறுத்தப்பட்டன . 1996ல் மக்கள் மீண்டும் குடியமர்ந்தபின் காரைநகரின் அபிவிருத்திகளை முனனெடுப்பதற்கான செயற்பாடுகள் மிகவும் மந்தகதியிலேயே காணப்பட்டன. காரை அபிவிருத்திச் சபை, தமிழ் வளர்ச்சிக் கழகம், வாரிவளவு நல்லியக்க சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் இடம்பெயர்வுக்கு முன் இருந்த போதிலும் அவற்றின் செயற்பாடுகள் மக்கள் மீளக்குடியேறிய போதிலும் ஆரம்பிக்கப்படாத நிலை காணப்பட்டது. இதனால் புலம்பெயர் உறவுகளும் எமது ஊரில் வசிப்பவர்களும் காரைநகரின் அபிவிருத்தியில் பங்கெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் இன்றிக் காணப்பட்டனர்.

காரைநகரின் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு காரைநகரில் இருந்து புலம் பெயர்ந்து எந்த நாட்டில் எமது ஊரவர்கள் வசிக்கின்றார்களோ அங்கெல்லாம் எமது மண்ணின் பெயரால் மன்றங்கள் அமைத்து நாம் வாழும் நாட்டினதும் எமது ஊரினதும் முன்னேற்றத்திற்கு வழிகளமைத்தனர். அந்த வகையில் லண்டனில் பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கம் கனடாவில் கனடா காரை கலாசார மன்றம் பிரான்சில் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம், அவுஸ்திரேலியாவில் அவுஸ்திரேலியா காரை நலன்புரிச் சங்கம் என அமைப்புக்களை உருவாக்கி பணி செய்த போதிலும் காரைநகரில் அவ்வாறானதொரு அமைப்பு இல்லாதமையால் அவர்கள் தமது பணிகளை காரைநகரில் முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இதனைக் கருத்தில் கொண்டு சுவிற்சலாந்துக் காரை உறவுகளின் முயற்சியால் 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி காரைநகர் அபிவிருத்திச் சபை தோற்றுவிக்கப்பட்டது.

அன்றைய தினம் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தின் நடராஜா மண்டபத்தில் பாடசாலை அதிபர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையில் காரைநகர் மக்கள் ஒன்றுகூடி காரைநகர் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்ததுடன் காரைநகர் அபிவிருத்திக்கான ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். அதன் அடிப்படையிலேயே காரைநகர் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக காரைநகர் பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய திரு.வே.குமாரசுவாமி அவர்கள் தெரிவு செய்யப்படதுடன் செயலாளராக அமரர் திரு .ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களும் உபதலைவராக அன்றைய யாழ்ற்றன் கல்லூரி அதிபர் திரு.பரமசிவம் அவர்களும் உபசெயலாளராக திரு S. இராசநாயகம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவாகினர். இந்த அபிவிருத்திச் சபை ஏனைய நாட்டுச் சங்கங்களுக்கெல்லாம் தாய்ச்சங்கமாகச் சிறப்புடன் காரைநகரின் அபிவிருத்திப் பணிகளில் தனது காத்திரமான பங்கினை வகித்தது.

சபை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் அதன் செயலாளராகப் பணியாற்றிய அமரர் திரு.ஜெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பலவாணர் அவர்கள் அமரத்துவம் அடையும் வரை (13.03.2008) சிறப்பான சேவைகளை ஆற்றினார். தொடர்ந்து சபையின் செயலாளர்களாக Dr.S.நடராஜா, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை திரு.S. இராசநாயகம் போன்றோர் பணியாற்றியதுடன் தலைவராகப் பணியாற்றிய திரு.வே.குமாரசுவாமி அவர்கள் பதவியை இராஜினாமா செய்ததும் உப தலைவராக இருந்த திரு.பரமசிவம் அவர்கள் தலைவராகச் சிலகாலம் பதவி வகித்தார்.

எனினும் மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்துக் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் 2010ம் ஆண்டு செப்ரெம்பர் 19ம் திகதி பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபையிடம் நிர்வாகம் கையளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சபையின் தலைவராக மகாராணி க. சோமசேகரம் அவர்களும் செயலாளராக திரு. இ.ஜெயராசா அவர்களும் பொருளாளராக திரு. ப.சற்குணராசா அவர்களும் உப தலைவராக திரு. மு.லட்சுமணன் அவர்களும் உப செயலாளராக திரு. ந. பாலகிருஸ்ணன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிர்வாக சபையினர் தமது இரண்டு வருட பதவிக்காலத்தில் புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புக்களையும் ஒன்றிணைத்து அவற்றின் மூலமாகக் காரைநகருக்குச் சிறந்த சேவைகளை ஆற்றினர்.

தொடர்ந்து 06.01.2013 இல் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன்படி தற்போதைய தலைவராக திரு. சிவா.தி.மகேசன் அவர்களும் செயலாளராக திரு. திருப்புகழூர்சிங்கம் அவர்களும் பொருளாளராக திரு. ந.பாரதி அவர்களும் உபதலைவராக யாழ்ற்றன் கல்லூரி அதிபர் திரு. வே.முருகமூர்த்தி அவர்களும் உபசெயலாளராக திரு.வே சபாலிங்கம் அவர்களும் கடமையாற்றுவதுடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் திறம்படச் செயற்பட்டு வருகின்றனர்.

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளில் சில:-

பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கத்தின் உதவியுடன் இரு குடிநீர் தாங்கிகள் (பவுசர்கள்) பெற்றுச் சுன்னாகத்திலிருந்து குடிநீர் எடுத்து வரப்பட்டு மக்களுக்குச் தொடர்ச்சியாக விநியோகித்தல்.


- காரைநகர் சுப்பிரமணிய வீதி விவசாய வாய்க்கால்களை செப்பனிட்டு மதகுகளைப் புனரமைத்தமை (உதவி- பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கம்)
- மாணவர்களுக்குக் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுத்தமை (உதவி காரை கலாசார மன்றம், அவுஸ்திரேலியா நலன்புரிச்சங்கம்)
- காரைநகர் பிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்தம் வேதனம் வழங்கல்.
- வருடந்தோறும் கண்நோயாளிகளுக்கு கண் சிகிச்சை (Catarat operation)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர்ப்பாடசாலைகள்

- யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
- யா/யாழ்ற்ரன் கல்லூரி
  யா/யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்டபிரிவு – தங்கோடை அ.மி.த.க.வித்தியாலயம்
- யா/வியாவில் சைவ வித்தியாலயம்
- யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
  யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் கனிஷ்டபிரிவு – ஆலடி
- யா/சுப்பிரமணிய வித்தியாசாலை
- யா/பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
- யா/வலந்தலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
- யா/வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
- யா/காரை மெய்கண்டான் வித்தியாலயம்
- யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
- யா/தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயம்
- யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
- யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்
- யா/இலகடி சைவத் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
- யா/வலந்தலை கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம் இரண்டு மூடப்பட்டு உள்ளன.

(மேலுள்ள பதின்மூன்று (13) பாடசாலைகள் மட்டும் இயங்குகின்றன.01.01.2011 முதல் காரைநகர் கல்விக்கோட்டம் தனியாக ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரட்டைத்திருக்கல்



ஒற்றைத்திருக்கல்



கலப்பை



அரிவாள்



உழவாரம்



கொக்கைச்சத்தகம்



காம்புச்சத்தகம்



கோடரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரல்.உலக்கை



அம்மி



ஆட்டுக்கல், திரிகை



பித்தளையான குத்துவிளக்கு



குடம்



மூக்குப்பேணி




பித்தளைத் தட்டம்



பாக்கு வெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூக்கு சட்டி



தட்டுவம்




நிறைகுடம்




கறித்தூக்குச் சட்டி




ஜாடி



குத்துக்கால் செம்பு



கொத்து



விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்:01 உதவி அரசாங்க அதிபர் பணிமனை

07.04.2003 இல் உருவாக்கப்படல்



படம்:03 காரைச் செடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்:03 வேணன் அணை




படம்:04 ஈழத்து சிதம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச செயலக புதிய கட்டடத் திறப்புவிழா 2013.09.18




பிரதேச செயலக புதிய கட்டடத் திறப்புவிழா 2013.09.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Eeswaa Digital Press
Tel: 021 222 0233

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org